R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road, London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential, Commercial Conveyancing,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly

# புதினம்

PUTHINAM மலர் 20 இதழ் 9
OCTOBER 2016

LINGA & CO
LEGAL ADVISORS AND IMMIGRATION SPECIALISTS

V.P.Lingajothy
LLB (Hons), MSc, Dip Fms, Acilex
Principal, Immigration Specialist
46 HIGH STREET COLLIERS WOOD
LONDON SW19 2BY
TEL: (020) 8544 9285 FAX: (020) 8542 9530
EMAIL: LJLEGALADVISORS@YAHOO.CO.UK

MITHUS JEWELLERS
லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகைமாளிகை
நியாயமான விலை, உறுதியான வேலைப்பாடு
பழைய நகைகளுக்கு அதிக விலை அல்லது புதிய நகை
322 LONDON ROAD, CROYDON CRO 2TJ 020 8683 1756



THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# ரிஷி மூலம்

'ஒரு பிரச்சினையின் அடிப்படை என்னவென்று தெரிந்து கொள்ளக்கூடாது. அதன் ஆழத்தை நோண்டிப் பார்க்கக்கூடாது. கண்ணை மூடிக் கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும்'.

இதைத்தான், ரிஷியின் மூலத்தை அறிந்துகொள்ள முயல்பவர்களுக்கு மீட்பர்கள் சொல்லும் ஜனநாயக (?) விளக்கம்.

கண்ணை மூடிக்-கொண்டதால், உலகமே இருண்டு விட்டதென நினைக்கும் பூனைகள் போல் மனிதர்கள் வாழ முடியாது.

இப்படியான கவலைதரும் போக்குகள் அண்மைக்காலமாக நம் சமூகத்தில் வெளிப்படுகிறது.

ஐ.நா. சபையில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வருவது, 'இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்திற்கா? அல்லது தமிழ் இனப்படுகொலையை உலகிற்கு வெளிச்சம் போட்டுக்காட்டவா?' என்று கேள்வி எழுப்பினால், அமெரிக்க நோக்கத்தின் ரிஷி மூலத்தை ஆராயாமல் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார்கள் சிலர்.

'கட்டாயம் இந்த வருடத்துக்குள் தீர்வு வரும்' என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சொன்னவுடன், 'அது எப்படி வரும், எந்த வடிவில் வரும்' என்று யாரும் சந்தேகப்படக் கூடாது.

அவ்வாறு தீர்வு ஒன்றும் வராவிட்டால், ஏன் தீர்வு வரவில்லை என்று கேள்வி கேட்கக்கூடாது.

'நம்பிக்கைதான் வாழ்க்கை' என்பதன் அடிப்படையில், அந்த ரிஷி மூலத்தை, கனத்த மனதோடு கடந்து செல்ல வேண்டும்.

இப்போது (எதிர்க்கட்சி) தலைவர்கள் சொல்லும் வாக்குறுதிகளை, நான்கு வருடம் கழித்து தேர்தல் வரும்போது நினைவூட்டக் கூடாது.

அது மட்டுமா... இன்னும் சில மாதங்களில் 'ஐ.நா.கடை' மூடப்படும்போது, சர்வதேச விசாரணை முடிந்து விட்டதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

'அதில் எங்கே தவறு நடந்தது?' என்பதன் ரிஷிமூலத்தை ஆராயக் கூடாது.

இனி சிங்கள இராணுவத்தை எவர் புகழ்ந்தாலும், பேசாமல் 'உம்' என்று இருக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

'அந்த' ரிஷியின் மூலத்தை யாரும் கிளறிப் பார்க்கக் கூடாது.

எட்டிப்பார்த்தால் கண்ணில்படும் தூரத்தில்தான் அந்த மூலம் இருக்கிறது!

இழப்பின் வலி புரிந்த மக்களுக்கு இவை புலப்படும்.

KULENDRAN IMMIGRATION LAW CHAMBERS
90 High street, Colliers Wood, London, SW19 2BT
Tel: 020 85428222
020 86824494
020 8286 7537 (Appointments)
020 8767 5156 (Evenings only)
We are teamed with Barristers & Solicitors to advice & assist our clients
- Immigration & Asylum
- Entry Clearance- EEA Applications
- Appeals (Appearance & Assistance)
- Bail hearings & European Court
- Police Station Attendance
- Criminal Law
- Benefits Appeals
(All other aspects of Legal matters)
merton member
Recommened By The Merton Chambers Of Commerce
Mr.Pires on 079 8533 9948 for Criminal matters Police Station & Traffic offences (24Hrs) Translation & Interpreting Services

செல்வராஜா கோல்டு ஹவுஸ்
கோடைக்கால மலிவு விற்பனை
புடவைகள் அனைத்தும்
BUY 1 GET 1 FREE
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795


புதினம் 20 வது ஆண்டு விழா
PUTHINAM
29.10.2016 சனிக்கிழமை
மாலை 5.00 மணிக்கு

LycaFly
call us 24X7
0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
PLUS FREE LYCAMOBILE TOP-UP


தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

29.10.2016
சனிக்கிழமை

மாலை
5.00
மணிக்கு




020 8767 8004
077 3534 6890

editor@londonputhinam.co.uk
38, Moffat Road,
London SW17 7EZ

இனிய வாசகப் பெருமக்களே!

# அன்புடன் அழைக்கிறோம்

# புதினம் 20

PUTHINAM

வது ஆண்டு விழா

**Richard Challoner,**
**Manor Drive North, Newmalden, Surrey KT3 5PET**

**புதினம் 20 ஆண்டு பயணம்**

**பல்துறை விற்பன்னர்களின் கருத்துரைகள்**

**வாழ்த்துக்கள் பலநூறு**

'புதினம்'
வெளியீடுகள்
3

சிவ தியாகராஜாவின்
**'புனிதயாத்திரை'**
ஈழத்தமிழரின் சமகால வரலாற்று நவீனம்

வவுனியூர் இரா. உதயணனின்
**'வன்னிவலிகள்'**
ஈழத்தமிழர் அவலங்களின்
உண்மை சிறுகதைகள்

**'புதினம்' இருபது இளமை**

## 'நாட்டியாலயாவின்' பரத சங்கமம்

(ராகினி ராஜகோபால், ஷர்மினி கண்ணன் வழங்கும் பரதநாட்டிய நிகழ்ச்சிகள்)

**'புதினம்' வழங்கும் கௌரவம்**

உங்கள் நேசிப்பின் நெருக்கத்தில் 'புதினம்' தனது 20வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது. இவ்விழாவில் நீங்கள் கலந்து, சில பொழுதாவது மகிழ்ந்திருப்பது 'புதினம்' இதழுக்குப் பெருமை. அதனால்தான் உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

பணிவன்புடன்,
**ஈ.கே. ராஜகோபால்**
(ஆசிரியர், 'புதினம்')

பனங்காட்டான்

# ஏமாறும் நாளை எதிர்பார்த்திருக்கும் தமிழரசுக் கட்சியின் தர்மகர்த்தாக்கள்

ஈழத்தமிழரின் முதலாவது பொங்கு தமிழ்ப் பேரணி 2001 ஜனவரி மாதம் 17ம் திகதி யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தால் முன்னெடுக்கப்பட்டு வெற்றி கொண்டது.

அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கமும் அதன் படைத்தரப்பும் இந்நிகழ்வைத் தடுப்பதற்கு பல முனைகளில் முன்னெடுப்புகளை மேற்கொண்டும் மக்கள் எழுச்சியின் முன்னால் அது தோல்வி கண்டது.

இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சி கொண்ட மக்களை எந்தவொரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது என்ற முழக்கத்துடன் முதலாவது பொங்கு தமிழ் பேரணி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நிகழ்ந்தேறியது.

அதனைத் தொடர்ந்து 2006ம் ஆண்டுவரை தமிழீழத்தின் சகல மாவட்டங்களிலும் மற்றும் தமிழர் பரந்து வாழும் புகலிட நாடுகளிலும் பொங்கு தமிழ் எழுச்சி பெற்றது.

2003ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட திறந்தவெளியில் இடம்பெற்ற நிகழ்வில் ஒன்றரை இலட்சம் மக்களும், 2004ல் கனடாவின் ஒன்ராறியோ மாகாண அரச கட்டிடத்தின் முன்னால் இடம்பெற்ற நிகழ்வில் 75,000 மக்கள் திரண்டிருந்ததாகவும் ஊடகங்கள் குறிப்பிட்டன.

2005 மார்ச் மாதம் பொங்கு தமிழ் பேரணி தமிழீழத் தலைநகரான திருமலையில் பேரெழுச்சியுடன் நடத்தப்பட்டு பிரகடனமும் நிறைவேற்றப்பட்டது.

இதன் ஏற்பாட்டாளராக விளங்கியவரான கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் விண்ணதிரும் உரையை இங்கு நிகழ்த்தியதோடு நிற்காது, நாடாளுமன்றத்திலும் இதனைக் குறிப்பிட்டு பதிவு செய்தார்.

*"We the Tamil People held a Pongu Thamil (Upsurge) rallies in Vavuniya, Batticaloa and Tricomalee and shall continue to do in other districts of the Northeast province to demonstrate out support...."*

(தமிழர்களாகிய நாம் பொங்கு தமிழ் பேரணியை வவுனியா, மட்டக்களப்பு, திருமலை ஆகிய இடங்களில் நடத்தியுள்ளோம். எமது ஆதரவை வெளிக்காட்டுவதற்கு வடகிழக்கின் மற்றைய மாவட்டங்களிலும் இதனைத் தொடருவோம்...)

2005ல் இப்படியாகக் கூறிய சம்பந்தனுக்கும் அவரது தமிழரசுக் கட்சிக்கும் இப்போது என்ன நடந்தது? 2005ல் விடுதலைப் புலிகளின் நிர்வாகம் தமிழீழத்தில் மேலோங்கியிருந்தது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டுமா?

> **ஏற்கனவே அறுபது வருடங்களாக எத்தனையோ தடவைகள் நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம். இன்னொரு தடவை ஏமாற்றப்பட்டால் பரவாயில்லை என்று தமிழரசுக் கட்சியின் குரலான எம்.ஏ. சுமந்திரன் கூறியிருப்பதை யாரிடம் சொல்லி அழுவது?**

கடந்த வருடப் பொதுத் தேர்தலில் அதே சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபன கோரிக்கையை வலியுறுத்தி தமிழ் மக்கள் பேரவை மற்றைய பொது அமைப்புகளையும் இணைத்து எழுக தமிழ் நிகழ்வை இப்போது ஏற்பாடு செய்துள்ளது.

இந்த மாதம் 24ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளியில் பெருநிகழ்வாக இப்பேரணி இடம்பெற்றது.

2009ல் வன்னியில் தமிழர் தலைமையின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட இவ்வெழுச்சிப் பேரணிக்கு நாளொரு வண்ணமும் ஆதரவு பெருகியது.

இதனை எப்படி முடக்கலாம் என்பதில் இராணுவத்தரப்பு மூளையைப் போட்டுக் குழப்பி வந்தது. இதனைத் தடைசெய்தால் நல்லெண்ணம் - நல்லாட்சி என்பது தோற்றத்தில் பொய்த்துவிடுமென நினைத்து அரசாங்கம் செய்வதறியாது திணறியது.



அதேசமயம், நியூயார்க்கில் ஐ.நா.வின் பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றச் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இங்கு மேற்கொண்ட சந்திப்புகளையும் நிகழ்த்திய உரைகளையும் பார்க்கையில், மறைமுகமாக எழுக தமிழ் எழுச்சியை தடுக்கி விழுத்தும் நோக்கிலானது என்பது தெரிந்தது.

இருபது மாதத்தில் இலங்கை பற்றிய நல்லபிப்பிராயத்தை உலக அரங்கில் ஏற்படுத்தியுள்ளோம். இப்போது எந்தவொரு நாடும் எம்மைப் பகை உணர்வுடனும் வெறுப்புடனும் பார்ப்பதில்லை என்று இவர் மார்பு தட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைமையிலிருக்கும் இரா.சம்பந்தனும் அவரது மூலக்கூறான தமிழரசு கட்சியும் கண்களை மூடிக் கொண்டு மைத்திரி அரசை ஆதரித்து வருவதும், எதிர்க்கட்சிக்குரிய செயற்பாடுகளைத் தவிர்த்து அரசின் பங்காளராக இயங்கி வருவதுமே இதற்கு முக்கிய காரணம்.

சோரம் போகும் தமிழரசுக் கட்சியின் அரசியல்



போக்கு, மைத்திரி அணிக்கு நற்பெயரைப் பெற்றுக் கொடுத்து உச்சத்துக்கு உயர்த்திச் செல்கிறது.

இலங்கையின் ஆக்கபூர்வமான மாற்றங்கள் நல்லதொரு முன்மாதிரி. இதன் எதிர்காலப் பயணத்துக்கு அமெரிக்கா சகல உதவிகளையும் வழங்கும் என்று கூறியுள்ளார் இன்னும் சில மாதங்களில் வீடு செல்லவுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா.

போதாக்குறைக்கு ஐ.நா. செயலாளர் பான் கி மூனும் தமது பாராட்டை ஒத்துதல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியைச் சந்தித்த மைத்திரிபால சிறிசேன, பல ஏக்கர் காணிகளை அதன் சொந்தக்காரரிடம் இராணுவம் மீளளித்துள்ள போதிலும், அதன் உரிமைக்கார மக்கள் அங்கு குடியேற விரும்பவில்லை என்று பச்சைப்பொய் கூறியுள்ளார்.

இதற்குக்கூட தங்கள் மறுப்பையோ கண்டனத்தையோ தெரிவிக்காது, கள்ள மௌனம் சாதித்து வருகின்றனர் சம்பந்தன் அன்ட் கம்பனியினர்.

இந்தப் பின்னணியில் நின்று எழுக தமிழ் பேரணியை இவர்களது சொந்த வீடான தமிழரசுக் கட்சி நிராகரிப்பதைக் கவனிக்க வேண்டியுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது வன்னித் தலைமையால் உருவாக்கப்பட்டது. இரா.சம்பந்தன் திருமலையில் தோல்வி கண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக அப்போது இருந்தார்.

ஆனாலும் இவரது கட்சியினரையும், தமிழ் காங்கிரசையும் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகியவற்றையும் இணைத்து, அவர்களின் எண்ணிக்கைக்குச்

**தொடர்ச்சி 27ம் பக்கம்**

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே–அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 20 ஆண்டுகளாக வெளிவரும் இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான 25 பவுண்களை மட்டும் Puthinam என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.



லண்டனில் பரதநாட்டிய புதிய வகுப்புகள்

விஜயதசமி 11.10.2016
4 வயதிலிருந்து புதிய மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர்

'நாட்டியாலயா' நடன ஆசிரியைகள்
ராகினி ராஜகோபால்
ஷர்மினி கண்ணன்

Tooting, Mitcham, Newmalden, Croydon, Wallington போன்ற பகுதிகளிலுள்ளவர்களுக்கு வசதி.

தொடர்புகளுக்கு:
0790 4069 369
0790 4069 370



அச்சகத் தொழில் செய்வோர்,
பத்திரிகை நடாத்துபவர்கள்,
புத்தகங்கள் வெளியிடுவோர்,
மாதாந்திர சஞ்சிகை
நடாத்துபவர்களுக்காக....

புத்தக வடிவமைப்பு, டி.டி.பி.,
திருமண அழைப்பிதழ்கள், சிறப்பு மலர்கள், உங்கள் வீட்டு விஷேச நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள் என சிறந்த வேலைகளை இந்தியாவிலிருந்து வழங்குகிறோம்

Call: 9551395516
www.satyanlayout.com



Looking for an
ACCOUNTANT ?
We are next to you!
We provide solutions for your Accountancy needs



உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார
ACCOUNTANCY
தேவைகளுக்கு
LONDON இல்
இயங்கும் தனித்துவமான ஸ்தாபனம்

Initial consultation is free
No fee for first three months

P & K ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER

183. Burnt Oak Broadway,
Edgware. Middlesex.
HA8 5EH

020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)

www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com


# பௌத்த மயமாகும் தமிழர் தாயகம்

ஜெனீவாவிலுள்ள ஐ நா மனித உரிமை கழகத்தின் 33வது கூட்டத் தொடரில் கலந்து கொண்ட உறுப்பு நாடுகள் மற்றும் சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் மத்தியில் பிரித்தானிய தமிழர் பேரவை சமர்ப்பித்த ஆவணங்கள் சிறிலங்காவின் முன்னைய அரசு மற்றும் இன்றைய "நல்லாட்சி" அரசின் நிலப் பறிப்பு நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியுள்ளது.

நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கழக (UNHRC) கூட்டத் தொடரில் இலங்கையில் தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ மயமாக்கல் மற்றும் நில அபகரிப்பு தொடர்பாக நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. பிரித்தானிய தமிழர் பேரவை (BTF), பசுமை தாயகம் மற்றும் அமெரிக்காவினை தளமாகக் கொண்டியங்கும் USTPAC இணைந்து இந் நிகழ்வினை ஒழுங்கு செய்திருந்தனர்.

தமிழர் பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படும் பௌத்த விகாரைகள் மற்றும் சிறிலங்கா படையினர் நடாத்தும் தொழில் முயற்சிகள் தொடர்பான விரிவான தகவல்கள் அடங்கிய புத்தக பிரதி கடந்த வாரம் நடைபெற்ற 33 வது மனித உரிமை மாநாட்டில் அனைத்து நாட்டு பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டிருந்தது.

மேலும் நில அபகரிப்பு தொடர்பில் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து புகைப்பட ஆதாரங்கள் மூலமாக சர்வதேச நாட்டு பிரதிநிதிகளுக்கு மேற்படி "பக்க" நிகழ்வில் (Parallel event) விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது. 8 மாதங்களாக நடாத்திய ஆய்வின் அடிப்படையில் இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்ட தமிழர் தாயகத்தின் மூலை முடுக்கெல்லாம் சத்தமில்லாமல் கட்டியெழுப்பட்டு வந்த சிறிய பெரிய பௌத்த கட்டுமானங்கள் மற்றும் இராணுவம் நடாத்தும் பொருளாதார நிறுவனங்கள் குறித்த ஆதாரபூர்வமான புகைப்படங்கள் மற்றும் தரவுகள் பார்ப்பவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந் நிகழ்வில் முக்கிய அதிதிகளாக உலகளாவிய ரீதியில் நில ஆக்கிரமிப்பு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வரும் ஒக்லாண்ட் நிறுவனத்தின் அனுராதா மிட்டல் (Executive Director, The Oakland Institute, USA), வெஸ் ஸ்ட்ரீட்டிங் (Member of Parliament, Vice Chair of All Party Parliamentary Group for Tamils) மற்றும் போல் ஸ்கல்லி (Member of Parliament, Vice Chair of All Party Parliamentary Group for Tamils) போன்றோர் இணைந்து இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இராணுவ மயமாக்கல் மற்றும் நில அபகரிப்பு தொடர்பில் தமது கருத்துக்களை பதிவு செய்திருந்தனர்.

இலங்கையில் தமிழர் பகுதியில் மிக வேகமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நில அபகரிப்பு மற்றும் இராணுவ மயமாக்கலுக்கு எதிராக பல தொடர்ச்சியான காத்திரமான செயற்பாடுகளை பிரித்தானிய தமிழர் பேரவை கடந்த பல வருடங்களாக மேற்கொண்டு வருகின்றது. கடந்த 2014 ம் ஆண்டு லண்டனில் புல நாட்டு பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், வெவ்வேறு நாட்டின் தலைசிறந்த அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் எனப் பலரை உள்ளடக்கி, இலங்கையில் நடைபெறும் நில அபகரிப்பு மற்றும் அது தொடர்பான இலங்கை அரசின் தொடர்ச்சியான நடவடிக்கைகளை வெளிக்கொணரும் முகமாக சர்வதேச மாநாடு ஒன்று ஒழுங்கு செய்திருந்தனர். இதன் காரணமாக கடந்த கால அரசாங்கம் பல முனைகளில் இருந்து பல அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது.

சர்வதேச அழுத்தம் காரணமாக இலங்கை அரசு தான் ஆக்கிரமித்த சொற்ப அளவான நிலப் பகுதியினை விடுவித்து சர்வதேச நாடுகளை ஏமாற்றும் செயற்படுகளை மேற்கொண்டது. எனினும் பிரித்தானிய தமிழர் பேரவை இவ் வருட மார்ச் மாதத்தில் அபகரிக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட நிலம் தொடர்பில் தான் திரட்டிய விரிவான புள்ளி விவரங்கள் கொண்ட அறிக்கை ஒன்றினை தயாரித்து சர்வதேச நாடுகளிடம் சமர்ப்பித்திருந்தது. குறிப்பாக வட மாகாணத்தில் அபகரிக்கப்பட்ட 70,000 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 2,500 ஏக்கர் நிலப்பகுதி மட்டுமே விடுக்கப்பட்டிருந்தமை அம்பலப்படுத்தப்பட்டது.






# விமலின் பக்கம்



ஸ்ரீயும் பாவனாவும் என் கல்லூரிக் கால நண்பர்கள். என் வயதொத்தவர்கள். குழந்தைச் செல்வங்கள் இரண்டு. மூத்தவள் கல்பனா - இரண்டு வருடங்களுக்கு முன் திருமணம் செய்து இப்போது கணவர் குடும்பத்துடன் வேல்ஸ் பகுதியில் வாழ்கிறாள்.

இளையவன் பிரபாகர் - கடந்த வருடம்தான் அவனுக்குத் திருமணம் நடைபெற்றது. பெற்றோரின் செல்லக்குட்டியான பிரபாகர் தன் இளம் மனைவி மோகனாவுடன் பெற்றோரின் 4 பெட்ரூம் வீட்டிலேயே தங்கியிருந்தான். கடந்த வாரம் ஒரு நாள் மாலை ஸ்ரீ - பாவனா தம்பதிகளைச் சந்திக்க அவர்களின் வீட்டுக்குப் போயிருந்தேன்.

"வாருங்கள் விமலண்ணா, ஸ்ரீ வெளியே போயிருக்கிறார் - வரும் நேரமாகிவிட்டது. உங்களுக்குப் பிடித்தமான யாழ்ப்பாணக் கோப்பி கொண்டு வருகிறேன், உட்காருங்கள்' என்று சொல்லி விட்டு கோப்பி போட ஆரம்பித்தாள் பாவனா.

'கல்பனாவும் கணவரும் எப்படி இருக்கிறார்கள்?' கிச்சன் வாசலில் நின்றபடியே கேட்டேன்.

'ஐயோ விமலண்ணா, என்ர குஞ்சு கல்பனா சரியான சந்தோஷமாய் இருக்கிறாள் - அவளின்ரை மாப்பிள்ளை தங்கமான பெடியன் -அவளுக்கெண்டு ஒரு 'லெக்செஸ்' கார் வாங்கிக் கொடுத்திருக்கிறானாம் - அடிக்கடி எங்களுக்குப் Phone பண்ணுவா! ஆட்டமும் பாட்டமுமாய் பொழுது கழியுதாம். நகை வேணும் எண்டு கல்பனா விரும்பின உடனை நகையாம் - வீட்டு வேலைக்கு எடுபிடி ஆட்கள் கனக்கவாம் - அவள் காலமை எழும்பப் பிந்தி விட்டால், பெட்ரூமுக்கே காலை ஆகாரமும் கோப்பியும் வந்து விடுமாம் - உப்பிடி ஒரு மாப்பிள்ளையையும் சம்பந்திகளையும் நாங்கள் பெற, ஸ்ரீயும் நானும் போன பிறப்பில ஏதோ தவம் செய்திருக்கிறம் விமலண்ணா!'

ஒரே மூச்சில் பேசி முடித்தாள் என் நண்பனின் மனைவி கல்பனா.

'அது சரி பாவனா, உங்கள் சின்னவன் பிரபாகர் எப்படி இருக்கிறான்?' என்று நான் கேட்டதும் பாவனாவின் லட்சுமிகரமான முகம் பத்திரகாளி போல் மாற ஆரம்பித்தது.

'விமலண்ணா, எங்கடை பிரபாகரை நாங்கள் எவ்வளவு செல்லமாய் வளர்த்தனாங்கள் எண்டு உங்களுக்குத் தெரியுந்தானே? எந்த நேரத்தில் இந்த மோகனாவை அவனுக்குக் கட்டி வைச்சமோ தெரியாது. பாவம் பெடியன் கஷ்டப்படுகுது அவள் மோகனா இல்லை, அவள் மோகினிப் பேய்!!'

இடைமறித்தேன் நான்!

'சேச்சே சேச்சே பாவனா... என்ன இப்படிப் பேசிறியள்? மோகனாவும் ஒரு அப்பா அம்மாவின் செல்ல மகள்தானே' என்று கடிந்து என் அதிருப்தியைக் காட்டினேன்.

பாவனா என் கண்டனத்தைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

'அசல் சன் டிவி தொடர் நாடக வில்லி மாமியாரின் மறு அவதாரம்' போல விஷம் கக்கிப் பேசினாள்.

'என்ர பிரபாகர் பெரிய கொம்பனியில அக்கவுண்டன்றாக வேலை செய்கிறான் - கை நிறைய உழைக்கிறான் - ஆனபடியால உழைக்கிற காசையெல்லாம் ஊதாரித்தனமா ஒரு பெண்சாதி செலவளிக்க வேணுமோ? நாளைக்கு பிள்ளை குட்டி என்று பிறந்தால் சேர்த்து வைக்க வேணும் எல்லோ? நீங்களே சொல்லுங்கோ விமலண்ணா?'

'தனக்கொரு புது 'ரொயோற்றா' கார் வாங்கித் தரச் சொல்லி புருஷனைக் கேட்டிருக்கிறாள் - அவன் வேலையாலை வந்த உடன வெம்பிளி நகைக் கடைகளுக்கு ஒரு பயணம் - கொஸ்ரா. ஸ்டார்பக்ஸ் எண்டு சுத்திப்போட்டு வீட்டைவாறது. இதென்ன ஊதாரிப் பழக்கம் - அந்தத் தாய் பழக்கிவிட்டிருக்கிறா போல!'

'சரி, காலையில என்ர பிரபாகர் வேலைக்குப் புறப்பட முதல் நித்திரையாலை எழுப்பி, கோப்பி ஊத்தி, காலை ஆகாரம் செய்து கொடுக்கலாமே... பேய் பிசாசு அலையிற நேரத்தில புருஷனோட மோகினிப் பேயாய் அலைஞ்சுபோட்டு நடுச்சாமம் கழிஞ்ச பிறகு வீட்டை வந்து படுத்தா, எப்படியாம் மகாராணி விடிய எழும்புவா?'

'என்ர பிள்ளை பாவம், காலையிலை கொஞ்சம் கோண் பிளேக்ஸ் சாப்பிட்டிட்டு வேலைக்குப் பறந்திடுவான். இஞ்சை இவ XXXலை வெய்யில் படும் வரை படுத்திருப்பா!'

என் நண்பனின் மனைவி - என் கல்லூரித் தோழி பாவனா; சிறு வயது முதல் என் அன்புக்கும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவராக இருப்பவர்.

கல்லூரியில் என் சக மாணவியாக மண மேடையில் என் நண்பன் ஸ்ரீயின் அழகு மணமகளாக - பின்னர் ஒரு குடும்பப்பெண்ணாக அவள் நடந்து கொண்ட விதம், அவள் பழகும் பாங்கு அனைத்துமே எனக்குப் பிடித்திருந்தன.

என் குடும்ப நண்பர்களில் மிக உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்த பாவனாவா இன்று இப்படிப் பேசுகிறாள்? என்ன நடந்தது அவளுக்கு?

அவள் மாமியார் ஆகிவிட்டாள் - 'மதர்-இன்-லோ' என்பது மிகப் பெரிய பொறுப்பு. அது ஏற்படுத்திய சுமை தாங்கமுடியாமல் அவள் வெடித்து விஷம் கக்க ஆரம்பித்து விட்டாள்.

வேல்ஸ் பகுதியில் வேற்றுக் குடும்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் தனது மகள் கணவனின் செலவில் கார் வாங்கினால், சரி - கணவன் செலவில் நகை வாங்கினால், சரி - காலையில் நீண்ட நேரம் தூங்கினால் பரவாயில்லை.

ஆனால், உங்கள் குடும்பத்தில் உங்களோடு ஒருவராகப் பகிர்ந்து வாழ வேற்றுக் குடும்பத்தில் இருந்து வரும் பெண் - ஒரு 'மோகினிப் பிசாசு!?'



அந்த இளம்பெண்ணை அவளது பெற்றோர் உங்களைப் போல (உங்களை விட அதிகமாக) செல்லம் கொடுத்து அரவணைத்து வளர்த்திருப்பார்கள் - அந்த அரவணைப்பைத் துறந்து மனதில் நம்பிக்கைகளைச் சுமந்து கொண்டு புதியசூழலில் - புதிய குடும்பத்தில் இல்லறம் நடத்த வந்துள்ள அந்த இளம் செல்வியைக் களங்கப்படுத்திப் பேச, வாயால் வசை பாட, சில நேரங்களில் அடித்துத் துன்புறுத்த எந்த ஒரு மாப்பிள்ளைக்கும் உரிமையில்லை. மாப்பிள்ளைக்கே உரிமை இல்லாதபோது மாமியாருக்கு என்ன உரிமை இருக்கிறது?

அதுவும் மேற்குலக நாடுகளில் - பிரிட்டனில், அமெரிக்காவில் இந்த மாமியார் ராட்சசிகளின் கொடுமைகளுக்கு நீதிமன்றங்கள் கடும் தண்டனைகளை விதித்து வருகின்றன.

இங்கிலாந்தின் வட-மேற்கு நகர் ஒன்றில் இரண்டு குழந்தைகள் பெற்ற தன் மனைவியிடமிருந்து ஒரு குழந்தையைப் பறித்து வைத்துக் கொண்டு மற்றக் குழந்தையையும் தாயையும் பாகிஸ்தானுக்கு 3 வருடங்களுக்கு அனுப்பிவைத்தான் ஒரு முஸ்லிம் கணவன். மூன்று வருடங்கள் கழித்து பிரிட்டன் திரும்பிய மனைவி, மாமியாரின் கொடுமைகள் பற்றி பொலிஸில் புகார் செய்தார்.

இதனை அறிந்த கணவன், ஆத்திரம் கொண்டு தன் அம்மாவின் காலில் விழுந்து - காலை முத்தமிட்டு மன்னிப்புக் கேட்கும்படி மனைவிக்கு உத்தரவிட்டான். மனைவியும் முத்தமிட்டாள். மறுபடியும் வழக்கு நீதிமன்றம் சென்றது.

பிள்ளைகள் தாயாரிடம் மட்டுமே இருக்க வேண்டும், பிரிக்கக் கூடாது' என்று நீதிபதி நிபுட்டன் உத்தரவிட்டதோடு, பிள்ளைகளைப் போய்ப் பார்க்கும் உரிமையை மட்டும் கணவனுக்கு வழங்கினார்.

'கயநெஞ்சமும் சகுனிப் புத்தியும் கொண்ட மாமியார், குழந்தைகளைப் பார்க்க வரவே கூடாது' என்று தடாலடி உத்தரவிட்டார்.

இந்திய, சீக்கிய, பாகிஸ்தானிய குடும்பங்களில் மாமியார்களின் அல்லிராணி அடக்கு முறை பற்றி பிரிட்டிஷ் நீதிமன்றங்களும் பிரிட்டிஷ் பொலிசாரும் இப்போது மிக நன்றாகவே அறிந்து வைத்திருக்கிறார்கள்!!

✍ மாத்தளை சோமு

# தமிழ்த் தேசியம் தெரியாதவன் தமிழனே அல்ல!

மொழியின் மூலமாகவும், சரித்திரப்பூர்வமாகவும் பிணைக்கப்பட்டு வாழக்கூடிய மக்களையே இனம் (*NATION; PEOPLE OF COMMON TIES LANGUAGE AND HISTORY BOUND TOGETHER*) என அழைப்பர். அவ்வாறு இருக்கிற ஓர் இனத்தை எந்த இனம்? என்று கேட்கிறபோது, (*ASK ANY MAN, WHAT NATIONALITY?*) சரியான பதிலைச் சொன்னால், எந்த இனம் என்று தெரியவரும்.

லண்டன் ஒரு தேசம். அது நகரமல்ல. (*LONDON A NATION, NOT A CITY - 1870. LOTHIR*) என்று லொதிர் என்ற அறிஞன் சொன்னதற்குக் காரணம், பல்லின மக்களும் ஆங்கிலத்தை முதன்மையாகக் கொண்டு அங்கு வாழ்வதேயாகும். எது எப்படியாயினும் லண்டன் ஒரு தேசமாக முடியாது. கவிதையின் மிகைச்சொல் அலங்காரம் போல் சொல்லப்பட்டதே 'லண்டன் தேசம்' என்பது.

ஒரு தேசம் என்றால் நிலம், மொழி, பண்பாடு, பாரம்பரியம் தனித்துவமாய் இருக்க வேண்டும். இனம் என்பதற்கும் இது பொருந்தும். தனித்துவமான இனத்தைத்தான் தேசிய இனம் என அழைப்பர். தமிழர் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பர்மா மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்தபோதும், தேசிய இனம் என்ற ஒற்றைச் சொல்லுக்குள் அடங்குவர்.

'அந்தத் தமிழரின் மொழி, பண்பாடு, பாரம்பரியம், தனித்துவம்' என்பனவற்றை அடையாளப்படுத்துவதே தமிழ்த்தேசியம். அது எவரையும் அடிமைப்படுத்துவதோ, எதிர்ப்பதோ அல்ல.

இலங்கையில் சிங்களவருக்கு ஒரு தேசியம் உண்டு. அதேபோல் அங்கு வாழும் தமிழர்களுக்கும் தேசியம் உண்டு. தமிழ்த்தேசியம், தமிழரின் தேசியம் என்பவை தமிழ் இனத்தின் இருப்புக்கான அடையாளச்சொற்கள். அவை எந்தப் போராளிக் குழுவுக்கோ, துப்பாக்கிகளுக்கோ உரியதன்று. தேசியம் இல்லாமல் ஓர் இனம் இருக்க முடியாது. அப்படியானால், அடிமைகளாகத்தான் இருக்க முடியும்.

ஐ.நா.-வில் 193 உறுப்பு நாடுகள் இருக்கின்றன. ஆனால், அவற்றில் 193-க்கும் மேற்பட்ட தேசிய இனங்கள் இருக்கின்றன. சொந்தமாக நாடு இருந்தால்தான் ஐ.நா.-வில் உறுப்புரிமை பெற முடியும். ஆனால், தனித்துவமான நாடு இல்லாமலும், தேசிய இனம் இருக்க முடியும். பிரிட்டன், அவுஸ்திரேலியா, நியூசிலேண்ட், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின்



வெள்ளையர்கள் மொழி, பண்பாடு, மதம் ஆகியவற்றில் ஒன்றாக இருந்தாலும், அவர்கள் வெவ்வேறு தேசிய இனங்களாக இருக்கிறார்கள்.

ஒரே மதம், மொழி, பண்பாடு இருந்தபோதும், கத்தார், பஹ்ரைன், சவுதி அரேபியா, அரபு எமிரேட்ஸ், ஓமன், ஈரான், ஈராக், யேமன், மொராக்கோ ஆகிய நாட்டு மக்கள் தனித்தனித் தேசிய இனமாக இருக்கிறார்கள்.

இந்தியாவில் மொழிவாரி மாநிலங்களாகப் பிரிந்து அவற்றுக்குள் தேசிய இனங்கள் வாழ்கின்றன. தமிழகத்தில் ஊழல் கட்சிகளாக இருந்தபோதும், மாநில திராவிடக் கட்சிகளைத்தான் மக்கள் ஆட்சியில் அமர்த்துகிறார்கள். ஆப்பிரிக்காவில் எத்தியோப்பியாவிலிருந்து எரித்திரியாவும், சூடானிலிருந்து தெற்கு சூடானும் பிரிந்திருப்பது மக்களின் தேசியத்தின் அடிப்படையில்தான்.

லெனின், சோவியத் யூனியனில், பல்வேறு இனங்களை இணைத்தபோது, தேசிய இனங்களாக அங்கீகரித்துத்தான் சேர்த்தார். அதனால்தான் பிறகு பல இனங்கள் அங்கு யுத்தம் இல்லாமல் பிரிந்து தனிநாடுகள் கண்டன.

ஆகவே, தேசியம் என்பது ஓர் இனத்தை அடையாளப்படுத்தும் சொல். தமிழ் இனத்துக்கு ஒரு தேசியம் உண்டு. அதுதான் தமிழ்த்தேசியம். அது எந்த இனத்தையும் அச்சுறுத்தவோ, அதிகாரம் செய்யவோ உரியது அல்ல. தன்னைத் தற்காத்துக் கொள்ளவும், தன் அடையாளத்தைக் காக்கவும் மட்டுமே உரியது.

மகாகவி பாரதி, 'முப்பது கோடி முகமுடையாள், செப்பு மொழி பதினெட்டுடையாள் எனின் சிந்தனை ஒன்றுடையாள்' என்று இந்தியாவை ஒருமுகப்படுத்திச் சொல்லிவிட்டு, தான் சார்ந்திருக்கும் தமிழ்த்தேசியத்தின் வெளிப்பாடாக,

'தமிழ்த் திருநாடுதனைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா!'

என்றார். அன்று தமிழர்கள் வாழும் பகுதி தமிழ்நாடு என்று அழைக்கப்படவில்லை. சென்னை மாநிலம் எனத்தான் அழைத்தனர். ஆனால், பாரதி அன்றே தமிழர்கள் வாழும் மாநிலத்தைத் 'தமிழ்நாடு' என அழைத்து அங்கு வாழும் மக்கள் தமிழ்த்தேசிய மக்கள் எனச் சொல்லி விட்டார்.

இதனையெல்லாம் அறியாத சிலர், தமிழ்த்தேசியம் குறித்துத் தவறான கருத்தைக் கக்குகிறார்கள். அதிலும் வேடிக்கை என்னவென்றால், தமிழிலே எழுத வந்த சிலர், தமிழ்த்தேசியம் தெரியாமல் பிதற்றுகிறார்கள்.

எழுத்தாளன் என்றால், தான் சார்ந்த மொழி, இனம், அதன் தேசியம் ஆகியன குறித்த ஆளுமை அறிவு அவனுக்கு இருக்க வேண்டும். அது தெரியாமல் தன்னை ஓர் எழுத்தாளனாகக் காட்ட முனைவது பிற்போக்கானது.

தேசியத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் முற்போக்கானவர்கள். முற்போக்கை முன்வைத்து பொதுவுடைமைச் சித்தாந்தத்தில் இனங்களின் தேசியம், அதன் அடையாளம், மொழி, பண்பாடு முதலியன உறுதி செய்யப்படுகின்றன. பல்வேறு தேசிய இனங்களின் கூட்டமைப்பான சோவியத் யூனியன் என்றார் லெனின். அதிலிருந்து இனங்களின் தேசியத்தை உறுதிப்படுத்துகிறார்.

ஆனால், இங்கு தமிழ்த்தேசியம் என்றதும், முற்போக்கு முகமூடி அணிந்த பலருக்கு காய்ச்சல் வருகிறது. தமிழ்த்தேசியம் ஒன்று இல்லை என்று வரிந்து கட்டுகிறார்கள். ஆகவே, அவர்களைத் தமிழர் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், செம்மொழி கொண்ட மூவேந்தர்களையும் சங்கிலி மன்னனையும், பண்டார வன்னியனையும் கொண்ட தமிழனத்தின் தமிழ்த் தேசியம் அவர்களுக்குத் தெரியவில்லையே!

## ஈழத்து புதினங்களுக்கு இந்தியாவில் புகழாரம் பேராசிரியர் கோபன் மகாதேவாவின் நூல் விமர்சனம்

இம்மாதம் 10ம் திகதியன்று லண்டன் ஆர்ச்வே முருகன் கோவிலில் ஈழத்து சிரேஷ்ட ஆசிரியை இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் 1981-2003 காலத்து தமிழ் நாவல்கள் பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்று வெளியிடப்பட்டு விமர்சிக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி நூலை தென்னிந்திய கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை ஆசிரியை தட்சிணாமூர்த்தி பிரியா அவர்கள் தனது முனைவர் பட்டத்துக்கு ஆய்வு நூலாகச் சமர்ப்பித்து இவ்வாண்டு வெளியிட்டார்.



பிரபல தமிழக ஊடகவியலாளர் மாலன், நடராஜா சச்சிதானந்தன், பிரபல ஈழத்து எழுத்தாளர் ராஜேஸ்வரி.



விழாவில் பங்குகொண்ட முக்கிய பிரமுகர்கள்.

மேற்படி கூட்டம் ஆர்ச்வே கோவிலின் தலைவர் அப்பாத்துரை வைரவமூர்த்தி தலைமையில் நடந்தது. இதை முன்னின்று ஒழுங்கு செய்தவர் ந.சச்சிதானந்தம் ஆவார். பிரபல பாரத ஊடகவியலாளர் மாலன் நாராயணன் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். பேச்சாளர்களாக பேராசிரியர் கோபன் மகாதேவாவின் சிறப்பான, சம்பூரணமான ஆங்கில விமர்சனக் கட்டுரையைப் பின்பற்றி, வைத்தியர் எஸ். நவரத்தினம், பழைய தமிழ் முரசு ஆசிரியர் எஸ்.எம்.சதானந்தன், திரு. அ.சிவபாதசுந்தரம், திருமதி மாதவி சிவலீலன், கலாநிதி மு.நித்தியானந்தன், திரு.பஷீர் முதலியோர் அழைக்கப்பட்டு எல்லோரும் முனைவர் பிரியாவின் ஆராய்ச்சி நூலையும் ஈழத்து ஆசிரியை ராஜேஸ் பாலாவின் நீண்ட பல்வேறுபட்ட தமிழ்த் தொண்டுகளையும் மிகவும் பாராட்டினர். வந்த அறுபது சொச்சம் சபையோரின் கருத்துக்களுடனும் நாவலாசிரியர் ராஜேஸ் குடும்பத்தின் சிற்றுண்டிகளுடனும் கூட்டம் மாலை ஆறு மணியளவில் வெற்றியாக முடிந்தது.



டாக்டர் சி.பிரியா.



பேராசிரியர் கோபன் மகாதேவா

# 'தமிழகத்திலிருந்து' கே.ஜி.மகாதேவா அமரரானர்!

'தமிழகத்திலிருந்து' கே.ஜி.மகாதேவா அமரராகி விட்டார். என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் 'புதினம்' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.


கடந்த பல வருடங்களாக 'புதினம்' இதழுக்கு தொடர்ந்து கடைசிவரை எழுதி, பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற அவர் *10.09.2016* அன்று சென்னையில் தமது 76வது வயதில் காலமானார். தனது மனைவியையும், ஆறு பிள்ளைகளையும் விட்டு இறைவனடி சேர்ந்தார்.

அமரர் மகாதேவாவின் பிரிவுச் செய்தி நெருங்கிப் பழகிய பலரையும் ஆச்சரியத்துக்கும் கவலைக்கும் உரியதாக்கிற்று.

திடீர் இழப்புக்களை எமது தொழிலில் கண்டனுபவப்பட்ட எமக்கு சில நெருக்கமானவர்களின் இழப்புக்கள் வரும்போது உடனும் சகிக்கும் தன்மையை இறைவன் நமக்கு இன்னும் தரவில்லை.

ஊடகவியலாளர்களாகவோ வைத்தியர்களாகவோ போர் வீரர்களாகவோ இருந்தாலும் கூட மனித மனம் என்று ஒன்று இருக்கும் வரை இழப்புக்களின் அதிர்ச்சியிலிருந்து உடனடியாய் விடுபடுவதென்பது கடினமான காரியம்தான்.

'மகான்' என்று அன்பாக அழைக்கப்பட்ட அவரின் பிரிவும் இத்தகையதே! தமது 21வது வயதில் யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையில் உதவி ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்தவர், பின் கண்டியிலிருந்து வெளிவந்த 'செய்தி' இதழில் சில



காலம் ஆசிரியராகப் பணியாற்றி மீண்டும் 'ஈழநாடு' நாளிதழின் செய்தி ஆசிரியராகக் கடமையாற்றினார்.

1987ம் ஆண்டு அவருக்கு ஏற்பட்ட நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள் காரணமாக கே.ஜி.மகாதேவா குடும்பத்துடன் புலம் பெயர்ந்து தமிழகத்தில் தஞ்சமடைந்தார். 'ஈழநாடு' அலுவலகம் குண்டுத்தாக்குதலுக்குள்ளான போது, கொலை அச்சுறுத்தல்கள் கூட அவரை மிரட்டியிருக்கிறது.

தர்ம வாழ்ந்த சமுதாயத்தின் மீது பற்றுக் கொண்ட 'மகான்' தொழில் ரீதியாக பொறுப்பான ஊடகப் பதவியை வகித்த போதிலும், காதில் விழுந்தவற்றையும் கவளத்தில் பட்டவற்றையும் காற்றோடு போகாமல் பதிந்து வைத்து அவற்றை வாசகர்களுக்கு வழங்குவதில் கை தேர்ந்தவர்.

'ஈழநாடு' இதழில் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து வந்த "இப்படியும் நடக்கிறது" அவரது பதிவுகளை இன்றும் படிக்கச் சொல்லும் ஆவணமாகும்.

பத்திரிகைத் துறையில் துணிச்சலோடு பணியாற்றிய அவர், இன்று மிளிரும் பல ஊடகவியலாளர்களுக்கு 'ஈழநாட்டில்' ஆசானாக இருந்தது மட்டுமன்றி,

தனது அனுபவங்களையும் தான் பதிவு செய்த அனுபவங்களையும் ஆவணமாக்கி நான்கு நூல்களாகத் தந்துள்ளமை ஊடகவியலாளர்களுக்கு பெருமைதரும் விடயம்.

தமிழகத்திலிருந்து பல ஆண்டுகளாக 'புதினம்' இதழுக்கு தொடர்ந்து எழுதிவந்த தமிழகச் செய்திக் கட்டுரைகளைத் தவிர, கொழும்பிலிருந்து வெளிவரும் 'தினக்குரல்' ஞாயிறு இதழிலும், 'ஞானம்' இதழிலும் இறுதிவரை எழுதி வந்தார். அவர் சென்னையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவதற்கு சிறிது முன்னதாக தன் கைப்பட எழுதிய கடைசிக் கட்டுரை 'புதினம்' இதழுக்குத்தான் என்ற பெருமையோடு, வாசகர்களுடன் இணைந்து கண்ணீர் அஞ்சலியை அவருக்குக் காணிக்கையாக்குகிறோம்.

# ஊடகத் துறையை உயிராக நேசித்த மகாதேவா!

பத்திரிகைத் துறையைத் தன் உயிராக நேசித்து தன் இறுதி நாள் வரை செய்தியாளராக வாழ்ந்து மறைந்தவர் அமரர் கே.ஜி.மகாதேவா.

1961-ம் ஆண்டு தனது 20-வது வயதில் யாழ்ப்பாணம் 'ஈழநாடு' நாளிதழில் தனது பத்திரிகைப் பயணத்தை ஆரம்பித்தார்.

தொடர்ந்து 1967-ம் ஆண்டு முதல் 1972-ம் ஆண்டு வரை கண்டியில் இருந்து வெளியான 'செய்தி' இதழில் ஆசிரியராகப் பணியாற்றினார். பின் மீண்டும் யாழ் 'ஈழநாடு' நாளிதழின் செய்தி ஆசிரியராகப் பணியேற்றார்.

1987-ம் ஆண்டுக்குப் பின்னர் பத்திரிகையாளர்களுக்கு, குறிப்பாகத் தமிழ் பத்திரிகையாளர்களுக்கு பல்வேறு மட்டங்களில் இருந்தும் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டதை அடுத்து பல்லாயிரம் ஈழத் தமிழ் மக்களைப் போன்று கே.ஜி.மகாதேவாவும் குடும்பத்துடன் புலம்பெயர்ந்து தமிழகத்தில் தஞ்சமடைந்தார்.

1981-ம் ஆண்டில் 'ஈழநாடு' அலுவலகம் குண்டுத் தாக்குதலுக்குள்ளானபோதும் பெரிதும் பாதிப்புக்குள்ளான மகாதேவாவை 80களின் இறுதிக் காலப் பகுதியில் கொலை அச்சுறுத்தல்களும் நெருக்கடிக்குள்ளாக்கியது.

தமிழகம் சென்று வாழ்ந்தபோதிலும், அவரது ஊடகப் பணி தொடர்ந்தது. கொழும்பு தினக்குரல், ஞானம், லண்டன் புதினம் ஆகிய இதழ்களில் தொடர்ந்து தமிழக செய்திகளைத் தனக்கே உரிய பாணியில் எழுதி வந்தார்.

'ஈழநாடு'வில் அவர் பணியாற்றிய காலத்தில் ஊடுருவி என்ற பெயருக்குள் மறைந்திருந்து எழுதிய 'இப்படியும் நடக்கிறது' என்ற பத்தி தொடர்ந்து தினசரியில் வெளிவந்தது.

முற்றிலும் உண்மையான தகவல்களைக் கொண்டிருந்த



'இப்படியும் நடக்கிறது' என்ற பத்தி பெரும் வாசகர் வட்டத்தையே உருவாக்கியிருந்தது. பின்னர் தமிழகத்தில் இருந்து அந்தப் பத்தியில் வெளிவந்தவற்றைத் தொகுத்து 'கதையல்ல நிஜம்' என்ற தலைப்பில் நூல் வடிவில் வெளியிட்டிருந்தார்.

ஈழநாட்டில் தொடர்ந்து வந்த "இப்படியும் நடக்கிறது" அவரது பதிவுகளை இன்றும் படிக்கச் சொல்லும் ஆவணமாகும்.

பத்திரிகைத் துறையில் துணிச்சலோடு பணியாற்றிய அமரர் கே.ஜி.மகாதேவா இன்று இலங்கையில் மட்டுமல்லாது பல்வேறு நாடுகளிலும் பணியாற்றும் பல ஊடகவியலாளர்களுக்கு ஈழநாட்டில் ஆசானாக இருந்ததுடன், தனது அனுபவங்களையும் தான் பதிவு செய்த அனுபவங்களையும் திரட்டி நான்கு நூல்களை எழுதி வெளியிட்டிருந்தார்.

கோவை ஞானி, பா.செயப்பிரகாசம், எஸ். பொன்னுத்துரை, பழ.நெடுமாறன், வைகோ, திருமாவளவன், கொம்யுனிஸ்ட் சி.மகேந்திரன், சிவாஜிலிங்கம் போன்றோருடன் நடாத்திய நேர்காணல்களைத் தொகுத்து தர்மத்தின் குரல் என்று தலைப்பிட்டு அவர் வெளியிட்டிருந்த நூல் மிகவும் சிறப்பானது.

தனது பத்திரிகைத் துறை அனுபவங்களைத் தொகுத்து நினைவலைகள் என்ற நூலையும் அவர் எழுதியிருந்தார். ஊடக பயிற்சியாளர்களுக்கும் தமிழ் வாசகர்களுக்கும் .மீண்டும் தோன்றும் மிடுக்கினைத் தரும் பதிவுகள் அவை.

தமிழகத்தில் அவர் வெளியேற முடியாத கைதியாக வாழ்ந்தபோதிலும் அவர் நெஞ்சமெல்லாம் தமிழ் ஈழமும் ஊடகத் துறையும் நிறைந்திருந்தது.

மட்டக்களப்பில் பிறந்து, யாழ்ப்பாணத்தில் தொழில் பார்த்து, தமிழகத்தில் வாழ்ந்த கே.ஜி.மகாதேவா, தனது மனைவியையும் ஆறு பிள்ளைகளையும் விட்டு 76வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

கே.ஜி.மகாதேவா, ஈழத் தமிழ் ஊடகத் துறையில் பெரும் இடைவெளியை விட்டுச் சென்றிருக்கிறார். அவரது ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும் சர்வதேச தமிழ் பத்திரிகையாளர் ஒன்றியம், அன்னாரை இழந்து பரிதவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

அன்னாரின் பிரிவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல, ஈழத் தமிழ் ஊடகக் குடும்பத்திலும் ஒரு மூத்த அங்கத்தவரின் இழப்பாகவே நாம் உணருகின்றோம்.

# 9 வயதில் அரங்கையும் ரசிகர்களையும் மெய்சிலிர்க்க வைத்த சிறுமி

அரங்கை அதிர வைத்த 9 வயது சிறுமி அபிநயாவின் அற்புதமான அரங்கேற்றம் கடந்த ஞாயிறு 11.09.16 அன்று *Walthmstow Assembly Hall* அரங்கில் அரங்கம் நிறைந்த ரசிகர்களுடன் மிக சிறப்பாக நடைபெற்றது. இவர் நாட்டிய கலைமணி திருமதி அனுசா சஜீவின் மாணவியும், திரு. திருமதி ராமச்சந்திரன் (இளவாலை) தம்பதிகளின் இளைய செல்வப் புதல்வியுமாவார்.

திருமதி அனுசா சஜீவின் 25வது பரதநாட்டிய அரங்கேற்றம் இது என்பது ஒரு சிறப்பிற்குரிய விடயமாகும். நடன ஆசிரியையின் திறமைக்கும் முயற்சிக்கும் இச்சிறுமியின் அரங்கேற்றம் ஒரு சிறந்த உதாரணமாகும்.

லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவாச்சாரியார் திரு.கயிலை நாகநாத சிவம் குருக்கள் அவர்களின் நடராஜர் பூஜையுடன் (சலங்கை பூஜை) ஆரம்பமாகிறது. மிக சிறப்பான பூஜை வழிபாடும் சிறுமியை ஆசிர்வாதம் செய்தது.

சிறுமி அபிநயாவின் அரங்க நிகழ்வு புஷ்பாஞ்சலியுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து "பாலும் தெளி தேனும்" என்று விநாயக சுலோகத்துடன் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. புஷ்பாஞ்சலி ஆரம்பமாகியதும் சிறுமியின் அரங்க







அசைவுகள் அவரின் பெயருக்கேற்ப அபிநயிக்க தொடங்கின. கடவுள், குரு, பெற்றோர், சபையினரை வணங்கி மதிப்பளிக்கும் புஷ்பாஞ்சலி, சபையினரை கவர்ந்தது.

தொடர்ந்து வந்த அலாரிப்பு நடன அரங்கேற்றத்தின் ஆரம்ப வடிவம். சிறுமியின் கை அசைவுகளும் பாவமும் அங்க அசைவுகளும் ரசிகர்களின் எதிர்பார்ப்பினை கூட்டியது. படிப்படியாக ஜதிஸ்வரம், சண்முக சப்தம் 'தண்டை முழங்க' என்பன நடன செல்வியின் முதிர்ந்த அபிநயங்களை வெளிப்படுத்தின.

அடுத்து வந்த வர்ணம் சுத்த தன்னியாசி ராகத்தில் அமைந்த 'ஆடும் மயில்' பாடல் கிட்டத்தட்ட 40 நிமிடங்கள் ரசிகர்களை தன் கட்டுக்குள் வைத்திருந்தார். எந்தவிதமான பதட்டமோ, மேடைக்கூச்சமோ இன்றி மிக நிதானமாக அபிநய சுத்தமும் அங்க அசைவும், பாவங்களும், ஒரு நேர்தி மிக்க நடன மணிபோல் இந்த சிறுமி காட்சியளித்தார்.

இடைவெளையின்போது மிக அருமையான சிற்றுண்டிகள் ரசிகர்களின் பசியைப் போக்கி அவர்களை மேலும் ரசிக்க வைத்தது.

இடைவேளையைத் தொடர்ந்து பிருந்தாவன சாரங்க ராகத்தில் வந்த கீர்த்தனம், 'கலியுக வரதன்' மிக அருமையான ஒரு நடனமாக அமைந்தது. முருகனின் அவதாரத்தை மிக அழகாக தன் அபிநயத்தால் அற்புதமாக ஆடிக் காட்டினார். படிப்படியாக சிறுமியின் ஆடலில் மெருகு கூடிக் கொண்டு வந்தது. ஒவ்வொரு பாவமும் இந்த சின்னஞ் சிறு சிறுமியால் எப்படி ஆட முடிகிறது என சபையினரை ஆச்சரியப்பட வைத்தது.

தொடர்ந்து வந்த நீலமணி ராகத்தில் அமைந்த பதம் 'என்ன கவி பாடினாலும்' சபையை அதிர வைத்தது. தன் அண்ணன் அபிராமுக்காக முருகனை வேண்டி ஆடிய ஆடல், ஆடல் நாயகியின் உணர்வு பூர்வமான ஒரு மிக சிறந்த ஆடலாக அமைந்தது. சிறுமியின் ஒவ்வொரு அசைவும் முகபாவமும் சபையினரை அழவைத்த காட்சியாக இந்த பதம் அமைந்தது. இந்த பாடல் பாடிய வம்சி கிருஷ்ணனின் குரலும் மிக உருக்கமாக இருந்தது. எல்லாவற்றுக்கும் மகுடம் சூட்டியதுபோல் இந்த பதம் அமைந்தது.

தொடர்ந்து வந்த காவடி, சிந்துவிற்கு சிறுமியின் காவடியாட்டம் மிக சிறப்பாக அமைந்தது. அதை தொடர்ந்த திருப்புகழ் 'முத்தைத்தரு', சிறுமியின் துள்ளும் வேகமும் தாள நடையும் மிக சிறப்பாக அமைந்தது. தொடர்ந்து வந்த 'தில்லானா' தான் ஒரு நிறைவான நடனமணி என்பதை நிரூபித்து காட்டினார். தன் முக பாவத்தாலும் அபிநயத்தாலும் சபையை தன் கட்டுக்குள்





வைத்த பெருமை, இந்த சின்னஞ் சிறுமியின் அபாரத் திறமை என்றே கூறலாம்.

இறுதியாக 'மங்களம்' ஆட, வந்ததும் நடனம் முடியப் போகின்றதோ என்று ஏங்க வைத்தது. அரங்கேற்றம் மங்களத்துடன் இனிதே முடிவுற்றது.

இந்த சின்னஞ்சிறுமியை நடனத்தில் சிறப்பாக அரங்கேற்ற வைத்த பெருமை நடன ஆசிரியை திருமதி அனுசா அவர்களை சேரும். இந்த ஆசிரியையும் தனது 10வயதில் அரங்கேறியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அரங்கேற்றத்தின் சிறப்பு... பக்கவாத்தியங்களே. மிருதங்கம், புல்லாங்குழல், வயலின், மோர்சிங், என்பன சிறுமியின் நடனத்திற்கு மேலும் மெருகு கூட்டின. இவர்களின் ஊக்கமும், ஆதரவும், சிறுமியை இவ்வளவு தூரத்திற்கு ஒரு சிறந்த தாரகையாக அமைய வழிவகுத்தது. இந்த சிறுமியை இவ்வளவு தூரம் சிறந்த நடனத் தாரகையாக வர ஊக்கமும் உறுதுணையும் அளித்த அவரது பெற்றோருக்கு வாழ்த்துக்கள்.

இந்த நடன அரங்கேற்றத்திற்கு முதன்மை விருந்தினராக திருமதி பத்மினி குணசிலன் அவர்களும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரும் அபிநயாவின் பெரியப்பாவுமான திரு. இராசா ரவீந்திரன் அவர்களும் கௌரவ விருந்தினராக சிவஸ்ரீ கயிலை நாகநாத சிவம் குருக்களும் தலைமை வகித்தனர்.

மேலும் அரங்கத்தில் நுழைந்ததும் அதன் அமைப்பும் அலங்காரமும் அரங்கேற்றம் எவ்வாறு அமையும் என்பதை முன்கூட்டியே கட்டியம் கூறியது.

இந்த சின்னச் சிறுமி மென்மேலும் பரத கலையில் சிறப்புகள் பல பெற்று வளர வாழ்த்துகின்றோம்.

TRUSTED NAME SINCE 1999

CENTRAL BANK APPROVED MONEY TRANSFERS TO

# SRI LANKA


SWIFT CREDITS TO ANY BANK ACCOUNT

FAST CASH

SEND TODAY - COLLECT TODAY

WHEREVER YOU ARE IN THE UK,
YOU DON'T HAVE TO COME TO US! CREDIT OUR ACCOUNT ONLINE & CALL US

BARCLAYS A/C NAME : C.E.C. LTD
A/C NO : 70713945 SORT : 20-36-47



இலங்கைக்கான பணமாற்று சேவை நம்பிக்கை
நாணயமிக்க மிக துரிதமான சேவை

குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்குள்ள
உங்களது எந்த வங்கிக் கணக்கிலும்வைப்பு
செய்ய கூடியதான வசதிகள்.

OUR PROMISE
YOUR MONEY HAS SENT FROM THE UK AND NOT CREDITED LOCALLY BY UNKNOWN SOURCES.
OFFICIAL TRANSFERS

☎ 020 8886 4488
www.efastcash.co.uk

48 MITCHAM ROAD,
TOOTING SW17 9NA

2 MINUTES FROM TOOTING BROADWAY CLOSE TO McDONALDS AND NEXT TO GALA BINGO



Powered By MCG

FASTCASH IS A FCA & HM CUSTOMS AND EXCISE / REGISTERED BUSINESS. MSB 12112819 / FCA -PI 540536

CEC SEND MONEY FROM 36 BRANCHES

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| OAKWOOD | - 0208 886 4488 | CENTRAL LONDON | - 0207 255 3800 | EDMONTON | - 0208 884 4646 | WOOD GREEN | - 0208 889 6464 | BARNET | - 0208 440 4033 | ST ALBANS | - 01727 861 111 |
| GOLDERS GREEN | - 0208 455 0099 | FINCHLEY | - 0208 343 3737 | CAMDEN | - 0207 284 1415 | SWISS COTTAGE | - 0207 722 6767 | ILFORD | - 0208 553 5300 | CHISWICK | - 0208 995 9595 |
| ROMFORD | - 0170 873 3633 | LONDON BRIDGE | - 0207 407 5717 | FLEET STREET | - 0207 936 4646 | WELWYN G CITY | - 0170 733 3883 | ROYAL DOCKS | - 0207 474 4700 | WALTHAMSTOW | - 0208 521 5252 |
| HENDON | - 0208 202 4300 | BRICK LANE | - 0207 033 4000 | GREEN STREET | - 0208 552 5100 | HOLLOWAY RD | - 0207 700 7575 | CAMDEN NW1 | - 0203 437 1200 | TOTTENHAM COURT RD | - 0203 437 1212 |
| TOOTING | - 0203 437 1220 | HARROW | - 0203 437 1221 | DALSTON | - 0203 437 1222 | FULHAM | - 0203 437 1223 | BAKER STREET | - 0203 437 1225 | WEMBLEY LDO | - 0203 437 1228 |
| HATFIELD | - 0203 437 1227 | STRATFORD | - 0203 437 1226 | ERITH | - 0203 437 1229 | EASTHAM | - 0203 437 1230 | FOREST HILL | - 0203 437 1231 | KENTISH TOWN | - 0203 437 1232 |

## Clean, Modern Family Accommodation in SRI LANKA

Quality 1,2,3 Bed Apartments in Mt. Lavinia

Close to St. Thomas Collage and Mt.Lavinia Hotel
3min to Galle Rd, 5min to Beach

Sea Side
Fully Furnished
AC & Lift
with Parking

Rent from
£25
per day*



For Bookings Contact Mike
07733 261 999
Visit our website
www.stayatmount.com

Escape to Colombo from
£409

## BEST DEALS TO SRI LANKA

HolidayAir
A Travel Experience to Remember

DO NOT BOOK YOUR AIR TICKET WITH ANY OTHER TRAVEL AGENT UNTIL YOU SPEAK TO US!

| KUWAIT AIRWAYS | OMAN AIR | QATAR AIRWAYS | SriLankan | Emirates |
|---|---|---|---|---|
| FROM £415 INCL. TAXES 46-7kg | FROM £409 INCL. TAXES 30+7kg | FROM £455 INCL. TAXES 40+7kg | FROM £456 INCL. TAXES 40+7kg | FROM £429 INCL. TAXES 40+7kg |

WE SPECIALISE IN TAILOR MADE HOLIDAY PACKAGES TO SRI LANKA TO SUIT TO ALL BUDGETS.
BOOK ANY HOTEL / ANY ROOM TYPE IN SRI LANKA, BEST PRICE GUARANTEED!


WORLDWIDE SPECIALS

TORONTO FROM £400 NEW YORK FROM £350 MELBOURNE/ SYDNEY FROM £610

FOR MORE OFFERS AND OPTIONS VISIT
www.holidayair.com
130 HIGH STREET, BARNET, EN5 5XQ
☎ 0208 440 0770

# பூதத்தம்பி கோட்டை

சிவ தியாகராஜா




அன்று காலை நெடுந்தீவிலிருந்து புறப்பட்ட படகு, கதிரவன் மேலைக் கடலில் மறைந்த பின்னரே யாழ் நகரைச் சமீபிக்க ஆரம்பித்தது. அதுவரை படகின் பின்னால் அமர்ந்திருந்த பூதத்தம்பி இப்போது முன்னால் வந்து தொலைவில் தெரியும் கரையைப் பார்த்த வண்ணம் அமர்ந்தார். வானத்தில் வெண்ணிற கடல் நாரைகள் 'கீ கீ' எனச் சத்தமிட்டவண்ணம் பறந்து கொண்டிருந்தன.

## சதியும் கொலை முயற்சியும்

மாலை மங்கி இருளரசன் அரசோச்ச ஆரம்பித்த நேரம். யாழ்ப்பாணம் கோட்டைக்குள்ளிருந்த தனது மாளிகையின் வரவேற்பு அறையில் உட்கார்ந்து மது அருந்திக் கொண்டிருந்தான் அந்திராசி. அவனுக்கு முன்னாலிருந்த மேசையில் ஒரு டச்சுக்கார விஸ்கிப் போத்தல் பாதியாகக் கிடந்தது. ஏராளமான நகைகளும் தங்க நாணயங்களும் அனுப்பிவைத்தபடியால் அழகவல்லி அவற்றை ஏற்றுக்கொண்டு தனது கோரிக்கைக்கு சுமுகமான ஒரு பதிலை அனுப்பி வைப்பாள் என நம்பினான்.

அவளிடம்தான் எத்தனை அழகு! கருநாகம் போன்ற கருநிறச் சுரிகுழல். வானவில்லின் வர்ண ஜாலங்களைக் காட்டும் கண்கள். தங்கமுலாம் பூசிய தாமரைக் கன்னங்கள். மாப்பெடுத்து நிற்கும் மதர்ப்பான மார்பகங்கள். ஒடுங்கிப் பின் புடைத்த மாதவிக் கொடி இடை. உருண்டு திரண்ட செவ்வாழைத் தொடைகள். மாயனால் செதுக்கப்பட்ட அந்த மாம்பழ மேனிக்குத்தான் எனது ஆவலைச் சுண்டி இழுப்பதில் அப்படி என்ன ஈர்ப்புச் சக்தியோ? உடை மறைக்கும் உடலில் ஓர் இடை உள்ளதோ இல்லையோ என ஏற்படும் சந்தேகத்தை நான் போக்கிக் கொள்ள அவள் உடன்படுவாளா? இதற்கெல்லாம் ஒரு சுமுகமான விடை இன்றைக்குக் கிடைக்கும் என அவன் உறுதியாக நம்பினான்.

மங்கை போதையோடு மது போதையும் அந்திராசியை ஆட்கொண்டிருந்தது. அழகவல்லி நாச்சியார் தனது மாளிகையின் வாசலுக்கே வந்துவிட்டது போலக் கற்பனை செய்ய ஆரம்பித்தான். அவளது அதரங்களிலிருந்து உதிர்ந்த மோகனப்புன்னகை அவள் அவன்மீது வீசிய காதலின் பிரகடனமாக எண்ணிக்கொண்டான். எழுந்து போய் வாசற்கதவைத் திறந்து அவளை வரவேற்று உபசரிப்பது போல கூனி வளைந்து நின்று கைகளால் சைகை காட்டினான்.

அந்திராசி கதவைத் திறந்து வரவேற்புச் சைகை காட்டியதற்கும் வேலைக்காரன் பெரியதொரு பொதியைச் சுமந்துகொண்டு அந்த வீட்டிற்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

அந்திராசி நின்ற கோலத்தையும், அவன் கதவைத் திறந்து தன்னை உள்ளே வரவழைத்த பாங்கையும் கண்ட வேலைக்காரனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. மிக்க பிரயாசைப்பட்டு சிரிப்பை அடக்கிக்கொண்டான்.

பெரியதொரு பொதியைச் சுமந்துகொண்டு வீட்டிற்குள் வந்த தனது வேலைக்காரனைப் பார்த்து அந்திராசி கேட்டான்.

"யாருக்காக இந்தப் பொதியைக் கொண்டு வருகிறாய்? இதை யார் கொடுத்து அனுப்பினார்கள்?"

"உங்களுக்காகத்தான் ஐயா இதைக் கொண்டு வருகிறேன்; இதை அழகவல்லி அம்மாதான் கொடுத்து அனுப்பினார்கள்"

"எனது வேண்டுகோளை அவளிடம் கூறினாயா? நான் தந்த பொதியை அவளிடம் கொடுத்தாயா? அவள் ஏதாவது பதில் கூறினாளா?"

"உங்களது வேண்டுகோளை அவரிடம் கூறினேன். நீங்கள் கொடுத்துவிட்ட பொதியையும் அவரிடம் கொடுத்தேன். தனது பதில் இப்போது நான் கொண்டு வந்திருக்கும் இந்தப் பொதியில் இருப்பதாகச் சொல்லி இதைக் கொடுத்து விட்டார்"

விழிகள் வியப்பினால் விரிய - ஆவல் அதிகரிக்க - ஆசை அலைமோத- அவசர அவசரமாக அப்பொதியை அவிழ்த்துப் பிரித்த அந்திராசியின் முகம் அவமானத்தால் கூம்பிக் குறுகியது.

அந்தப் பொதியினுள்ளே-

ஒரு ஜோடி பழைய செருப்புகளும், ஒரு விளக்குமாறும் காணப்பட்டன.

அத்தோடு அவன் அனுப்பிவைத்த தங்க ஆபரணங்களும் பொற்காசுகளும் கொண்ட சந்தனப் பெட்டி திருப்பி அனுப்பப்பட்டிருந்தது!

தனது வேண்டுகோளைத் துச்சமாக மதித்து - தான் அனுப்பியிருந்த விலைமதிக்க முடியாத ஆபரணங்களையும், பொற்காசுகளையும் துச்சமென நிராகரித்துவிட்டு - அவற்றிற்குப் பதிலாக இந்த துடைப்பக்கட்டையையும், பழைய செருப்புக்களையும் அனுப்பி ஒரு வேலைக்காரன் முன்னிலையில் - இப்படித் தன்னை அழகவல்லி அவமதித்து விட்டாளே என எண்ணியபோது அந்திராசியின் உள்ளத்தில் முதலில் தாங்க முடியாத அவமானமும் - அடுத்து அடக்க முடியாத கோபமும் - தொடர்ந்து இதற்காக அவளைப் பழிவாங்கியே தீர வேண்டும் என்ற வெறியும் உருவெடுத்துக் கொண்டிருந்தன.

அன்றிரவு அவனது நண்பன் அமரதாஸா வீடு திரும்பிய சமயம் அழகவல்லியால் தனக்கேற்பட்ட அவமானத்தை நண்பனிடம் அந்திராசி அழாக்குறையாகக் கூறி வைத்தான். அழகவல்லி ஒரு விளக்குமாற்றையும், ஒரு சோடி செருப்புக்களையும் அனுப்பி அவனை ஏளனமாக அவமதித்த போதிலும் அவள் மேல் அந்திராசி கொண்டிருக்கும் காம இச்சை எள்ளளவும் குறையாதிருப்பதைக் கண்ட அமரதாஸா ஒரு யோசனை கூறினான்:

"அந்திரா, நீ அவளை வலுக்கட்டாயமாகவேனும் அடைய ஆசைப்படுகிறாயா?"

"நிச்சயமாக"

"அப்படியானால் அதற்கு ஒரே வழிதான் உண்டு"

"அது என்ன வழி?"

"நீ எப்படியாவது ரகசியமாக, காதோடு காது வைத்த மாதிரி உனது ஒற்றர்களைக்கொண்டு பூதத்தம்பி முதலியாரைக் கொன்றுவிடு! அவர் இறந்து அழகவல்லி விதவையாகிவிட்டால் அவளுக்குப் பெரிதாகப் பாதுகாப்பு ஏதும் இருக்காது. அச்சமயம் அவளை நீ பலாத்காரமாகக் கொண்டு வந்து உனது ஆசை நாயகி ஆக்கிவிடலாம். எத்தனையோ டச் அதிகாரிகள் ஊர்களிலிருந்து சுதேசிப் பெண்களைக் கடத்திக்கொண்டு வந்து தங்கள் ஆசை நாயகிகளாக ஆக்கிவரும் இக் காலகட்டத்தில் உனது செயல் வித்தியாசமாகத் தெரியாது. இதுதான் நீ அவளை அடையக்கூடிய ஒரே வழி!"

"இதை விட்டால் வேறு வழி இல்லையா?"

"இல்லை"

சில நேரம் ஆழ்ந்த யோசனையில் இருந்த அந்திராசி -

"அப்ப சரி, அப்படியே செய்வோம்; ஆனால், இந்த விஷயத்தில் உனது உதவியை நான் எதிர்பார்க்கலாமா?"

"கட்டாயமாக. ஆனால், இத்திட்டத்தை நாம் மிக மிக அந்தரங்கமாக வைத்திருக்க வேண்டியது அவசியம். சரியான தருணம் வரும் போது பூதத்தம்பியைப் போட்டுத் தள்ளிவிடலாம் - ஆனால், அவசரப்படாதே, ஆறு மாதமோ ஒரு வருட காலமோ காத்திருப்போம், அவசரப்பட்டால் சந்தேகம் எங்கள் மீது திரும்பிவிடக்கூடும்"

அந்தத் தருணத்தை எதிர்பார்த்து அவர்கள் காத்திருந்தார்கள்.

****

நல்லூர் நகரின் மத்தியிலிருந்த மந்திரி மாளிகையை ஓர் அழகிய நந்தவனம் சூழ்ந்திருந்தது. அந்த நந்தவனத்திலிருந்த தடாகங்களிலும், குளங்களிலும் நீர் நிறைந்து தழும்பிக் கொண்டிருந்தது. அவற்றின் கரையோரங்களில் பல வர்ண மலர்கள் பூத்துக்குலுங்கின. அந்த மலர் வனத்தில் நெடிதுயர்ந்த தென்னை மரங்களும், புன்னை மரங்களும், கொன்னை மரங்களும், கமுக மரங்களும் குளிர்ச்சியான பசுமையைப் பரப்பிக்கொண்டிருந்தன. கொன்னை மரங்களில் பொன் வர்ணப் பூங்கொத்துகள் சரம் சரமாகத் தொங்கின. அந்த நந்தவனத்தில் நடுநாயகமாக அமைந்திருந்த மந்திரி மாளிகையின் உச்சியிலிருந்த பளிங்கு ஸ்தூபிகளில் உச்சி நேரக் கதிரவனின் செங்கதிர்கள் பட்டு அவை தங்கக் கலசங்களாக ஜவ்லித்துக் கொண்டிருந்தன.

முன்னால் வந்த வேலையாளிடம் குதிரைகளைக் கொண்டுபோய் லாயத்தில் கட்டி, எள்ளும் கொள்ளும் நீராகாரமும் கொடுக்கும்படி கூறிவிட்டு, மாமனையும் அழைத்துக் கொண்டு மாளிகைக்குள் புகுந்தான் ஜோதிநாதன்.

ஆறு மாத காலத்தின் பின் வீடு திரும்பிய மகன் ஜோதிநாதனையும், அவனோடு வந்த அண்ணன் குமார வன்னியனையும் கட்டித் தழுவி, முகமன் கூறி வரவேற்றாள் அழகவல்லி.

"தாத்தாவைப் பார்த்துவிட்டு வர என்று போனவன் - திரும்பி வர ஏன் இவ்வளவு தாமதம்? இந்த ஆறு மாத காலத்தில் என்னதான் செய்தாய்?" என்று மகனிடம் கேட்டாள் அழகவல்லி.

"அழகு! ஜோதி இப்போது குதிரையேற்றம், யானையேற்றம், வில்லாட்சி, வேலாட்சி எல்லாவற்றிலும் வல்லவனாகிவிட்டான். மற்றவர்கள் வருடக்கணக்கில் கற்க எடுக்கும் கலைகளையெல்லாம் ஆறு மாத காலத்தில் கற்றுத் தேர்ந்துவிட்டான்" என்றான் குமார வன்னியன்.

"நல்லது; காலையில் சாப்பிட்டீர்களா?"

"இல்லை; நாங்கள் சாவகச்சேரியில் ஒரு சத்திரத்தில் இரவு தங்கிவிட்டு, காலையில் ஒரு குவளை சுக்குநீர் மட்டும் குடித்துவிட்டுப் புறப்பட்டு விட்டோம்"

"வாருங்கோ, மதிய உணவு உட்கொண்டு கொண்டே பேசலாம்" என அழைத்தாள் அழகவல்லி.

"வெய்யிலில் உடலெல்லாம் வியர்த்துவிட்டது. நான் தடாகத்தில் ஒரு குளியல் போட்டுவிட்டு வந்து சாப்பிடுகிறேன்; நீங்கள் சாப்பிடுங்கோ" என்றான் ஜோதி.

"ஒன்றும் அவசரமில்லை. நீ சாவகசமாகக் குளித்துவிட்டு வா; நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். நீ வந்த பின்னர் எல்லோரும் சேர்ந்து சாப்பிடலாம்" என்றான் குமார வன்னியன்.



யாழ்ப்பாணம் டச்சுக்கோட்டை

ஜோதிநாதன் அவ்விடத்தை விட்டகன்றதும் - "அண்ணை, ஜோதி இப்போது போனது நல்லது. நான் உங்களோடு கொஞ்சம் தனியாகப் பேசவேண்டும்" என்றாள் அழகவல்லி.

"என்ன சங்கதி, ஏதாவது அசம்பாவிதமா?"

"அண்ணை; அந்திராசி முதலி என்பவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறியளா?"

"தெரியும் அழகு. கொழும்பிலிருக்கும் டச்சுச் சேனாதிபதி அந்திராசியைத்தான் யாழ்ப்பாணத்து முதல் மந்திரி பதவிக்கென அனுப்பியிருந்தார். ஆனால், கொமாந்தர் அந்தோனியோ மென்ஸிஸ் அந்தப் பதவியை அந்திராசிக்குக் கொடுக்காமல் அத்தான் பூதத்தம்பியை முதன்மந்திரியாக நியமித்தது எல்லோருக்கும் தெரியும்"

"அந்த நிகழ்ச்சியிலிருந்து அந்திராசி வெளிக்கு நண்பன் போலப் பழகினாலும் உள்ளூர அத்தான் மேல் பொறாமையும், பகையும் கொழுந்துவிட்டெரிந்த வண்ணமே இருக்கிறது. இதை அத்தானும் அறிவார். அத்தான் இப்போது நெடுந்தீவில் கோட்டை நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். இரண்டு மூன்று மாதத்திற்கொருதடவைதான் வீடு வருகிறார். அத்தான் வீட்டிலில்லாத இச் சமயம் பார்த்து அந்திராசி தனது வேலையாள் ஒருவன் மூலம் பல வகையான ஆபரணங்களையும், தங்க நாணயங்களையும் கொடுத்து அனுப்பி தன்னை வந்து தனிமையில் சந்திக்கும்படி தூதனுப்பியிருக்கிறான்"

"என்ன நெஞ்சழுத்தம் அந்தக் கரையாரப் பயலுக்கு? நீ என்ன செய்தாய்?"

"நான் பதிலுக்கு ஒரு விளக்குமாற்றையும், ஒரு சோடி செருப்புக்களையும் கொடுத்தனுப்பியிருக்கிறேன்."

"நல்ல காரியம் செய்தாய் அழகு; இப்படித்தான் அவனுக்குக் கரிபூசி அனுப்ப வேணும்"

"எனது ஆதங்கம், இந்த நிகழ்வை அத்தானுக்குச் சொல்லி அனுப்பவா? வேண்டாமா? என்பதுதான்"

"இப்போதைக்கு வேண்டாம் அழகு; அத்தான் கோபக்காரர்; உடனடியாக அந்திராசியை அடிக்கப் போய்விடுவார். சற்று ஆர அமர யோசித்துத்தான் இதை அவரிடம் கூறவேண்டும். அவர் அடுத்த தடவை வீடு வரும்வரை பொறுத்திருப்பது நல்லது" என ஆலோசனை கூறினான் குமார வன்னியன்.

பின்னர் அவர்கள் வேறு விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். பேச்சு ஜோதிநாதன் பற்றித் திரும்பியது.

"கடந்த ஆறு மாதங்களாக ஜோதி எனது மகள் சந்திரவல்லியோடு நெருங்கிப் பழகி வந்திருக்கிறான். அவர்கள் தனிமையில் காடெங்கும் சுற்றி வந்திருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் காதல் ஏற்பட்டிருக்கிறது என்றுதான் எண்ணுகிறேன். நான் ஜோதியை மாப்பிள்ளையாகக் கொள்வதில் உனக்கு ஆட்சேபம் ஏதும் இல்லையே?"

"இல்லை அண்ணை; இது நான் எதிர்பார்த்ததுதான். அவன் சந்திராவை மணப்பது எனக்குப் பூரண விருப்பம்"

"அத்தான் இதற்குச் சம்மதிப்பாரா?"

"அவரிடம் சம்மதம் பெற்றுத் தருவது எனது வேலை!"

இந்தச் சம்பாஷணை நடைபெற்று இரு நாட்களின் பின் குமார வன்னியன் அவர்களிடமிருந்து விடைபெற்று வன்னிக்குப் பயணமானான்.

* * * *

இச் சம்பவங்கள் நடைபெற்று ஓராண்டுக் காலத்தின் பின் ஒருநாள். நெடுந்தீவிலிருந்து யாழ் நகருக்குப் புறப்பட்ட ஒரு சிறிய படகில் பூதத்தம்பி முதலியார் பயணம் செய்து கொண்டிருந்தார். தென் மேற்கிலிருந்து ஊதிக்கொண்டிருந்த மேலைக் காற்றில் புடைத்து நின்ற பாயைத் தாம்புக் கயிறுகளைக் கொண்டு வலித்து படகை ஓட்டிக் கொண்டிருந்தான் டச்சுக்கார இராணுவ காப்டன் கோயா நாகெல்.

வழமையாக நெடுந்தீவிலிருந்து யாழ் நகர் செல்லும் பிரயாணிகள் கப்பல் வாரம் ஒரு தடவை வெள்ளிக் கிழமைகளில் மட்டும்தாம் பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்வது வழக்கம். பூதத்தம்பி முதலியார் அவசரமாக நல்லூர் செல்ல வேண்டியிருந்தமையால், கோயா நாகெல் என்ற டச்சுக்கார காப்டன் ஒரு சிறிய பாய்ப்படகில் அவரை யாழ் நகரில் கொண்டுபோய் விடுவதற்கு முன்வந்தான்.

இந்த கோயா என்பவனைப் பற்றி பூதத்தம்பி முதலியார் கேள்விப்பட்ட செய்திகள் அவ்வளவு நல்லதாக இல்லை. அவன் ஒரு 'ஸ்திரீ லோலன்' என்றும், அவன் நெடுந்தீவிலிருந்த நாட்களில் கிழக்கூரிலிருந்த ஏழைப் பெண்களைப் பணம் கொடுத்து வசியம் செய்து வந்தான் என்றும் கூறப்பட்டது. ஆனால், கோயாவின் தனிப்பட்ட வாழ்க்கையில் - அவனைப் பற்றிய புகார் ஏதும் வராத சமயத்தில் - தலையிட தனக்கேதும் உரிமை இல்லை என அவர் எண்ணினார். அவசரமாக நாடு திரும்பிப் போக இருந்த நேரத்தில் அவன் வலிய வந்து செய்யும் உதவியை ஏற்றுக்கொண்டார்.

அன்று காலை நெடுந்தீவிலிருந்து புறப்பட்ட படகு, கதிரவன் மேலைக் கடலில் மறைந்த பின்னரே யாழ் நகரைச் சமீபிக்க ஆரம்பித்தது. அதுவரை படகின் பின்னால் அமர்ந்திருந்த பூதத்தம்பி இப்போது முன்னால் வந்து தொலைவில் தெரியும் கரையைப் பார்த்த வண்ணம் அமர்ந்தார். வானத்தில் வெண்ணிற கடல் நாரைகள் 'கீ கீ' எனச் சத்தமிட்டவண்ணம் பறந்து கொண்டிருந்தன.

அச்சமயம் படகை ஓட்டிக்கொண்டிருந்த டச்சுக்கார காப்டன் கோயா ஒரு மோசமான காரியத்தில் ஈடுபட்டான். அவனது நடவடிக்கைகள் நாரைகள் போட்ட சத்தத்தில் அமுங்கிப் போயிருந்தன. கீழே படகில் அடியில் கிடந்த ஒரு மரக்கட்டையை எடுத்து முன்னால் உட்கார்ந்து கடற்கரையைப் பார்த்துக் கொண்டிருந்த பூதத்தம்பியின் தலையில் அடித்தான். அவர் 'ஆ' வென்ற முனகலோடு மயங்கிச் சாய்ந்த சமயம், அவரைத் தூக்கி படகின் பக்கவாட்டு விளிம்பின் மேலாக கடலில் தள்ளிவிட்டு படகை மேலே ஓட்டிச் சென்றான்.

*(தொடரும்)*

ராஜ்கிரணை நடிக்க வைத்து தனது முதல் படத்தை இயக்குகிறார் தனுஷ். அப்படத்துக்கு 'பவர் பாண்டி' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தினை தனுஷின் 'வுண்டர் பார்' நிறுவனம் தயாரிக்கிறது. சென்னையில் படப்பிடிப்புத் தொடங்கிவிட்டது ராஜ்கிரண் சினிமாவில் நடிக்கத் தொடங்கி 25வது ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படத்தில் ராஜ்கிரண் மகனாக பிரசன்னா நடிக்கிறார். 25 ஆண்டுக்கு முன்னர் தனுஷின் தந்தை கஸ்தூரிராஜா மூலமாக

## ராஜ்கிரணை நாயகனாக்கி இயக்குனராகிறார் தனுஷ்!



'என் ராசாவின் மனசிலே' படத்தில் ராஜ்கிரண் அறிமுகமானார். அந்தப் படம்தான் கஸ்தூரிராஜாவுக்கும் முதல் படம். பெரும் வெற்றியைப் படைத்தது அப்படம். அதனால்தான் இப்படத்தில் ராஜ்கிரணை தனுஷ் நாயகனாக்கினாரோ? தனுஷ் இயக்கும் முதல் படம் இது - தனது தந்தையைப் போல.

## பாலாவின் 'இளமை கொஞ்சும்' புதிய படத்தில் 'சூப்பர் சிங்கர்' பிரகதி!

இயக்குனர் பாலாவின் புதிய படம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. சமுத்திரக்கனியின் 'சாட்டைப்பட நாயகன் யுவன் நாயகன். நாயகி, சூப்பர் சிங்கர் புகழ் பிரகதி.

'தாரை தப்பட்டை' படத்தை தொடர்ந்து 'குற்றப்பரம்பரை' குறித்த படமொன்றை படமாக்கத் திட்டமிட்டார். ஆனால், அப்படம் தொடர்பாக பாரதிராஜாவுடன், பாலாவுக்கு பிரச்சினை உருவானது.

'தாரை தப்பட்டை' படத்தில் பிரகதியை பின்னணி பாட வைத்தார் பாலா.

"என்னைப் பாடவைத்த பாலா இப்போது நாயகியாக நடிக்கத் தேர்ந்தெடுத்துள்ளார். பாலா சாருக்கு என்னைப் பிடிக்கும் என்று சொன்னார். பாடத் தெரிந்த உன்னால் நடிக்கவும் முடியும் என்றார்.

நீ எத்தியோப்பியாவில் பிறந்தாலும் சரி, சோமாலியாவில் பிறந்தாலும் சரி, கதாபாத்திரத்துக்குப் பொருத்தமான



முகமா? என்று மட்டும் பார்க்கிறேன் என்று கூறினார் பாலா" என்கிறார் பிரகதி.

நாயகனும், நாயகியும் வயதில் மிகவும் இளையவர்கள் என்பதால், இப்படம் நிச்சயம் இளமை கொஞ்சும் காதல் படமாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 'இயக்குனர்களினால் நடிக்க வந்தேன்'!

இயக்குனர், நடிகர் கரு.பழனியப்பன் மனம் திறக்கிறார்.



'கள்ளன்' படத்தில் நாயகன், 'கிராமஃபோன்' படத்தின் இயக்குநர் என்று கரு.பழனியப்பன் தனது அடுத்த ஆட்டத்தைத் தொடங்கியுள்ளார். பரபரப்பான திரைப்பட வேலைகளுக்கு இடையே அவ்வப்போது தொலைக்காட்சி, சமூக வலைதள விவாதங்கள், திரைப்பட சங்கங்களின் பிரச்சினைகள் குறித்தும் மனம் திறந்து பேசுகிறார்.

**'மந்திரப் புன்னகை' படத்துக்குப் பிறகு தற்போது 'கள்ளன்' படத்தின் வழியே மீண்டும் நாயகன் அவதாரம். இந்த வாய்ப்பு உங்களுக்கு எப்படி வாய்த்தது?**

நடிக்கிற வாய்ப்பு என்பது எல்லோருக்கும் வருவதில்லை. ஒரு இயக்குனருக்கு நடிப்பதற்கான லட்சணங்கள் இருந்தாலும், அது அவ்வளவு எளிதாக அமையாது. இயக்குனர் சீமான் எனது 'பிரிவோம் சந்திப்போம்' படத்தைப் பார்த்துவிட்டு, 'தம்பி இந்தப் படத்துல நீ நடிச்சிருக்கணும்டா!'ன்னு சொன்னார். ஆனால், அப்போது அப்படி எனக்குத் தோணவே இல்லை. பலருக்கும் அவ்வளவு சுலபத்தில் அமையாத அந்த நடிக்கும் வாய்ப்பு அமையும்போது விட வேண்டாம் என்று தோணியது. அப்படித்தான் நடிகன் ஆனேன்.

தொழில்முறை நட்சத்திர நடிகர்கள் 'தங்கள் படம் இப்படித்தான் இருக்க வேண்டும்' என்று விரும்புகிறார்கள். அவர்கள் விரும்பிய வண்ணம் இயக்குனர்களைத் தேர்வு செய்கிறார்கள். ஆனால், 'தங்கள் படம் இப்படித்தான் இருக்க வேண்டும்' என்று விரும்பும் இயக்குனர்கள் என்னைப் போன்றவர்களை நடிகர்களாக்குகிறார்கள். அப்படி எனக்கு அமைந்ததுதான் இந்த 'கள்ளன்'. படப்பிடிப்பு முடிந்துவிட்டது. டப்பிங் உள்ளிட்ட இறுதிக்கட்ட வேலைகள் நடந்து வருகின்றன. படம் இன்னும் ஒரு மாதத்தில் ரிலீஸுக்கு வந்துவிடும்.

## 'வெள்ளை' தமிழ் நாயகிக்கு பயமென்ன, பயம்?



தமிழ் பட நாயகியும், வெள்ளைக்காரப் பெண்ணுமான எமி ஜாக்சனுக்கு என்ன பயம்? அவர் டைரக்டர் சொன்னதைச் செய்து விட்டுப் போகிறார். இளமை துள்ளி விளையாடுகிறது! தமிழ் உணர்வு இருந்தால்தானே ரஜினியுடன் சண்டை போடப் பயந்து பயந்து படையப்பா படத்தில் ரம்யா கிருஷ்ணன் நடித்தார். அவருக்குப் பயம் இருந்தது - அவர் நம்மவர். ஆனால், எமி வெள்ளைக்காரப் பெண். இந்தப் பயமெல்லாம் ஏன் இருக்கப் போகிறது. '2.0' படத்தில், எமி, ரஜினியுடன் மோதுகிறார். தமிழக ரசிகர்களின் 'கடவுளான' சூப்பர் ஸ்டாருடன் மோதுகின்றோமே என்ற பயமே இல்லாமல் மோதுகிறார். சென்னையில் படமாக்கப்பட்டு வரும் இக்காட்சிகளில் எமி அசத்துகிறார்.

## சமந்தா – நாகசைதன்யா விரைவில் திருமணம்!

நடிகர் நாகர்ஜுனாவின் மகன் நாக சைதன்யாவுக்கும், நடிகை சமந்தாவுக்கும் விரைவில் திருமணம் நடக்கவுள்ளது. தந்தையே இத்தகவலைத் தெரிவித்தார். இந்த ஜோடி காதலில் விழுந்து, இரு வீட்டு பெற்றோரின் சம்மதத்தைப் பெற்றுவிட்டனர். இந்த வருடத்துக்குள் திருமணம் நடக்கும். அதேநேரத்தில் திருமணத்துக்குப் பிறகு சமந்தா நடிக்கமாட்டார். இவைதான் இப்போதைய 'சுடச்சுட' தகவல்.



## அதிக சம்பளம் வாங்கும் நடிகை!

தமிழ்ப் படவுலகில் ஹீரோயின்களில் நயன்தாராதான் அதிக சம்பளம் வாங்குகிறார். நயன்தாரா சினிமாவுக்கு முழுக்கு போட்டுவிட்டு மீண்டும் வந்ததில் இருந்தே அவரது கெரியர் டாப் கியரில் போய் கொண்டிருக்கிறது. அவர் என்னதான் பட விழாக்களுக்கு வர மாட்டேன் என்று அடம் பிடித்தாலும் அவருக்கு பட வாய்ப்புகள் வந்து குவிகின்றன.

எந்தெந்த நடிகைகள் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார்கள் என்று தெரியுமா?

### நயன்தாரா




நயன்தாரா காட்டில் வாய்ப்பு மழை பெய்வதால் அதை பயன்படுத்தி அவர் ரூ.4 கோடி சம்பளம் வாங்குகிறார். அவருக்கு ரசிகர்களிடையே மவுசு அதிகம் இருப்பதால் தயாரிப்பாளர்களும் அவர் கேட்கும் தொகையை கொடுக்கிறார்கள்.

### அனுஷ்கா



ஹீரோ ரேஞ்சுக்கு வீரம் காட்டி நடிக்கும் அனுஷ்கா ரூ.3 கோடி மற்றும் அதற்கு மேல் வாங்குகிறார். தெலுங்கு திரையுலகில் அனுஷ்கா வெற்றி நாயகி என்பது குறிப்பிடத்தக்கது.



### சமந்தா, ஸ்ருதி

தமிழ், தெலுங்கு படங்களில் நடித்து வரும் சமந்தா ஒரு படத்திற்கு ரூ.1.5 கோடி வாங்குகிறார். தமிழ், தெலுங்கு தவிர இந்தியிலும் நடிக்கும் ஸ்ருதி ஹாசன், தமன்னா மற்றும் காஜல் அகர்வால் ஆகியோர் தலா ரூ.1.5 கோடி சம்பளம் பெறுகிறார்கள்.



### த்ரிஷா

நடிக்க வந்து பல ஆண்டுகள் ஆகியும் தொடர்ந்து ஹீரோயினாகவே உள்ள த்ரிஷா படம் ஒன்றுக்கு ரூ.1 கோடி வரை கேட்கிறாராம். சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துடன் சேர்ந்து ஒரு படத்திலாவது நடித்துவிட வேண்டும் என்பதுதான் த்ரிஷாவின் நிறைவேறாத ஆசையாக உள்ளது.

## குட்டை, குண்டு என்று சன்னி சந்தித்த அவமதிப்பு!

நீ குண்டாக, குட்டையாக இருப்பதால் மொடல் அழகி ஆக முடியாது என்று சிலர் நடிகை சன்னி லியோனிடம் தெரிவித்தார்களாம்.



வெளிநாட்டில் ஆபாசப் படங்களில் நடித்து வந்த சன்னி லியோன் தற்போது பாலிவுட்டில் கிட்டத்தட்ட செட்டில் ஆகி விட்டார். அவருக்குப் பட வாய்ப்புக்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. "நான் சிறு பிள்ளையாக இருந்ததில் இருந்தே எனக்கு மொடல் ஆக வேண்டும் என்று ஆசை. எனக்கு 18 வயதான போது மொடலிங் செய்ய முயன்றேன். ஆனால், நான் குட்டையாக, குண்டாக இருப்பதாகக் கூறி நிராகரித்து விட்டார்கள். ஆனாலும், விடாத என் முயற்சியால் வெற்றி பெற்றேன்" என்கிறார் கவர்ச்சித் தேவதை சன்னி லியோன்.

# இந்தக் 'குயில்' இனி பாடாது!



பிரபல பின்னணிப்பாடகி எஸ். ஜானகி தனது 60 ஆண்டுகால இசைப் பயணத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தார்.

78 வயதானாலும், அவரது குரல் இன்னமும் இனிமையாக உள்ளது. அவரது தாலாட்டுப் பாடல்களைக் கேட்டால் தூக்கம் வராமல் தவிப்பவர்களுக்குக்கூடத் தூக்கம் வரும். இப்படிப்பட்ட தேன்குரல் அவருடையது.

"எனக்கு வயதாகி விட்டது. பல பாடல்களில் பாடி விட்டேன். இனிப்பாடுவதை நிறுத்தி விட்டு ஓய்வு எடுக்கப் போகிறேன்" என்று ஜானகி தெரிவித்துள்ளார். தமிழ், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழியில் 48 ஆயிரம் பாடல்கள் பாடியுள்ளார். ஜீவா - நயன்தாரா நடித்த 'திருநாள்' படம் அவருடைய கடைசிப்படம். 'தந்தையும் யாரோ.....' என்ற பாடல் இப்படத்தில் பாடிய பாடல்.

ஜானகி - எஸ்பிபி ஜோடிக்குரல் பிடிக்காத ரசிகர்களே இருக்கமுடியாது.

# விஜய் ஜேசுதாஸ் - தர்ஷனா விவாகரத்து விவகாரம்

பிரபல பின்னணிப் பாடகர் கே.ஜே.ஜேசுதாஸின் மகனும், பாடகருமான விஜய் ஜேசுதாஸ், மனைவி தர்ஷனாவை விவாகரத்துச் செய்யப் போவதாக செய்திகள் வேகமாகப் பரவுகின்றன. ஆனாலும், இதனை தர்ஷனா மறுத்திருக்கிறார். "கருத்து வேறுபாடு உண்மைதான் ஆனால், விவாகரத்து இல்லை" என்கிறார் அவர்.

துபாயைச் சேர்ந்த தர்ஷனாவை 5 வருடங்கள் காதலித்து 2007 இல் மணந்தார் விஜய். தமிழில் மாரி படத்தில் வில்லனாக நடித்தார்.



# சமுத்திரகனி நாயகனாக நடிக்கும் படத்தை இயக்குகிறார் குட்டி ரேவதி!



இலக்கிய உலகில் சர்ச்சைக்குரிய கவிஞர் குட்டி ரேவதி இயக்குனராகிறார். ஏ. ஆர். ரஹ்மானின் 'ரசாயன ரோஜாக்கள்' என்ற ஆல்பத்துக்கு பாடல்கள் எழுதினார்.

'மரியான்' படத்துக்கு பாடல்கள் எழுதினார். நயன்தாராவின் 'மாயா' படத்திற்கும், மற்றும் சில படங்களுக்கும் பாடல்கள் எழுதினார்.



இதுவரை 50 படங்களுக்கு பாடல்கள் எழுதியுள்ளார்.

இப்போது சமுத்திரக்கனி நாயகனாக நடிக்கும் படத்தை 'குட்டி ரேவதி' இயக்கப் போவதாக உறுதியாகி விட்டது.



# படவாய்ப்புக்காக படுக்கைக்கு அழைத்தார்!

படவாய்ப்பு ஒன்றைப் பெறத் தன்னைப் படுக்கைக்கு அழைத்ததாக நடிகை ராதிகா ஆப்தே தெரிவித்தார்.

"ஒருமுறை தென்னிந்திய சினிமாவில் ஒரு நடிகர் என் ஹோட்டல் அறைக்குப் போன் செய்து, படுக்கைக்கு அழைத்தார். நான் அவரிடம் கடுமையாகப் பேசினேன். என்னோடு சண்டை போட்டார். அவ்வளவுதான்!" என்று தன் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

"இன்னொரு சந்தர்ப்பத்தில் ஒருவர் போன் செய்து, நீங்கள் ஒரு முக்கிய நபரைச் சந்திக்க வேண்டும். அவருடன் படுக்கையை பகிரச் சம்மதமா? என்று கேட்டார் நான் சிரித்து விட்டு, முடியாது. என்னுடன் படுக்க விரும்பும் நபர் நரகத்துக்குச் செல்லட்டும் என்றேன்" என ராதிகா கூறினார்.



# தென் ஆப்ரிக்காவில் விஜய் சேதுபதி

விஜய் சேதுபதி நடித்த படங்கள் மாதத்துக்கு ஒன்றாக, வரிசைகட்டி ரிலீசாகின்றன. தர்மதுரையைத் தொடர்ந்து, ஆண்டவன் கட்டளை, ரெக்க, மெல்லிசை, இடம்பொருள் ஏவல், தேவ், இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா படங்கள் கிடுகிடுவென வெளியாகின. தற்போது கே.வி.ஆனந்தின் இயக்கத்தில் தயாராகும் 'தேவ்' படத்தின் பாடல் காட்சிக்காக ஹீரோயின் மடோனா செபஸ்டியனுடன் தென் ஆபிரிக்காவில் முகாமிட்டுள்ளார் விஜய் சேதுபதி.

# உச்சக் கட்ட கடுப்பில் ரஜினி மகள் ஐஸ்வர்யா!

உச்சக் கட்ட கடுப்பில் இருக்கிறாராம் நடிகர் தனுஷ் மனைவி ஐஸ்வர்யா (ரஜினி மகள்). ஊரே பேசுது. ஆனால் தனுஷ் அசையாமல் இருக்கிறாராம்.

ஆனால், எல்லாவற்றுக்கும் தனுஷே காரணமாம். பூதம் ஒவ்வொன்றாக கிளம்புகிறதாம். ரஜினியின் 2வது மகள் விவாகரத்து விவகாரத்துக்கும் தனுஷே காரணம் என்று கூறப்படுகிறது.

அமலாபால் விஜய்யுடன் முரண்பட்டுக் கொண்டு மனக்கசப்புடன் வெளியேறி, சொகுசு பங்களாவில் 'அடைக்கலம்' புகுந்தார். அது தனுஷ் வாங்கிக் கொடுத்தது.

இந்தச் செய்தி தனுஷின் இல்லாள் ஐஸ்வர்யாவுக்குத் தெரிந்த போது கொதித்து எழுந்தாராம்; கோபித்துக் கொண்டு அம்மா வீட்டுக்குப் போய்விட்டாராம். ரஜினி மனக்கவலையால் தியானத்தில் ஈடுபட்டாராம். அவருக்கு என்ன செய்யலாம்? குடிப்பார்; அல்லது தியானிப்பார்; அல்லது பஞ்ச் டயலாக் பேசுவார்.



# தனுஷ் வீட்டில் தான் ரஜினி சந்திக்கிறார்!



'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த தனது போயஸ் கார்டன் வீட்டுக்குப் பதிலாக தன் மருமகன் தனுஷின் வீட்டில் வைத்து யாரையுமே சந்தித்து வருகிறார்!

போயஸ் கார்டன் என்றதும் முதல்வர் ஜெயலலிதா, வீடே நினைவுக்கு வரும். ரஜினி வீடும் அங்குதான் இருப்பதால், யாராவது அங்கு சென்று ரஜினியைச் சந்தித்தாலே பரபரப்பாகி விடுகிறது.

இந்த இரு வீடுகளில் யாராவது எங்கு சென்றாலும் செய்திதான்!

தமிழக காங்கிரஸ் கட்சித்தலைவராக சமீபத்தில் தெரிவான திருநாவுக்கரசர் ரஜினியைச் சமீபத்தில் மரியாதை நிமித்தம் சந்தித்தார். இந்தச் சந்திப்பு ரஜினியின் போயஸ் கார்டனில் நடக்கவில்லை. ஆழ்வார் பேட்டையிலுள்ள தனுஷ் வீட்டில் நடைபெற்றது. இப்போதெல்லாம் ரஜினி தனது வீட்டில் யாரையும் சந்திப்பதில்லை தனுஷ் வீட்டில்தான்.

காப்டன் டோனி சென்னைக்கு வருகிறார். சென்னை வரும் போது ரஜினியைச் சந்திக்கிறார். அவர் எங்கே சந்திப்பார்?

# ரஜினி மகள் விவாகரத்து

## 6 வருட திருமண வாழ்வு முடிகிறது


நடிகர் ரஜினிகாந்த் - லதா தம்பதியின் இரண்டாவது மகள் சவுந்தர்யா.

இவருக்கும், தொழில் அதிபர் அஸ்வின் என்பவருக்கும் கடந்த 2010ம் ஆண்டு திருமணம் நடந்தது.

கடந்த சில தினங்களாக சவுந்தர்யா இவரிடமிருந்து விவாகரத்துப் பெறப் போவதாக ஆரவாரமில்லாத ஒரு அமைதியான செய்தி சினிமா வட்டாரங்களில் வேகமாக உலா வந்தது.

ஆனால், ரஜினி குடும்பம் இது பற்றி எந்தத் தகவலும் வெளியிடவில்லை.

"எனது திருமண முறிவு குறித்து செய்திகள் உண்மைதான். கடந்த ஒரு வருடமாக நாங்கள் பிரிந்து வாழ்கிறோம். விவாகரத்து தொடர்பான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன." என்று ரஜினி மகள் தெரிவித்திருந்தார். இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை வளர்ந்து வருகிற நிலையில், இனி சமரசம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்பது உறுதியாகி விட்டது.




# மருத்துவம் என்னும் மாயவலை

## 40 வயது முதல் 60 வயது வரை

நாற்பது வயதை ஒருவர் எட்டும்போது வாழ்வில் கிட்டத்தட்ட பாதிப் பயணத்தை முடித்திருப்பார். சராசரி மனித வாழ்க்கை இலங்கை, இந்தியா போன்ற வளரும் நாடுகளில் அறுபத்தி மூன்று வயதாகவும், ஐரோப்பா, அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் எழுபத்தைந்து வயதாகவும் கணக்கிடப்படுகின்றது.

எனவே, 40 வயதை நெருங்கும் போது வாழ்வின் அரைவாசிப் பகுதிக்கு மேல் கடந்து இருப்பார். இன்னும் மீதி இருப்பது அரைவாசிப் பகுதியே.



பிறந்தது முதல் இருபது வயது வரை உடலின் வளர்ச்சி *(PHYSICAL GROWTH)* தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கும். மனிதனின் பருமனும், உயரமும் கூடிக் கொண்டே போகும். அத்தோடு சேர்ந்து இருபத்தைந்து வயது வரை படிப்பும், அறிவும் வளர்ச்சியும் நடந்து கொண்டே இருக்கும். விஷய ஞானமும் பெருகும். உடலும் மனமும் பூரித்து வளரும். அறிவைக் கொண்டு பொருளீட்டுவார்கள். கிட்டத்தட்ட 40 வயதில் ஆணோ, பெண்ணோ திருமணமாகி குழந்தைச் செல்வங்களுடன் வாழ்வின் முக்கிய கட்டத்தை அடைவார்கள். இதுவே இயற்கை. இதையே அனைவரும் விரும்புவர். 40 வயதில் ஒவ்வொரு மனிதனும் ஒரு பொறுப்பான





வாழ்க்கை முறைக்கு மாறியிருந்தால், அடுத்த கட்ட வாழ்க்கை 40வயது- 60 வயது வரை அமைதியாகவும், நிறைவாகவும் இயற்கையாக நிகழ வேண்டும். அறுபது வயது தாண்டும்போது, மனிதன் இருக்க வேண்டும். இதுவே அனைவருக்கும் உன்னத வாழ்க்கைமுறை. தற்கால வாழ்வியல் முறையை ஒருமுறை அலசிப் பார்ப்போம்.

நாற்பது வயது நிரம்பிய நான்கு பேர் முப்பது வருடங்களுக்கு முன்னர் சந்தித்திருந்தால், ஒருவருக்கு ஒருவர், "எப்படி வேலை? எப்படி பிள்ளைகள்? என்ன படிக்கிறார்கள்?" என்று குசலம் விசாரித்திருப்பார்கள். ஆனால், 40 வயதைக் கடந்த நான்கு பேர் 2016ம் ஆண்டான இப்போது சந்திக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் ஒருவருக்கொருவர் என்ன பேசிக் கொள்வார்கள்?

பிளட்பிரசர் எப்படி? சுகர் (சர்க்கரை வியாதி) எப்படி? கொலஸ்ரோல்...? எந்தவிதமான மருந்துகளை எடுக்கிறார்கள்? இப்படித்தான் உரையாடல் இருக்கும். இதில் எதுவுமே மிகைப்படுத்தப்பட்டதல்ல. இது அனைவரும் அறிந்த நிதர்சனமான உண்மை. 40 வயதை நெருங்குமுன்பே மருத்துவத்தூண்டிலில் சிக்கும் ஒவ்வொரு மனிதனும் கரையில் விழுந்த மீனாகத் துடித்துக் கொண்டு, கூட்டம் கூட்டமாக மருத்துவ மாயவலையில் சிக்கி 40-60 வயது கால கட்டத்தின் பெரும்பகுதியை மருத்துவமனையிலே கழிக்க வேண்டியிருக்கிறது. ஏன் நிகழ்ந்தது இந்த மாற்றம்? நம் அனைவருக்குமே நாற்பது வயதை நெருங்கிவிட்டால், ஏதாவது ஒரு வருத்தம் வரவேண்டுமென்ற மன நிலையும், மாயத்தோற்றமும் வந்துவிடுகிறது.

மருத்துவத்துறையில் தகவல் தொழில்நுட்பத்தின் *(MEDICAL INFORMATION TECHNOLOGY)* அதிவேக வளர்ச்சியே இதற்கான காரணம். 40-60 வயதில் தொடர்ச்சியாக மருத்துவ சிகிச்சை எடுக்காதவர்களை ஆச்சரியமாகப் பார்க்கிறோம். எண்பது வீதமானவர்கள் ஏதாவது ஒரு மருந்தை உபயோகிப்பவர்களாகவே இருக்கிறார்கள்.

எனக்கு நினைவு தெரிந்த காலம் முதல், அதற்கு முன்னரும், பிரதானமாக ஞாயிற்றுக்கிழமைகளில், உலகம் எங்கும் அனைத்துத் தேவாலயங்களில் *(CHURCH)* பைபிள் *(BIBLE)* வாசகங்கள் பாதிரிமாரால் வாசிக்கப்பட்டு, விளக்கப்பட்டு வருவது நீங்கள் அனைவரும் அறிந்ததே.

ஒவ்வொரு முறையும் புதுப்புது பரிமாணத்தில், புதுபுதுக் கோணத்தில் இந்த விளக்கமும், பிரசங்கமும் தேவாலயங்களில் நடைபெறுகின்றது.

ஒரே வாசகம் பத்து வருடங்களுக்கு முன் வித்தியாசமாக அர்த்தம் கூறப்பட்டது. பத்து வருடங்களுக்குப் பின் வேறு ஒரு கோணத்தில் வித்தியாசமாகக் கூறப்படுகிறது.

இந்த உலகில் இரவும், பகலும் கோடையும், குளிரும்- வறட்சியும், வசந்தமும் மாறி மாறி வந்து கொண்டிருந்தாலும், திரும்பத் திரும்ப ஒரே மாதிரி மாற்றமின்றி நடந்து கொண்டிருந்தாலும், நமது கண்ணோட்டம் அதனை வேறு வேறு மாதிரி அர்த்தம் கொள்கிறது.



காட்சி ஒன்றாக இருந்தாலும், காண்பவரைப் பொறுத்து அர்த்தம் வேறுபடுகிறது. சமீபத்திய ஏக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சி முடிவுகள் மனிதனுடைய பிரச்சனையாக ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

*80% PEOPLE UNDERSTAND DIFFENTLY OF WRONGLY* ஒரு விஷயத்தை 80 சதவீதமானவர்கள் மாறுபாடாக அல்லது தவறுதலாகப் புரிந்து கொள்கிறார்கள்.

எனவேதான் பகவத்கீதை, பைபிள், குர்-ஆன் போன்றவை வேறு வேறு நபர்களால் வேறு முறையில் பிரசங்கம் செய்யப்பட்டு வருகிறது. இந்தப் பிரசங்கங்களும், கேட்கும் மக்களில் 80 சதவீதமானோர் மிகத் தவறாகவே புரிந்து கொள்கிறார்கள். அந்தத் தகவல்களை மேலும் தவறாக மற்றவர்களுக்கும் பரிமாறுகிறார்கள். தவறான புரிதலே இன்றைய மனிதனின் இயல்பான சுபாவம். சரியாகப் புரிந்து கொண்டவர்கள் ஞானியாக மாறுகிறார்கள். தகவல் தொழில்நுட்பம் *(INFORMATION TECHNOLOGY)*, தொலைதொடர்பு துறை *(COMMUNICATION TECHNOLOGY)*, தொலைக்காட்சி *(VISUAL MEDIA)* இவை அனைத்தும் அபார வளர்ச்சி அடைந்துள்ளன. இதன்மூலம் உடல் நலம் குறித்த தீவிர பிரசாரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

நாற்பது வயதைத் தொட்ட ஒரு மனிதன் ஏதாவது ஒரு நோயினால் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், நோய்த்தாக்கம் இல்லாவிடினும், நோய் வராமல் தடுப்பதற்காக ஏதாவது ஒரு மருந்தை உட்கொள்ள வேண்டும், தடுப்பு நடவடிக்கையாக மருந்துகள் உட்கொள்ள வேண்டும் என்றும் பிரசாரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இவைகள் அனைத்தும் உடல்நலம் குறித்த தெளிவையும், அறிவையும் ஏற்படுத்துவதற்காகச் செய்யப்பட்டாலும், பலராலும் தவறாகவே விளங்கிக் கொள்ளப்படுகிறது.

அவர்களுக்கு உடல்நலம் குறித்த அச்சமும், மருந்தின்றி வாழமுடியாது என்ற எண்ணமும் உண்டாகிவிடுகிறது.

தன்னையறியாமலே மருத்துவ மாயவலையில் சிக்கிச் செல்கிறார்கள்.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் இளம்வயதில் விதை போட்டு, மரமாக்கி, நாற்பது வயதை நெருங்கும் போது அறுவடை நிலையை அடைந்து விளைச்சலும், பலன்களும் பெற்று, வாழ்வை இனிமையாக அனுபவிக்க வேண்டிய காலகட்டம்.

ஆனால், மருந்துகளும், வியாதிகளும் மருத்துவமனையும், அறுவைச் சிகிச்சையும் துரத்திக் கொண்டே இருக்கின்றன.

இறைவனாலும், இயற்கையாலும் படைக்கப்பட்ட இந்த மனித உடல் ஈடு இணையற்றது. நாம் நினைப்பது போல் அவ்வளவு பலஹீனமானதல்ல, மிகவும் உறுதியானது. எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கக் கூடியது. சரியான முறையில் நாம் அதனைப் புரிந்து கொண்டால், மருந்துகளின் தேவை இன்றி இனிமையாக வாழலாம். சரியாக அறிந்து கொள்வோம். மாய வலையிலிருந்து மீண்டு வர முயற்சி செய்வோம்.

மருந்து இல்லாத பெருவாழ்வு வாழ முயற்சிப்போம்!

அடுத்த இதழில் 20வயது- 40வயது வரை அலசுவோம்.

(விரியும்)

*மேலதிக விபரங்களுக்கு: 02081441553.*

ஹோமியோபதி டாக்டர்
ஆர்.தியாகராஜன் பேசுகிறார்


# ஆஸ்துமா



## ஹோமியோபதி மருத்துவம்
## +
## உங்கள் ஒத்துழைப்பு
# 100% தீர்வு

ஆஸ்துமா நோயாளிகள் ஏற்கனவே உட்கொள்ளும் ஆங்கில மருந்துகளுடன் ஹோமியோபதி மருந்துகளையும் உட்கொண்டால் கண்பாதிப்பு, தோல் மற்றும் பிறப்பு உறுப்பு அரிப்பு, நரம்புகள் பாதிப்பு, ஆண்மை குறைபாடு, கிட்னி பாதிப்பு போன்றவைகளை தவிர்க்கலாம்.







உயர்தர மருத்துவம் ▪ பாதுகாப்பான மருந்துகள் ▪ விரைவான சேவை

### சிறப்பு சிகிச்சைகள்

- **உயர் இரத்த அழுத்தம்** (B.P/Hyper Tension)
- **கொலஸ்ட்ரால்** (Cholesterol)
- **சிறுநீரக கோளாறுகள்** (Kidney Diseases)
- **மூட்டு வலி** (Arthritis)
- **தோல் வியாதிகள்** (Skin Diseases)
- **ஹார்மோன் பிரச்சனைகள்** (Hormone Disorders)
- **மாதவிடாய் கோளாறுகள்** (Menses Disorders)
- **செக்ஸ் பிரச்சனைகள்** (Sex Disorders)
- **குழந்தையின்மை** (Infertility)
- **டயாபட்டிஸ்** (Diabetes)



**இலவச மருத்துவ ஆலோசனைக்கு**

**0208 144 1553**

## HOMOEO CARE


30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

போன்: 0208 144 1553

வெப்சைட்: www.homoeocare.com

இமெயில்: homoeocare@rediffmail.com

# தமிழ் மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி



## BARRISTER S.J.JOSEPH

*LLB(Ceylon) LLB Hons(Lond) MA (Business Law)*
*Bar-at-Law (Middle Temple)*

## பாரிஸ்டர் செ.யோ.யோசேப்

சொலிசிற்றர் இல்லாமலே நேரடியாக உங்கள் வழக்குகளை ஆராய்ந்து நீதிமன்றத்தில் ஆஜராகஉரிமை பெற்றுள்ளார்.

வழக்கை ஆராய்தல், நீதிமன்றத்தில் வாதாடல் ஆகிய இரண்டையும் ஒருவரே செய்வதால் உங்கள் வழக்குச் செலவு குறைவாகும்

**AREAS OF PRACTICE**

- Immigration and HR Law
- Public Law [Judicial Review]
- Employment Law
- Commercial Law
- Criminal Law
- Family Law
- Landlord and Tenant Law
- Equity and Trust Law
- Company & Partnership Law
- International Trade Law

**பயிற்சி பெற்ற சட்டங்கள்**

- குடிவரவு சட்டம்
- மனித உரிமைகள் சட்டம்
- பொதுச் சட்டம்
- தொழில் சட்டம்
- வர்த்தகச் சட்டம்
- குற்றவியல் சட்டம்
- குடும்பச் சட்டம்
- வாடகைச் சட்டம்
- நம்பிக்கைச் சட்டம்
- கம்பனி பங்காளர் சட்டம்

**BARRISTERS' CHAMBERS OF SEL-JOB JOSEPH**
*39, Hermitage Road, London N4 1LU*
*Tel: 0208 809 3083*
*Mobile 07831 594270*



# தமிழ்க் கல்விக்கூடம் - கேய்ஸ்

# TAMIL KALVIKOODAM - HAYES



## BARNHILL



## வளர்தமிழ் நிலையம்

## VALAR THAMIL NILAYAM

- சிறுவர்நிலை, வளர்நிலை – 1 இல் இருந்து ஆண்டு 12 வரை
- GCE (O/L) Cambridge & Edexcel Board பாடத்திட்டத்திற்கு அமைவானது
- GCE (A/L) Cambridge பாடத்திட்டத்திற்கு அமைவானது

**இடம்**
Barnhill Community Centre
Ayles Road
Hayes, UB4 9HG

தேதி : 11.09.2016
நேரம் : காலை 9.45 மணி

தொடர்புக்கு :
07754184208

## HAIR LOSS ? NOT ANYMORE !

Are you suffering with the following conditions?

FREE CONSULTATIONS

LANDMARK
HAIR REPLACEMENT STUDIO OF LONDON
www.landmarkhair.com

- Thinning Hair
- Male Pattern Balding
- Receding hair line
- Alopecia
- All forms of hair loss conditions are solvable

**STOP HAIR LOSS NOW!**




HARLEY STREET TREATMENTS

MedContour

CHANGING LIVES IN OVER 50 COUNTRIES




Daily Mail 'No.1 Flab Zapper'

www.med-contour.co.uk

## STUBBORN FAT ? NOT ANYMORE !

LONDON
32 - 34 Great Marlborough Street,
London, W1F 7JB
Tel : + 44 (0)20 7734 7113

BRISTOL
21 St Georges Rd,
Bristol, BS1 5UU
Tel: + 44(0) 117 302 0129

TAMIL No
Please call
தமிழில் பேச
07958 670476

LANDMARK

**Puthinam 808457** இந்த விபரங்களை கொண்டு வருபவருக்கு 10% வீதம் சலுகை

இணுவை ச.சிறீரங்கன்

# வாழும் போதே வாழ்த்துவோம்!

# பவள நாயகன் தாசீசியஸ்

நாடக ஆசான், ஊடகவியலாளர், அறிஞர், ஒலிபரப்பாளர் என்ற சொற்பதங்களுக்கு உரியவரான A.C.தாசீசியஸ் அவர்களின் பவளவிழா சென்றவாரம் லண்டனில் சிறப்பாக நடைபெற்றது. களைகட்டிய 'கிறீன் போட்' மண்டபத்தில் தமிழை, தாயகத்தை நேசிக்கும் பல முகங்களைக் கண்டேன். மண்டப வாசலில் வைத்து, மாலை அணிவித்து, உள்ளே அனைவரும் அவரை அழைத்துவந்தனர். 'ஈழக்கூத்தன் ஒற்றை நட்சத்திரம்' என்ற பதாதை, மேடையில் காணப்பட்டது. விழாவை சாம் பிரதீபன் தன் பாணியில், சிறப்பாகத் தொகுத்தளித்தார். வட்ட மேசைகள் வட்ட வட்டமாக மண்டபத்தை அலங்கரித்தன.




தமிழகத்தில் இருந்து வந்த பேராசிரியர் அரசு, பிரபல ஓவியர் மருது ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர். திரு. சத்தியேந்திரா, டாக்டர் நித்தி, திரு.மு.நித்தியானந்தன் ஆகியோரை முன்வரிசையில் கண்டேன். விழாநாயகனுடன் இணைந்து பணியாற்றியோர், அவரை நன்கறிந்தோர், அவருடன் ஐக்கியப்பட்டோர், அவரைப்பற்றி தெரிந்தோர், உணர்ந்தோர் என வந்திருந்தோர் முகங்களில் ஓர்வித பிரகாசம்! இப்படிப்பட்டோரைத்தான் 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்று பாரதிதாசன் கூறினாரோ? தாசீசியஸ் மாஸ்டர் மட்டுமல்ல, விழாக் காணவந்தோர் எல்லோருமே பாராட்டுக்குரியோர் என்றால் அது மிகையல்ல.

ஒவ்வொருவராகப் பேச அழைக்கப்பட்டோர் அறிஞருடனான தொடர்பையும், அவரது திறமையையும் மெச்சினார்கள். ஒருவரின் பேச்சு முடிய, நாட்டுக்கூத்து வடிவத்தில் மாஸ்டர் பெருமையை, சாதனையை மிகத் துல்லியமாகவும், நேர்த்தியாகவும், சுவிஸ் நாட்டு, லண்டன் கலைஞர்கள் ஆடிக்காண்பித்தமை மிக ரசனையை ஏற்படுத்திற்று.



பேச்சுக்களிடையே நாட்டுக்கூத்துக் கலையையும் புகுத்தி, மிளிர விட்டமை, 'ஆகா அற்புதம்', 'இது புதுவிதம்' என்று என்மனம் எனக்கு கட்டியம் கூறியது. இந்த விழா அமைப்பினரை எப்படிப் பாராட்டுவதென்பது தெரியவில்லை. குறிப்பாக 'களரி' நாடகக் குழுவினரை என்ன கூறிப்பாராட்டினாலும் தகும்.

### பவளவிழா மலர் - ஓர் களஞ்சியம்

மலரைத் திறந்ததும், 'காணிக்கை'யில் கண்கள் நிலைபதிக்கின்றன.

"மண்ணின் கலைவேர்களைக் காலாகாலமாகக் காத்துவந்த புலவர்கள், அண்ணாவிமார், நாடகர்கள், கலைஞர்கள் அனைவருக்கும், தமிழரின் அடிப்படை உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தோர்க்கும், மறுமலர்ச்சியை உருவாக்கிய யாழ் நாடக அரங்கக் கல்லூரிக்கும், புலத்தில் கலைகளைக் காபாற்றும் கலைஞர்களுக்கும் இந்நூல் காணிக்கை" என்ற காணிக்கையின் சாறு மிகச்சுவை. 670 பக்கங்களைக் கொண்ட இம்மலரின் மணமோ நறுமணம். ஒவ்வோர் கட்டுரையும் வாடாமலரே! அந்தளவுக்கு இம்மலர் சுகந்தம் வீசுகிறது. "தாசீசியஸ் இலங்கைக் கூத்து மரபினை, பேரா.வித்தியானந்தனுக்குப்பிறகு மீட்டுருவச் செய்வதில் முக்கியமானவர். தமிழ் நாடகக்கூத்து மரபின் நாடக வலுவையும், அதன் ஆழத்தையும் புத்துருவாக்க முறையில் எடுத்துக்காட்டி, தமிழ், சிங்கள நாடக அரங்கை சிலிர்க்க வைத்தவர்" என்ற பேரா.சிவத்தம்பியின் கட்டுரைத் தொடக்கம், மலரை ஒவ்வொன்றாகப் புரட்டவைக்கிறது. பிரசுரிக்கப்பட்ட 28 கட்டுரை மலர்களையும் உறிஞ்சிக் குடித்த வண்டாக மாறிநின்றேன்.

அறிஞர்களின் பதிவுகள், அரங்க ஆற்றுகை அனுபவங்கள், நேர்காணல்கள், பேச்சுக்கள், எழுத்துக்கள், ஈழக்கூத்தன் பாடல்கள், நாடகப்பனுவல்கள் என்று வகுத்திருந்தனர். இதைத் தேடல், திரட்டல், தொகுத்தல் என்ற மூன்று அம்சங்களையும் ஒருங்கிணைப்புச் செய்த திரு.பொன்ராசா அன்ரன் என்ற மதிநுட்பவியலாளரைப் பாராட்டி, தோள்தட்டி, கைகொட்டுகின்றேன்.

### தாசீசியஸ் அவர்களின் அரும்பண்பு

ஏனைய நாடக அமைப்புகளைச் சேர்ந்தவர்களை, இப்பவளவிழா மலரில், தாசீசியஸ் குறிப்பிட்டிருப்பது, அவரின் உயர்பண்பைச் சுட்டி நிற்கின்றது.

அவைக்காற்றுக் கழகத்தைச் சார்ந்த திரு.பாலேந்திரா பற்றி நேர்காணல் ஒன்றில் கூறுகையில், "பாலேந்திரா ஓர் பெருங்கலைஞன். பெரிய நாடகங்களில் தொடர்ச்சியாகத் தன்னை அர்ப்பணிப்புடன் பாலேந்திரா ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்" என்ற வரிகளைப்படித்தபோது, தாசீசியஸ் என் மனதில், கழுகுபோல் நீள் மரமாய் நீண்டுயர்ந்தார். இப்படிப்பலரைச் சிறக்கச் செய்த A.C.தாசீசியஸ் அவர்களின் நேர்காணல் பதிவுகள் இம்மலரை, விரிந்த அழகிய தாமரையாய் ஆக்கியுள்ளன. இன்னொரு இடத்தில், "எந்தப் பெரிய கலைஞன், இந்த மௌனகுரு" என்று பேரா.மௌனகுருவைக் குறிப்பிட்டிருக்கிறார். "கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் பின்னணியிலிருந்து வந்தவர்தான் இன்னொரு கலைஞன் குழந்தை சண்முகலிங்கம்" என்று குறிப்பிட்டு, "சாதனைகளுக்கு நான் மட்டுமல்ல, குழந்தை சண்முகலிங்கமும் காரணமே" என்று பிறிதொரு கேள்விக்குப்பதில் கூறிய தாசீசியஸ் அவர்களை உண்மை விளம்பியாக நான் பார்த்தேன்.

பல நாடக எழுத்தாளர்களை மட்டுமன்றி, புலம்பெயர் - தாயகப் பத்திரிகையாளர் பலரையும் தாசீசியஸ் இம்மலர் தோட்டத்தில், அழகுபடுத்திக் கூறியுள்ளார். BBC, IBC தொடர்பை பலர் இதில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரபல நாடகவிலாளரான 'மெர்கன்டைர்' தொடர்பைக் குறிப்பிட்டு, முதலில் நாடக அரங்கில், திரைச் சீலை இறக்கும் வேலையே. தனக்கு தரப்பட்டதாகவும், அதனைக்களிப்போடு பயின்றதாகவும், தாசீசியஸ் கூறியிருக்கின்றார். இவ்வரிகளைப் படித்தபோது, மகாகவி சேக்ஸ்பியர் அவர்களும் நாடகக் கொம்பனியொன்றில், ஆரம்பத்தில் அங்கு வருவோரின் குதிரை வண்டிகளுக்கு, பாதுகாக்கும் சேவகனாகத் தொழிற்பட்ட சம்பவத்தை நான் நினைவு கூர்ந்தேன். 'மெர்கன்டைர்' என்றும் தனது வழிகாட்டி என்பதையும், இவர் குறிப்பிடத் தவறவில்லை. கண்டிய நடனத்தைப் பலமாதங்கள் பயின்றதையும், சிங்கள நாடகவியலாளருடனும், வெளிநாட்டு நாடக அறிஞர்களுடனும் ஒன்றி, பரஸ்பர நுட்பங்களைப் பரிமாறிக்கொண்டதையும் அறிஞர் தாசீ தெரிவித்திருக்கின்றார். பிரபல விமர்சகரும், அறிஞருமான திரு.மு.நித்தியானந்தன் அழகாக எடுத்தியம்பி, நூலைச் சிறப்பித்தார். IBC வானொலித் தோற்றுவிப்பாளரான தாசீ மாஸ்டர், தமிழின் உயர்வில் மாபெரும் சிகரம்! அவர் நெடுங்காலம் வாழ்க! பவளமலர் படிக்கப்படிக்கத் தித்திக்கின்றது. இம்மலர் ஓர் கலைப் பொக்கிசமாகும்.

டாக்டர் ஸ்ரீதரன்

# உள்ளத்தை மறந்த உடல்கள்

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்காக- தமிழர்களால் தமிழிலேயே நடாத்தப்படும் பெரும்பாலான வானொலி நிகழ்ச்சிகளில் - பத்திரிகைகளில் - தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இன்று தவறாது இடம் பெறும் ஒரு விடயம் - மருத்துவம். நம்மவர்களும் இவற்றை உன்னிப்பாகக் கேட்கிறார்கள் - படிக்கிறார்கள்- பார்க்கிறார்கள். இவர்களின் பேச்சில் செய்கையில் இந்த மருத்துவ அறிவுரைகளின் பிரதிபலிப்புகள்.

"ஐயோ *Aunty*! ஏன் இந்த நண்டு - இறால் எல்லாம் வாங்குகிறீர்கள்? சரியான கொலஸ்ட்ரோல்" எச்சரிக்கிறது ஒரு குரல்!

"அக்கா! இந்த நல்லெண்ணையை - விட ஒலிவ் ஒயில் தானாம் *Heart*க்கு நல்லது" புத்தி கூறுகிறது இன்னொரு குரல்!

"மாமி! இவருக்கும் இந்த வருடத்துடன் நாற்பது வயதாகிறது- நாங்கள் இப்பொழுது *red meat* சாப்பிடுவதேயில்லை- சாப்பாட்டில் சரியான கவனம்" - போதிக்கிறது வேறொரு குரல்!

ஆஹா!ஆஹா! என்ன அறிவு! என்ன ஞானம்! எவ்வளவு புத்திசாலிகள்! எவ்வளவு சுகதேகிகள்!

ஆனால், ஒரு நிமிடம் உன்னிப்பாகக் கேட்டால்- தீர்க்கமாக அவதானித்தால் - எங்கோ - ஏதோ ஒரு இடத்தில் அபஸ்வரம் கேட்கிறதே! தப்புத்தாளம் விழுகிறதே!

"இளவயதில் ஏற்படும் மாரடைப்பு நோய் இன்று வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் பலரைப் பாதிக்கிறது"- மருத்துவ ஆராய்ச்சிகளின் ஏகோபித்த முடிவுகளில் இதுவும் ஒன்று.

எப்படிச் சாத்தியமாகும் இது? எங்கு நடக்கிறது தவறு? ஏன் நடக்கிறது இப்படி? இந்த அலசல் பதில் தேட முயல்கிறது.

பிக்கல்களும் பிடுங்கல்களும் நிறைந்த வீட்டிலிருந்து - மனக்கசப்புடனும் விரக்தியுடனும் அலுவலகம் செல்லும் ஒருவனால் - மகிழ்ச்சியாக -உல்லாசமாக வேலை செய்ய முடியாது. அலுவலக நிர்வாகம் எவ்வளவு சிறப்பாக இருந்தாலும்- அலுவலக கட்டடங்கள் எவ்வளவு நாகரீகமாக நிர்மாணிக்கப்பட்டிருந்தாலும் - அலுவலக தளபாடங்கள் எவ்வளவு சொகுசாக அமைக்கப்பட்டிருந்தாலும் - வீட்டிலிருந்து சோக மூட்டையை காவி வரும் ஒருவனால் அலுவலகத்தில் ஒரு போதும் சீராக வேலை செய்ய முடியாதது மட்டுமன்றி பாதிக்கப்பட்டவனின் மனக் கசப்பும் விரக்தியும் அலுவலகத்திலிருக்கும் மற்றவர்களையும் சிறிது சிறிதாக பற்றிக் கொள்ள ஆரம்பிக்கும். அன்றாடம் நாம் பார்க்கும் விடயம் இது.

இதுபோலவே - தேவையற்ற போட்டிகளும் - அநாவசியமான விதிமுறைகளும் - துல்லியமான பாரபட்ச மனப்பான்மைகளும் மலிந்திருக்கும் அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவன் - அதி நவீன காரில் வேலையிலிருந்தும் வீட்டிற்கு திரும்பி வந்தாலும் - வீட்டு அலங்காரங்கள் எவ்வளவு சிறப்பாக அமைந்திருந்தாலும் - விலை உயர்ந்த ஆடம்பரப் பொருட்கள் வீட்டை நிறைத்திருந்தாலும் - அலுவலகத்திலிருந்தும் அழுக்கு மூட்டையை காவி வரும் ஒருவனால் - வீட்டில் ஒரு போதும் மனைவி மக்களுடன் மனதார ஒட்டி உறவாட முடியாதது மட்டுமன்றி - பாதிக்கப்பட்டவனின் மனக் கசப்பும் விரக்தியும் வீட்டிலிருக்கும் மற்றவர்களையும் சிறிது சிறிதாகப் பற்றிக் கொள்ள ஆரம்பிக்கும். அன்றாடம் நாம் பார்க்கும் விடயம் இது.

நமது அலுவலக வாழ்க்கையும் வீட்டு வாழ்க்கையும் எப்படி ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றனவோ - எப்படி ஒன்றில் உருவாகுவது மற்றதிற்குச் சென்று அதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதோ- எப்படி ஒன்றின் நிகழ்காலம் மற்றொன்றின் எதிர்காலமாக



மாறுகின்றதோ - அது போலவே- அப்படியே - மனித உடலும் மனித மனமும் - ஒன்றை ஒன்று சார்ந்திருக்கும்- ஒன்றை ஒன்று பாதிக்கும் - மனிதன் என்னும் ஒரு முழுமையின் இரு வேறுபரிமாணங்கள்.

கடந்த காலத்தில் - தகுந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படாத நிலையில் - உடல் வேறு - உள்ளம் வேறு - இரண்டுமே இரு வேறு தன்மைகள்- என்று கூறு போட்டு விதி வகுத்திருந்த மருத்துவ விஞ்ஞானம் - இந்த அரைகுறைக் கோட்பாட்டை கைவிட்டு இப்பொழுது பல வருடங்களாகின்றன.

எத்தனை எத்தனையோ ஆராய்ச்சிகள் - யார் யாருடையோ தேடல்கள் - எங்கெங்கோ விலக்கப்பட்ட இருள்கள் - இன்று ஏக மனதாகக் கூறும் ஒரு விடயம்

மனித உடலும் - மனித மனமும் - மனிதன் என்னும் சமுத்திரத்தின் இரு வேறு கரைகள். இந்தக் கரைகளுக்கு இடையில் தான் மனித வாழ்க்கை பரிணமிக்கிறது. இரு கரைகளும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன - ஒன்றை ஒன்று பாதிக்கின்றன.

உடல் என்னும் ஒரு கரையில் ஏற்படும் உபாதைகள் - உள்ளம் என்ற மறு கரையைத் தாக்குகின்றன என்று சொல்லித்தான் நமக்குத் தெரிய வேண்டியதில்லை. தலையில் வலி ஏற்பட்டதும்- வயிற்றில் அஜீரணம் தோன்றியதும் - நெஞ்சில் சளி அடைத்ததும் - சீறிச் சினப்பதும் - பொரிந்து தள்ளுவதும் - எரிந்து விழுவதும் நமக்கொன்றும் புதிதல்ல.

ஆனால் - ஒன்றும் ஒன்றும் இரண்டு - என்று வெகுவேகமாகக் கூறும் நமக்கு இரண்டிலிருந்து ஒன்றுபோனால் மிகுதி ஒன்று- என்று கூறுவதற்கு சிரமமாக இருக்கிறது - நம்ப முடியாமல் இருக்கிறது - சந்தேகம் வேறு தோன்றுகிறது.

உள்ளத்தில் ஏற்படும் உபாதைகள் - ஊனங்கள் - உடலைத் தாக்குவதை நாம் நம்ப மறுப்பதால்தான்- அதைக் கருத்தில் கொள்ள மறுப்பதால்தான் - இங்குள்ள நம்மவர்கள் பலரின் வாழ்வில் இன்று அந்த அபஸ்வரம் கேட்கிறது - தப்புத்தாளம் விழுகிறது.

"இலண்டனில் பிறந்து வளரும் எனது பேரனுக்கு ஒரு சொல் தமிழ் தெரியாது - ஒரு தேவாரம் தெரியாது - ஒரு திருக்குறள் தெரியாது - என்ன வளர்ப்பு இது? என்ன வாழ்க்கை இது. இவை எதுவுமே தெரியாமல் இதுகளெல்லாம் வருங்காலத்தில் எப்படி வாழ்க்கை நடத்தப் போகிறதுகள்?"- எப்படி எப்படியோ வாழப்போகும் - யார் யாருடையோ வாழ்க்கையை எண்ணி- உத்தரவாதம் எதுவுமில்லாத வருங்காலத்தை நினைத்து - இரவு பகலாகக் கவலைப்பட்டுக் கொண்டு- மனம் புழுங்கிக் கொண்டு - இரத்த அழுத்தத்தைக் குறைப்பதற்காக அன்றாடம் அரை டசின் மாத்திரைகளை விழுங்கிவிட்டு - எனது உடல் நலத்தில் நான் சரியான கவனம்- என்று பிதற்றுவதில் எது வித அர்த்தமுமில்லை.

"கேம்பிரிட்ஜில் வசிக்கும் எனது மகனும் மருமகளும் கந்தசஷ்டி விரதம் படிப்பதில்லை - சனியனுக்கு புரட்டாசியில் எதுவுமே எரிப்பதில்லை - நவராத்திரியில் பூஜை நடாத்துவதில்லை - இதற்கெல்லாம் அந்தத் தெய்வம் இதுகளுக்கு என்ன தண்டனை கொடுக்கப் போகிறதோ?" -ஒரு கப்பம் வசூலிப்பவனைப் பார்த்துப் பயப்படுவதுபோல படைத்தவனைப் பார்த்துப் பயந்து கொண்டு - இந்தப் பயத்தால் ஓடிப்போன தூக்கத்தை மீண்டும் வரவழைப்பதற்காக தூக்க மாத்திரைகளை விழுங்கிவிட்டு - எனது உடல் நலத்தில் நான் சரியான கவனம் - என்று பிதற்றுவதில் எது வித அர்த்தமில்லை.

"என்னுடன் ஒன்றாகப் படித்தவன் - என்னை விட படிப்பில் மட்டமானவன் - என்னிடமே கேட்டுப் படித்து பரீட்சையில் சித்தி அடைந்தவனின் மகன் இன்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் கற்கிறான்! எனது மகனுக்காக - எவ்வளவு பணம் டியூஷனுக்குச் செலவழித்திருப்பேன்- அவன் படிப்பதற்காக எத்தனை நாள் அலுவலகத்திற்கு நான் லீவு போட்டிருப்பேன் - அந்தப் பிள்ளையாருக்கு எத்தனை அபிஷேகங்கள் நடாத்தியிருக்கிறேன். ஆனால், இன்று எனது மகன் இலண்டனில் உள்ள ஒரு உதவாத பல்கலைக்கழகத்தில்- ஒன்றுக்கும் உதவாத ஒரு மண்ணாங்கட்டி படிப்பு படிக்கிறான்" என்று அர்த்தமற்ற போட்டிகளாலும் தேவையற்ற பொறாமைகளினாலும் மனம் வெந்து கொண்டு - நீரிழிவு நோயைத் தடுப்பதற்காக சீனியில்லாமல் தேநீர் அருந்துவதில் எது வித அர்த்தமுமில்லை.

கணவனின் ஊதியத்தை - தகுதிகளை - கருத்தில் கொள்ளாமல் - ஆனந்தியின் கழுத்தில் அட்டியல் ஜொலிக்கிறது - நிர்மலாவின் காரில் குளிர்சாதனம் சில்லிடுகிறது - சந்திராவின் சுவரில் டி.வி பளபளக்கிறது - நமது வீட்டிலும் இவையெல்லாம் வேண்டும் என்று அந்த உயிரினத்தை இரவு பகலாக நச்சரித்து விட்டு - தொட்டதற்கெல்லாம் பொரிந்து தள்ளி விட்டு - பார்க்கும் போதெல்லாம் சினந்து விட்டு - *Aunty*! என்னுடைய இவருக்கு நான் கொலஸ்ட்ரோல் உள்ள சாப்பாடுகள் கொடுப்பதேயில்லை - ஒலிவ் *Oil* தவிர வேறெந்த *Oil*ம் சாப்பாட்டிற்குப் பாவிப்பதில்லை என்று பிதற்றித் திரிவதில் அர்த்தமேயில்லை.

குரங்கிற்கு கள்ளைக் கொடுத்து - அதன் கையில் தடியையும் கொடுத்தால் பார்க்குமிடமெல்லாம் அழிவு. இந்த அழிவுக்கு மூல காரணம் கள்ளுமல்ல - தடியுமல்ல. குரங்கின் புத்தியே அழிவின் அடிப்படை. இது எப்படி நியாயப்படுத்தப்படுகிறதெனில் - அதே கள்ளும் அதே தடியும் ஒரு முதிர்ந்த ஞானியிடம் சென்றடையும் போது விளைவுகள் முற்றிலும் வேறானவை. இந்த வேறுபாட்டிற்கு மூல காரணம் ஞானியின் பக்குவம்.

நமது இனத்தின் - நமது சமூகத்தின் பெரும்பாலான உடல் கோளாறுகளின் - உபாதைகளின் மூல காரணம் - ஆதிமூலம் - நமது மனம். அந்த மனத்தினால் தான் பல சந்தர்ப்பங்களில் நமது உடல் கெடுகிறது - அங்கிருந்துதான் பெரும்பாலும் கோளாறுகள் உடலுக்கு பரவுகின்றன.

அர்த்தமற்ற போட்டிகள் - பொறாமைகள் - அன்றாடம் போடும் போலி வேடங்கள் - அளவற்ற ஆசைகள் - சாதி மத பாகுபாடுகள் - பித்துக்குளித்தனமான செய்கைகள் - அடுத்தவன் நன்றாக வாழ்வதை பொறுக்காத மனம் - கூட இருப்பவனுக்கு குழி பறிக்கும் குணம் - இப்படியான அக அழுக்குகள் கழுவப்பட்டு - அகம் புனிதமாக இருக்கும் போது - குதூகலித்து நடனமாடும் போது - இங்கு நமக்கு நரையில்லை - பிணியில்லை- மருந்துகளில்லை - மாத்திரைகளில்லை.

உடலை மறந்த உள்ளமும் வாழ்வதில்லை - உள்ளத்தை மறந்த உடலும் வாழ்வதில்லை.

நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களின்

போர்வைகளற்ற நிர்வாணம் இந்த அவதானம்.

அகத்தே மாசில்லாதவனுக்கு நிர்வாணம் ஒரு புனிதம்.

அது ஒரு சத்தியம்.

# "சைவத்தமிழ் வள்ளல்"

## செல்வா அவர்கள்

மலர்வு
02.06.1950



உதிர்வு
11.09.2016

சிந்தை நிறைந்த சீர்மிகு சீலர்
செல்வா அவர்கள் எம்மிடை மறைந்தார்.
சொல்லும் செயலும் ஒன்றாய்த் திகழ்ந்த
வல்லமை மிகுந்த வாய்மொழி யாளர்
இல்பேர்ட் பதியில் அருள்புரி விநாயகர்
ஆலயம் அமைந்து அரும்பணி புரிந்தோன்
ஒன்றியத் தலைவராய் ஓரணி கூட்டி
நன்றுடன் எங்களை நடாத்திய செம்மல்

புலம்பெயர் சிறார்கள் பைந்தமிழ் கலைகளை
நிலை தவறாது கற்றிட வைக்க
ஆலய மேற்தள மண்டபம் தன்னை
நாளும் பொழுதும் நல்கி மகிழ்ந்தவர்

வள்ளுவன் தந்த குறள்தனைப்போற்றி
தெள்ளுதமிழில் அரங்கம் கண்டோன்
தாயகம் தன்னில் எம்மவர் நலன்பெற
ஓயாது தன் குரல்தனைத் தந்தோன்
நாடுகடந்த அரசினில் இணைந்து - ஈழ
நாடுசிறக்க அரும்பணி புரிந்தோன்
நலிந்தோர் நலன்பெற நற்பல திட்டம்
வலிந்த ஆற்றலால் வகைபடச் செய்தோன்
செந்தமிழ் உயர்ந்திட சிறப்புமா நாட்டை
தன்நிதி கொண்டு திறம்படச் செய்தோன்

உலகத் தமிழியல் ஆய்வு நடுவத்தின்
இலக்கினை அடைய அரும்பணி புரிந்தோன்

இடக்கரம் கொடுப்பதை வலக்கரம் அறியா
திடமிகு கருணை உள்ளம் கொண்டோன்

கண்டிடும் போதெலாம் கருத்துடன் வினவி
எண்ணிடும் நெஞ்சினை இனிமையாய் நிறைத்தோன்

மண்ணுல கத்தின் சேவை முடிந்ததாய்
விண்ணுலகடைந்து விரைந்தனன் பணிசெய

அண்ணலே உந்தன் அரும்பெரும் ஆத்மா
விண்ணுல கத்தினில் சாந்தி பெற்றிட
தொல்லை அகற்றும் தொந்தி வயிற்றோன்
செல்வ விநாயகன் கழலடி போற்றுவோம்

பிரித்தானிய
திருக்கோயில்கள் ஒன்றியம்

Designed & Printed @ JR Print, Tel: 0208 503 6643

# வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்)



*நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்*
*நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்*
*திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்*
*செம்மை மாதர் திறம்புவதில்லையாம்.*
\- பாரதி

காங்கேசந்துறை, மாவிட்டிபுரத்தில் குருவீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவியும், கனடாவில் வசித்தவருமான ஈழத்து எழுத்தின் மூத்த பெண் எழுத்தாளர் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்கள் 15-09-2016 ஆம் நாள் எம்மைவிட்டுப்பிரிந்து விட்டார். இவரது மறைவு ஈழத்து இலக்கியத்திற்கு மட்டுமல்ல, கனடிய தமிழ் இலக்கியத்திற்கும் பெரும் இழப்பாகும்.

ஈழத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியையாகக் கடமையாற்றினார். குறமகள் என்ற பெயரில் சிறுகதைத்துறையில் தனக்கென ஓரிடத்தைப் பெற்றிருக்கும் இவரது முதலாவது சிறுகதையான 'போலிக்கௌரவம்' 1955 ஆம் ஆண்டளவில் ஈழகேசரியில் பிரசுரமானது. சிறுகதைகள் மட்டுமன்றி கட்டுரைகள், கவிதைகள் என்பவற்றிலும் இவர் தம் ஆளுமையைக் காட்டியுள்ளார். பெண்களின் சமூக விடுதலைக்கான கருத்துக்களை மையமாகக் கொண்டு எழுதும் இவரது ஆக்கங்கள் ஈழகேசரி, சுதந்திரன், வீரகேசரி, தினகரன், கலைச்செல்வி, வெற்றிமணி, ஆனந்த விகடன், ஆகிய இதழ்களிலும், கனடிய பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன.

ஆசிரியப்பணி, குடும்பப் பொறுப்பு, இலக்கியப்பணி என்று இவரது கடமைகள் விரிந்து சென்றன. இலக்கிய இயக்கங்களுடன் சேர்ந்து சமூகப் பிரக்ஞையுடன் யாழ் இலக்கிய வட்டத்தின் உபதலைவராக இருந்து பல நற்பணிகளை இவர் ஆற்றினார். தனது படைப்புக்களை மட்டுமல்ல, விடுதலைப் போரில் போராளியாக மாறிய கடைசி மகள் ரோசா மாவீரர்களில் ஒருவராகிவிட்ட இழப்பையும் தாங்கிக் கொண்டவர்.

வீரகேசரியில் 'மத்தாப்பு' என்ற குறுநாவலில் மஞ்சள் வர்ணத்தை வைத்து ஒரு அத்தியாயத்தை எழுதியுள்ளார். மாணிக்கம் சஞ்சிகையில் பிரபல எழுத்தாளர்கள் சிலருடன் சேர்ந்து "கடல்தாரகை" என்ற குறுநாவலை எழுதியுள்ளார். 1954 ம் ஆண்டிலிருந்து சிறுகதை, கட்டுரை, கவிதை எனத் தொடங்கிய இவர் எழுத்துலகில் 50 ஆண்டுகளைக் கடந்துள்ளார். யாழ்ப்பாணத்துப் பெண்களின் கல்விப் பாரம்பரியம், குறமகள் கதைகள், உள்ளக்கமலமடி போன்ற நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார். இவர் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் இவரது இலக்கியம் எம்மோடு என்றென்றும் வாழும்.

குரு அரவிந்தன்.

எமது சினிமாத்துறையை வளர்க்க
ஆதரவு தாருங்கள்...!

தாயகத்தில் வேலைவாய்ப்புகளைக் கொடுக்க உதவுங்கள்...!

**Safari Cinema-Harrow**

Sunday 02nd October 2016
13.00 hrs

"எமது 3 தலைமுறை வாழ்க்கையைச் சித்தரிக்கும்"

# அகத்தீ


இது ஒரு மாற்று சினிமா...! நம்மவர் படைப்பு...!

முழுக்க முழுக்க புலம்பெயர் நடிகர்களாலும் தாயக தொழில்
நுட்பவியலாளர்களாலும் உருவான உன்னத சித்திரம்...!
டென்மார்க்–நோர்வே–ஜேர்மனி–சுவிஸ்–பாரிஸ்–லண்டன்
தென் வியட்னாம் ஆகிய நாடுகளிலிருந்து நடிகர்கள் பங்குபற்றியுள்ளனர்...

'அகத்தீ' படத்துடன் இந்தியாவில் தயாரித்த டென்மார்க் சண்ணின்

**"இரு வில்லாழிகள்"**

திரைப்படமும் காண்பிக்கப்படும்



denmarkshan 's
**AKATHTHEE**

**Donation £10** (Children under 12 Free)

## சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில்

# 23வது நூல் அறிமுகவிழா

**தமிழ்த் தொழிற்சங்கவாதி திரு.ஐ.தி.சம்பந்தன் எழுதிய**

'தமிழ் அரசு ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள்' | 'தனிமனித சாதனையாளரின் முத்துவிழா மலர்'

**ஆகிய இரு நூல்களின் அறிமுகவிழா**



இடம் : Trinity Hall, East Avenue,
Manor Park, London E12 6SG (Near
East Ham Tube Station – District Line)
காலை : 15.10.2016 சனிக்கிழமை 4.30 மணிக்கு

| | | |
|---|---|---|
| தலைமை | : | கலாநிதி, பொன் பாலசுந்தரம் (மூத்த பத்திரிகையாளர்) |
| பிரதம விருந்தினர் | : | திரு.இ.சரவணபவன் பா.உ., த.தே.கூட்டமைப்பு (பொருளாதார அபிவிருத்தி பொறுப்பாளர்) |
| மங்கள விளக்கேற்றல் தமிழ் வாழ்த்து | : | திரு.பாலசிங்கம், திருமதி பவானி பாலசிங்கம் |
| ஆசியுரை | : | கபிலை சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள் (பிரதம குருக்கள், இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயம்) |
| வாழ்த்துரை | : | டாக்டர். எஸ். நவரட்ணம் (காப்பாளர், சுடரொளி வெளியீட்டுக் கழகம்) |
| வரவேற்புரை | : | திரு. மாணிக்கம் இந்துசேகரன் (பொதுச் செயலாளர், சைவ முன்னேற்றச் சங்கம்) |
| நூல் அறிமுக உரை | : | திருமதி நவஜோதி யோகரட்ணம் |
| சிற்றுரையும் நூல் வழங்கலும் | : | திரு.வ.இ.இராமநாதன் |
| நூல் ஆய்வுரைகள் | : | திரு.T.சோதிலிங்கம் (ஆய்வாளர்) எஸ்.சிறீரங்கன் |
| மாணவன் பார்வையில் | : | செல்வன் அருணன் ஜெயகுமார் |
| ஊடகவியலாளர் பார்வையில் சிறப்புரை | : | திரு.ஈ.கே.இராஜகோபால் (ஆசிரியர் - புதினம்) திரு. செல்வராஜா (நூலகவியலாளர்) திரு. ப.தவராஜா (குமார்), காரை நலன்புரிச் சங்கம், UK |
| பாமாலை | : | கவிஞர் பாலரவி |
| ஏற்புரை | : | ஆசிரியர் ஐ.தி.சம்பந்தன் |
| நன்றியுரை | : | திரு. V.J.போஸ் |

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

தொடர்புகளுக்கு: சம்பந்தன் 07852 950 089, ஞானம் 07789 037 982 போஸ் 07956 150 580



> பிள்ளைகள் பிறந்ததும் பிள்ளைகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பதினால் கணவன் - மனைவி உறவு அப்படியே காணமல் போய் விடும். பிள்ளைகள் சென்ற பிறகு அந்த உறவை எப்படி சரிக்கட்டுவது என்று தெரியாமல் நிறைய தம்பதியினர் தடுமாறுகிறார்கள்.

# கல்யாண மாலை...

## பிள்ளைகள் மட்டும்தான் வாழ்க்கை இல்லை!

லண்டன் ராஜாத்தி

**வாலிபங்கள் ஓடும் வயதாகக் கூடும்**
**ஆனாலும் அன்பு மாறாதது**
**மாலை இடும் சொந்தம் முடிபோட்ட பந்தம்**
**பிரிவென்ற சொல்லே அறியாதது....**

தமிழ் பாடல் ஒன்றின் அழகான வரிகள். ஆனாலும் என்னவோ தெரியவில்லை அன்பு மட்டும் வெகு சீக்கிரத்திலேயே தணிந்து போகிறது.

திருமணம் என்றால் என்ன என்று கேட்டால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதிலைக் கூறுவார்கள். அதிலும் அநேகரின் பதில் தங்களின் சொந்த அனுபவங்களை வைத்தே இருக்கும். *There is no such thing as a perfect couple or a perfect marriage* என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

திருமண வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் போது அது ஒரு கனவுலகம் என்றே கூற வேண்டும். எல்லோருக்குமே திருமண ஆசை என்பது இருக்கும். அந்த ஆசையோடு சேர்ந்து நிறைய எதிர்பார்ப்புக்கள். இவற்றை எல்லாம் மனதில் மூட்டை கட்டிக் கொண்டுதான் ஒரு ஆணும் பெண்ணும் திருமண பந்தத்திற்குள் நுழைகிறார்கள். ஆசையில் சில நாட்கள், மோகத்தில் சில நாட்கள், ஒருவரை ஒருவர் அறிவதில் சில நாட்கள் என்று காலங்கள் வெகுவேகமாய் ஓடி நாட்களும் வருடங்களாகிவிடும். திடீரென்று அம்மா அப்பா என்று அழைக்க பிள்ளைகள். திருமணம் ஆகும் போது கண்ட கனவுகளும் ஆசைகளும் அப்படியே நசுங்கிப் போக கணவன் ஒருபுறம் மாடாய் உழைக்க மனைவியோ இன்னும் ஒரு பக்கத்தில் போராட இப்படியே திருமண வாழ்க்கை ஒரு போராகி விடுகிறது.



ஒரு நாள் திரும்பி நோக்கும்போது கணவன் ஒரு திக்கில் மனைவி இன்னும் ஒரு திக்கில். நாங்கள் எப்படி ஒன்று சேர்ந்து குடித்தனம் நடத்தினோம் என்று சந்தேகப்படும் அளவுக்கு மனதால் வெகு தூரம் பிரிந்து இருப்பார்கள். இதற்கு என்ன காரணம்? இனிக்க வேண்டிய திருமண வாழ்வு ஏன் ஒரு சில வருடங்களுக்குப் பின்னர் கசக்கிறது? அது ஏன் நம் தமிழ் மக்களின் திருமண வாழ்க்கையில் அன்னியோன்னியத்தை காணவே முடிவதில்லை?

இனியென்ன பிள்ளைகள் பிறந்தாச்சு அவங்கள வளர்த்து விட்டால் சரி என்று சலிப்போடு கணவனும் மனைவியும் ஒரே பல்லவியை பாடிக்கொள்வார்கள். இதுதான் வாழ்க்கையா? கணவன் தனது தந்தையையும் தாயையும் விட்டு தன் மனைவியோடு இசைந்து ஒரே உடலும் உள்ளமுமாய் இருப்பதுதான் இந்தத் திருமண வாழ்க்கை. பிள்ளைகள் அந்த வாழ்க்கையின் ஒரு



பகுதியே தவிர பிள்ளைகள்தான் வாழ்க்கை இல்லை. இதை பலர் உணர்வது இல்லை.

*Soul Mate* - அதாவது ஆத்ம துணை - இது கணவனுக்கு மனைவியும் மனைவிக்கு கணவனுமாக மட்டுமே இருக்க வேண்டும். அப்படி மட்டும் இருந்து விட்டால் வாழ்க்கை நிஜமாகவே சுவைக்கும்.

திருமணம் என்பது விறகு அடுப்புபோல் - அடிக்கடி அதை ஊதி ஊதி நெருப்பு அணையவிடாமல் கவனித்துக் கொள்ளவேண்டும். இந்த அடிக்கடி "ஊதி ஊதி" என்பது என்ன தெரியுமா? சின்ன சின்ன விடயங்களில்தான் இதன் ரகசியமே உள்ளது.

முதலாவது ரகசியம்! ஒன்றிக் கையைப் பற்றி அல்லது கணவனும் மனைவியும் பக்கத்தில் அருகருகே நடந்து செல்ல வேண்டும். நாம் காண்பது கணவன் முன்னே செல்ல மனைவி பின்னே வேகவேகமாய் நடப்பது. பக்கத்தில் நடந்து கொண்டு தோள்களை உரசிக் கொண்டு அரட்டை அடித்தபடியே சென்றுதான் பாருங்களேன்! அதன் சுவையே தனி!

இரண்டாவது ரகசியம்! *Date night* - என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். அதாவது வாரத்துக்கு ஒருமுறை இல்லையேல் மாதத்துக்கு ஒருமுறையாவது கணவனும் மனைவியும் மட்டும் எங்காவது வெளியே சென்று உணவகத்தில் உண்ணுவதோ அல்லது ஒரு பூங்காவில் அமர்ந்து பேசிவிட்டு வருவது போன்றது. இருவரும் வீட்டைவிட்டு வெளியே சென்று தனியே ஒரு இரண்டு மணி நேரம் செலவிடுவது ஒருவரோடு ஒருவர் மனம்விட்டு பேசி மகிழ்வது - இது மிகவும் ஆரோக்கியமான காரியம்! காதலித்த நாட்களை அல்லது திருமணமான புதிதில் கழித்த அந்த நாட்களை மீண்டும் நினைவுக்கு கொண்டு வரும் இந்த *Date night!*

மூன்றாவது ரகசியம்! வெளியே செல்லும் போதும், வேலை விட்டு திரும்பி வந்ததும் மற்றும் படுக்கைக்கு செல்லும் முன்னரும் ஒரு சின்னதொரு அணைப்பு. சீச்சீ நம் கலாச்சாரம் என்ன, நாம் வளர்ந்த விதம் என்ன, நமக்கு பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று நாம் சாக்குபோக்கு சொல்லலாம். ஒரே ஒரு கேள்வி - நம் பிள்ளைகளை வைத்துக்கொண்டு எத்தனை தமிழ் சினிமாக்களை பார்க்கிறோம். அதில் இல்லாத ஆபாசத்தையா நம் பிள்ளைகள் அப்பாவும் அம்மாவும் அன்பை வெளிப்படுத்துவதற்காக அணைப்பதில் காணப் போகிறார்கள்? நம் தமிழ் பிள்ளைகள் அப்பாவும் அம்மாவும் தனித்தனியே ஏனோதானோவென்று வாழும்



ஒரு திருமண வாழ்க்கையைத்தான் காண்கிறார்களே தவிர அப்பாவும் அம்மாவும் அன்னியோன்னியமாய் அன்பை. வெளிப்படுத்தி வாழும் வாழ்க்கையைக் காண்பதில்லை. நாளை இவர்கள் எப்படி தங்களின் திருமண வாழ்க்கையில் அன்பை வெளிப்படுத்துவார்கள்? ஒரு அரவணைப்பிலேயே குடும்பத்தில் உள்ள டென்ஷன் எல்லாம் முடிந்து விடும். வாக்குவாதம் இல்லை, சண்டை இல்லை, சச்சரவு இல்லை, குறைகூறுதல் இல்லை, பழி போடுதல் இல்லை. ஒரு அன்பான அரவணைப்புப் போதுமே உடைந்த உறவுகளை ஒட்டவைக்க!

பிள்ளைகள் பிறந்ததும் பிள்ளைகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பதினால் கணவன் - மனைவி உறவு அப்படியே காணமல் போய் விடும். பிள்ளைகள் சென்ற பிறகு அந்த உறவை எப்படி சரிக்கட்டுவது என்று தெரியாமல் நிறைய தம்பதியினர் தடுமாறுகிறார்கள்.

முதுமையிலும் ஒரு அன்புத் துணை தேவை. சாய்ந்து கொள்ள ஒரு தோள் தேவை. கணவன் - மனைவி உறவு குழந்தை பிறக்கும்வரை இல்லை - கடைசி மூச்சு உள்ளவரை.

காதல் அழகு. திருமணம் அதை விட அழகு. திருமணம் ஆகியும் ஒருவரை ஒருவர் காதலித்துக் கொண்டு இருப்பது கொள்ளை அழகு. திருமண வாழ்க்கை நம் வாழ்வில் ஒரு பெரும் பங்கை வகிக்கிறது. அதன் வெற்றிக்காக கொஞ்சம் போராடுவதில் என்ன தவறு.



ப.வை. ஜெயபாலன்

# "எங்கே போகிறது எங்களின் தாயகம்"

யாழ்ப்பாண மாவட்டம் மதுபான விற்பனையில் முன்னணி மாவட்டமாக உள்ளதாக அரசாங்க புள்ளிவிவர தகவல் உத்தியோக பூர்வமாக தெரிவித்துள்ளது. கல்வியில் முதல் தரமாக திகழ்ந்த யாழ்ப்பாணம் அதிலும் பின்னடைவை தொடர்ந்து கண்டு வருகிறது. குற்றச்செயல்கள் கூடிய மாவட்டங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் காணப்படுவதாகவும் காவற் திணைக்கள குற்றவிவரங்களில் வருடாந்த தொகுப்பு அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

என்ன நடந்தது யாழ்ப்பாணத்துக்கு? ஏன் இந்த சீர்கேடு? எல்லாவற்றுக்கும் இராணுவமும் அரசாங்கமும் தான் காரணம் என்று கூறிவிட முடியுமா? போர்காலத்தில் மட்டுமல்ல, போருக்கு முந்திய காலத்தில் கூட இத்தகைய சீர்கேடுகளை எமது சமூகத்துக்குள் எவராலும் திட்டமிட்டு ஏற்படுத்த முடிந்ததா? கள்ளச்சாராயம், கசிப்பு என்பன கூட மிக மிக சொற்பமாக அங்கொன்று இங்கொன்றாகத்தான் பேசப்பட்டன. கஞ்சா போன்ற போதைப் பொருட்களின் நடமாட்டம் உலவும் சுவடே தெரியாமல் இருந்தது யாழ்ப்பாண மண். இன்று ஆயிரக்கணக்கான கிலோ போதைப் பொருள் ஒரு வீட்டில் வளவாயில் கண்டுபிடிக்கப்பட்டதாக செய்தி. தர்மபுரம் நெற்றலி ஆற்றங்கரையில் போருக்கு முந்திய காலத்தில் சட்ட விரோத கசிப்பு காய்ச்சுதல் இடம் பெற்றது; அண்மையில் தர்மபுரத்தின் அயல் ஊரான சுண்டிக் குளத்தில் பெருமளவு கசிப்பும் காய்ச்சும் உபகரணங்களும் கண்டுபிடிக்கப்பட்டதாக செய்தி.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றெல்லாம் ஆரம்ப வகுப்பிலேயே அறிவுரை வாக்குகளால் வளர்க்கப்பட்ட சமூகம். கல்வியை கண்ணாக கருதி, ஆசிரியர்களை தெய்வமாக போற்றி, முயற்சியால் உயர்ச்சியின் உச்சத்தை கண்டது யாழ்ப்பாணம். சங்கிலியன் எல்லாளன் காலத்திலேயே பண்பாடும், ஆலய வழிபாடும், சமூக நீதியும் யாழ்ப்பாணத்தில் போற்றப்பட்ட வரலாற்றைப் பார்க்கின்றோம். பாலை நிலமான யாழ்ப்பாணத்தை பாணன் ஒருவன் யாழ் இசையை மீட்டி பரிசாகப் பெற்ற நிலம் யாழ்ப்பணம் என்பதும் வரலாறு. "பாலை பரிசு பெற்றாலும் அப்பாலையைப் பச்சை பருத்தி பயன் விளைத்து, வாழத் தொடர்ந்து முயன்றதனால் இன்று வையத்தில் உயர்ந்தது யாழ்ப்பாணம்" என்று கவி வடித்து பெருமை சொன்னார் கவிஞர் மகாகவி. உரிமைப் போரிலும், தமிழ் உணர்விலும் ஒன்றி நின்று உலகின் கண்களையே உறுத்திய மண். இன்றும் கூட வடமாகாண அரசு ஒன்றை தமிழரசுக்கட்சியின் ஆட்சியில் கொண்டுள்ள யாழ்ப்பாணம். இன்று சீர்கேடுகளின் உச்சத்தை தொட்டுள்ள அவலத்துக்கு என்ன காரணம்?

"சம்பாத்தியம், சிக்கனம், சேமிப்பு, சீதனம் என்ற சொற்கள் யாழ்ப்பாணத்தையே அலங்கரித்தது. பேச்சு திருமணம், சமய, சாதி தனித்துவம் பேணல், ஆசாரம், கலாச்சாரம் என்று எல்லாமே வேலிக்கும், தாலிக்கும் உள்ளாக காத்து கடைப்பிடிக்கப்பட்ட பராம்பரியங்களுக்கே உரித்தான மண். "தேச வழமை சட்டம்" என்று சோல்பரி அரசியல் அமைப்பில் யாழ்ப்பாண மண் தனித்துவம் பேணப்படுவதற்காகவே அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டிருந்த பெருமையும் யாழ்ப்பாணத்துக்கு உண்டு. மாற்றாருக்கு காணிகளை விற்பதில், மாற்றுவதிலும் கட்டுப்பாடு. தன் மகளுக்கு சீதனமாக, மகனுக்கு முதிசமாக தன் வீடு, காணி வயல், தோட்ட நிலம் என்பவற்றை வழங்கவும், சீவிய உரித்து காட்டி சீதனம் எழுதுவதன் மூலம் பெற்றோர் சட்ட பூர்வமாக தம் வாழ்நாள் முழுவதும் அந்த வீட்டில் தங்கவும் இந்த சட்டம் வழி அமைத்து கொடுத்தது.


பிறப்பு முதல் இறப்பு வரையான ஒவ்வொரு சமய சம்பிரதாய சடங்குகளும், குடும்பத்தில் மூத்தவர்களுக்கு, உரிமை உறவானவர்களுக்கு, இறந்த உரித்தான சொந்தங்களுக்கு மதிப்பு அளிப்பதையும் அவர்களுக்கு உரிய கடமைகளை அவரவருக்கு உணர்த்துவதற்கும் ஏதுவாகவே அம்சங்களை கொண்டிருந்தன. மூத்தோருக்கு எழும்பி மரியாதை செய்தல், அடக்கமாக இருத்தல், மூத்தோர் வார்த்தைக்கு கட்டுப்படுதல் என்பன எல்லாம் பண்பாடாக பேணப்பட்டது. மூத்தோர் முன்பாக சண்டிக்கட்டு சாரத்தை மடிப்பை கீழே விடுவது, தோள் துண்டை எடுத்து கையில் வைத்துக் கொள்வது என்பன எல்லாம் அண்மைக் காலம் வரை எல்லாம் கடைப்பிடிக்கப்பட்ட பண்பாடுகள்.

இருபது ஆண்டுகளுக்கு பிறகு புலம் பெயர்ந்து நீண்ட இடைவெளியின் பின் தாயகத்தில் தன் சொந்த ஊரைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்துக்கு சென்று வந்து நண்பர் எமது இளைய தலைமுறையின் இன்றைய போக்கு குறித்து மிகுந்த கவலை தெரிவித்தார். மூன்று மாதங்கள் தங்கி நின்றவர். சமூகப் பார்வை கொண்ட கவிஞர். நிலமைகளை விவரித்த ஒவ்வொரு வார்த்தைகளுமே துயரத்தை தோய்த்து கொண்டுதான் உதிர்ந்தன. போட்டிக்கு, வீடு கட்டுவது, வாகனத்தை முதலீடு இன்றியே பைனான்ஸ் செய்து வாங்குவது, கடன் அட்டையில், வங்கியில் ஏராளமாக கடன் பெறுவது என மேலை நாடுகள் போல கடன் கலாசாரத்தில் தாயக மண்ணும் ஊறிவிட்டது என்றார். வீடுகள் பூர்த்தியாக்க பணம் இன்றி அரைகுறையில் நிற்பதும் வாகனங்கள் தவணைப்பணம் கட்டாததால் பறிபோவதும் அதிகம் காணப்படுவதாக தெரிவித்தார். பள்ளிகளுக்கு அருகே போதை பொருள் சிறிதளவு கலந்த பானம் யூஸ் என்ற பெயரில் நடமாடும் வியாபாரிகளால் விற்கப்படுகிறதாம். மூலைக்கடைகளில் கஞ்சா வியாபாரம் சகசமாக நடப்பதாகவும் அறியமுடிகிறது.

ஒரு வீடு நிலையாக பூட்டிக்கிடக்கிறது என்றால் அங்கு விபசாரம் நடப்பதாகத்தான் அர்த்தம் என்று இன்னுமொரு ஓய்வு பெற்ற கல்வியாளர் கவலை தெரிவித்தார். மாணவர் முகத்தில் மது, புகை, விபசாரம், போதை என்பன ஊடுருவி உள்ளதாகவும் குற்றச்செயல்களின் பெருக்கத்துக்கு இவற்றின் நடமாட்டம் எங்கும் அதிகரித்திருப்பதே காரணம் என்றும் கூறப்படுகின்றது.

இளைய சமூகத்துக்கு புத்தி சொல்லப்போன ஒரு இன்றைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் "உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள். எங்களுக்கு எப்படி நடக்க வேண்டும் என்று தெரியும் என்பதே தனக்கு கிடைத்த பதில்" என்றாராம். வடமாகாண அமர்வுகளிலேயே ஆளும் கட்சியாளர்கள் தமக்குள் தர்க்கத்தில் ஈடுபடுவதும் மோதுவதும் ஆளை ஆள் கழுத்தை அறுக்க முயல்வதும் பகிரங்கமாக நடக்கிறது. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்கிறார் இன்னொரு நண்பர். நீண்ட கால நிதித்தேட்டத்தை 83 இனக்கலவரத்தில் இழந்த இன்னொரு நண்பர் ஒரு தொழிற்சாலையை ஐம்பது ஏக்கர் நிலத்தோடு கிளிநொச்சியில் வாங்கினார். இன்று அரசு அங்கீகாரத்துடன் இயங்கும் உற்பத்தி சங்கம் ஒன்று அடாத்தாக அவரது உறுதிக்காணிக்குள் குடியேறி எழும்ப மறுக்கிறது என்பது இன்னுமொரு லண்டன் நண்பரின் விசனம்.

கட்டுமீறி போகும் நிலமைகளை யார் கட்டுப்படுத்துவது? சீர்திருத்த இயக்கங்கள் உருவாகி இவற்றை சீரமைக்குமா? போதைப் பாவனையை ஒழிக்க பதவி ஆசை அற்ற இன்னும் ஒரு மகாத்மா காந்தி எமக்குள் உதயமாவாரா? பிள்ளைகளை வழிநடத்தக் கூடிய முறையில் பெற்றோர் ஒழுக்கத்தை, அடக்கத்தை பேணி முன் மாதிரியாக திகழ முன்வருவார்களா? தாயக விடுதலைக்கு புலம் பெயர் நாடுகளிலும் ஏட்டா போட்டியாக இயக்கங்கள் பணியாற்றுகின்றன. தாயகத்தில் ஒழுக்கம், பண்பாடு கலாச்சார விழுமியங்களோடு, கல்வி மேம்பாடும் கவனப்படுத்தப்பட வேண்டியதே இன்றைய முதன்மை தேவை. புலம் பெயர் தாயக நேச நிறுவனங்கள் இதற்கான பணிகளில் ஈடுபட முன்வருமா? அல்லது தந்தை செல்வா அவர்கள் 1970 பொதுத்தேர்தல் முடிவில் யாழ் செயலக முன்றலில் கூறியதைப்போல ஈழத் தமிழ் இனத்தை இனி கடவுள் தான் காப்பாற்ற வேண்டுமா?



டாக்டர் நவரத்தினம் நினைவுகள்

லண்டன் வைத்தியத் துறையில் பிரபலமானவராகத் திகழ்ந்தாலும், தமிழையும் தாய் மண்ணையும் நெஞ்சில் சுமப்பவர் டாக்டர் சீனிவாசகம் நவரத்தினம். இசையோடு இரண்டறக் கலந்து வாழ்பவர். தமிழ் கலைஞர்களை மதிப்பவர். 'புதினம்' இதழில் இருவருடங்களுக்கு மேலாக தமிழ் கலைஞர்களைப் பற்றிய நினைவுகளை 'ஞாபகம் வருதே' என்ற தலைப்பில் தொடர்ந்து எழுதி வருகிறார்.



டாக்டர் எஸ்.நவரத்தினம்

# ஈழத்து இசைக்குயில் மாதினி சிறீக்கந்தராசா

கேட்போர் மனதைத் தனது இனிமையான குரலால் லயிக்கச் செய்யும் அதே நேரத்தில், தானும் அந்த இசையில் நனைந்து, தமிழோடு கரைந்து, உருகி, இசை வடிவமாகவே மாறிவிடும் ஒரு ஈழத்து இசைக்குயில் லண்டனில் நீண்டகாலமாக சங்கீதத்தோடு வாழ்ந்து வருவது நமக்கெல்லாம் பெருமை தருகிறது.

தமிழீழம் மதிக்கின்ற தமிழறிஞராக வாழ்ந்து லண்டனில் அமரத்துவமடைந்த வித்துவான் க.ந.வேலன் அவர்களின் ஒரே புதல்வி, லண்டனில் வாழும் பல்துறை ஈழத்து அறிஞர், வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசாவின் அன்பான மனைவி மாதினி சிறீக்கந்தராசாவே என் ஞாபகத்துக்கு வந்துள்ள இசைக்குயில்.

இசைமீது தன் மகள் மாதினிக்கு உள்ள ஈடுபாட்டை நன்கு தெரிந்து கொண்ட தந்தையாரும், தாயாரும் அவரது இயற்கையான பாடும் ஆற்றலுக்கு, உரம் சேர்த்தார்கள்.

மறைந்த நாகேஸ்வரி பிரமானந்தா, சரஸ்வதி பாக்கியராஜா ஆகிய இசைக் கலைஞர்களை நான் ஈழத்திலிருந்தே நெருக்கமாகப் பார்த்து, கேட்டு ரசித்திருக்கிறேன். இங்கும் அதே தொடர்பு நீடித்தது. சிவசக்தி சிவனேசனும் பாரதிய வித்தியபவன் மூலம் ஈழத்துக்குப் பெருமை தேடிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த வரிசையில் என் நெஞ்சில் ஈழத்து இசைக் குயிலாக வாழ்ந்து கொண்டிருப்பவர் மாதினி சிறீக்கந்தராசா.

இருபத்து ஐந்து ஆண்டுகள் ஆகியிருக்கலாம். சரியாக எந்த ஆண்டு சொல்ல முடியவில்லை. நான் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு 'தமிழ் டைம்ஸ்' என்.எஸ்.கந்தையா ஏற்பாட்டில், SCOTT நடத்திய நிகழ்ச்சியில் மாதினியின் இசை நிகழ்ச்சி நடந்தது. அங்குதான் அவரது முழுமையான கச்சேரி ஒன்றைக் கேட்டு வியந்தேன். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. குரல் வளம், சுத்தமான தமிழ் உச்சரிப்பு போன்றவைகளோடு 'அற்புதம்' என்று சொல்கின்ற அளவுக்கு கச்சேரியை ரசித்தேன்.

இசைக் கலைஞர்களைப் பற்றி நல்ல தகவல்களை என்னுடன் பகிர்ந்து கொள்வார் மறைந்த பத்மா ஜெயசீலன். தாயக உணர்வோடு, லண்டனில் நீண்ட காலம் வாழ்ந்து மறைந்த ஜெயசீலன் என்ற தமிழீழ உணர்வாளர் ஜெயசீலனின் பார்யார்தான் பத்மா அம்மையார். மாதினியின் இசை ஆற்றலைப் பற்றி என்னோடு பேசினார். "பாட்டா? கேட்டுக்கொண்டே இருக்கலாம். ஈஸ்ற்ஹாம் முருகன் கோயில் மாதினியின் இசை நிகழ்ச்சி நடக்கிறது" என்று என்னிடம் அப்போது கூறினார்.

அந்த நிகழ்ச்சியைச் சென்று பார்த்தேன். அந்த இசை நிகழ்ச்சியும் மிகவும் நன்றாக இருந்தது.

1989 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அமரர் சோ.சிவபாத சுந்தரம், மாதகலான் யோகராஜா ஆகியோர் ஒழுங்கு செய்த முத்துசாமி தீட்சிதரின் நினைவுநாள் நிகழ்ச்சிக்கு லண்டன் அந்த நேரம் இருந்த இசைக் கலைஞர்களையும், இசை ரசிகர்களையும் அழைத்திருந்தார்கள். சரஸ்வதி பாக்கியராஜா, நாகேஸ்வரி பிரமானந்தா, மனோரமா பிரசாத், மாதினி சிறீக்கந்தராசா, டாக்டர் லக்ஷ்மி ஜெயன்,



சோமசுந்தரதேசிகர், ஆர்.என்.பிரகாஷ், முத்து சிவராசா, கிருபாகரன் ஆகியோர் பங்கெடுத்தார்கள். அந்த நிகழ்ச்சியின் சிறப்பு தீட்சிதர் இயற்றிய பூர்வ கல்யாணியில் அமைந்த மகாலக்சுமி என்று தொடங்கும் கீர்த்தனையை எல்லாப் பாடகர்களும் பாடுவதற்கு ஏற்பாடு செய்தார். ஒவ்வொரு பாடகரும் எப்படிப் பாடுகிறார்கள் என்பதை அறிய முடிந்தது. மாதினியும் தனது முத்திரையையும், அங்கு பதித்தார்.

பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சிகளில் அவர் பாடியிருக்கிறார். நடனத்துக்குப் பாடுவது மிகவும் சிரமமானது. இசைக் கச்சேரி செய்வது ஒரு விதம். ஆனால், நர்த்தகியையும், பக்க வாத்தியங்களையும், அனுசரித்து பாடவேண்டும். அவ்விதம் அவர் பாடிய அரங்கேற்றங்கள் பாராட்டத்தக்கவகையில் அமைந்தன என்பதைக் குறிப்பிட வேண்டும்.

சுவிச்சர்லாந்து, ஜெர்மனி, அவுஸ்திரேலியா, கனடா போன்ற வெளி நாடுகளில் நடந்த பரதநாட்டிய அரங்கேற்றங்களிலும் மாதினி பாடியிருக்கிறார். இசைக் கச்சேரிகளையும் ஐரோப்பிய நாடுகளில் நிகழ்த்தியிருக்கிறார்.

"ஐயாக்கண்ணு தேசிகர் எனது முதல் குரு" என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடையும் மாதினியின் ஆரம்பக்கல்வி மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தொடங்கியது. பின், யாழ், வேம்படி, பருத்தித்துறை மெதடிஸ்ற் என்று சென்று, சென்னைப் பல்கலைக்கழகத்தில் B.A. Music (MAIN) அத்தோடு ஆங்கில, தமிழ் மொழி என்பவற்றில் பட்டம் பெற்றார். யாழ் பல்கலைக்கழகத்தில் M.A. பட்டமும் பெற்றார்.

சங்கீதத்தை முறையாகப் பயின்ற தனது ஆசிரியர்களை மறக்காமல் மனதோடு நினைத்திருப்பது மாதினியின் உயர்வான பண்பு. அவர்களை பின்வருமாறு குறிப்பிடுகிறார்:-

ஏ.கே. கருணாகரன், மகாராசபுரம் சந்தானம், கல்யாண கிருஷ்ண பாகவதர், தஞ்சாவூர் கல்யாணராமன், மதுரை செங்கோட்டை நாராயணன், ரி.கே.கோவிந்தராவ், ராஜ்குமார் பாரதி.

கர்நாடக சங்கீத உருப்படிகள், பண்ணிசை பாமாலை, சிவபுராணம், கானச் சிறகு என்ற விடுதலைப் பாடல்கள் ஆகிய C.D.க்களை பாடி வெளியிட்டிருக்கிறார். இவரது பாடல்களில் தாயக உணர்வை ஏற்படுத்துகிற வகையில் விடுதலைப் பாடல்கள் அமைந்துள்ளன. மற்றைய இசைத் தொகுப்புகள் (C.D.) மனதைப் பக்குவப்படுத்தி இறை அருளோடு இரண்டறக் கலக்க வைக்கும் சக்தி கொண்டவை.

"திருவாசகத்தின் நூன்முகமாக விளங்குவது சிவபுராணம். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லவேண்டும் என்பார் மாணிக்கவாசகனார். சொல்லிய பாட்டின் பொருளை உணர்வதற்கு எளியவழி தீங்குரலால் இசை அமைத்துப்பாடுதல். அப்படிப் பாட்டின் பொருளை உணர்ந்து, சொல் விளங்க பாடுகின்ற திறம் எல்லோர்க்கும் வாய்ப்பது அரிது. திருவாசகத்தைப் பாடும்போது தான் வேறு, திருவாசகம் வேறு என்று தோன்றாமல் பாடுவது இறையருளால் வாய்ப்பது. சிவபுராணத்துக்குரிய காந்தார இசையைப் பாடுகின்ற ஆற்றல் வாய்ந்த இனிய தீங்குரல் படைத்த இசை அரசியார்தான் மாதினியார். மாதினி சிறீக்கந்தராசா அவர்கள் அழகு ஒழுக இனிமை ததும்ப, பொருள் விளங்கச் சொற்களை அழகுறச் சொல்லிப் பாடியிருக்கின்ற திறத்தை இந்தச் சிவபுராணத்தை ஓதும்போது கேட்டு நான் மெய்சிலிர்த்தேன். மாதினி பாடியிருக்கின்ற இந்த சிவபுராணம், அவர் தான் கலந்து பாடுவதனால், கேட்பவர் ஊன் கலந்து, உயிர் கலந்து, அவர்களை உய்விக்கும்" - இப்படி மாதினியை நெஞ்சாரப் புகழ்ந்துரைத் திருப்பது, தமிழ்நாடு மதிக்கின்ற பேரறிஞர், பேராசிரியர் ஔவை நடராசன் அவர்கள். தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் இவர்.

மாதினி சங்கீதம் பாடும்போது என்னை வெகுவாகக் கவர்ந்தது அவரது குரல். அது சங்கீதத்துக்கு என்று பிரமனால் உருவாக்கப்பட்ட குரலோ என்று நான் அதிசயித்திருக்கிறேன். அந்த மாதிரி எனது கருத்துடன் ஒத்துப்போகக் கூடிய விதத்தில் மகாகவி பாரதியாரின் பேத்தியார் திருமதி லலிதா பாரதி தெரிவித்த கருத்து: "குரலினிமை கடவுள் தந்த வரம். அந்த இனிமையுடன் இசையும் சேர்ந்தால் அது இன்னும் சிறப்பு. அந்தச் சிறப்பு வாய்ந்த குரல் அமையப் பெற்றது மாதினிக்குக் கிடைத்தபேறு. பாடல்களைத் திருத்தமாக உச்சரித்து, பொருளுணர்ந்து, பக்திப் பெருக்குடன் பாடுவதால், காதினிலே இன்பத் தேன் வந்து பாய்கிறது. சொல்லும், பொருளும், இசையும், இனிமையும் இணைந்து மாதினியின் இசை ஆன்மீகத் தேடலுக்கு வழிகாட்டுகிறது" - இதைவிட வேறு என்ன வரிகள் வேண்டும், அவரது குரல் வளத்துக்கு பெருமை சொல்ல!

- தொடர்ச்சி 27ம் பக்கத்தில்

கோகுலன்







# இரட்டையரின் அரங்கப்பிரவேசம்

மிக அண்மையில், செல்விகள் யெசிக்கா நித்தியானந்தும், விஷ்ணியா நித்தியானந்தும் ஆகியோரின் அரங்கேற்றம் மிகவிமரிசையாக, றிக்மன்ஸ்வர்த் 'வாட்டர்சிமெத்' அரங்கில் நடைபெற்றது.



சங்கீத வித்வான் சிறீமதி சிவதாரிணியின் மாணவியான செல்வி யெசிக்காவின் வீணா அரங்கேற்றம் முதலில் இடம்பெற்றது. இதற்குப் பக்கவாத்தியங்களாக, மிருதங்கம் அபிராம் சகாதேவன், கஞ்சிரா பங்களூர் பிரகாஷ், கடம் அருணன் ஞானப்பிரகாசம், தம்புரா செல்வி கபேதினி ஆகியோர் தத்தம் வாத்தியங்களை இசைத்தனர். யெசிக்காவின் வீணையில், அவரின் கைவிரல்கள் லாவகமாக இசைமீட்டியது. ஏறத்தாழ, இரண்டரைமணி நேரம் வரை, வீணாகானம் இடம்பெற்றது. இந்த அரங்கேற்றத்துக்கு தியாகராஜ சுவாமிகள், லால்குடி ஜெயராமன், அம்புஜம் கிருஷ்ணா ஆகியோரால் யாக்கப்பட்ட பாடல்களை, குரு சிவதாரிணி சகோதேவன் தெரிவு செய்திருந்தமை மெச்சத்தக்கதாகும். குரு சிவதாரிணியால் வடிவமைக்கப்பட்ட ராகம் தானம் பல்லவி நிகழ்வில் இசையை மாணவி யெசிக்காவின் விரல்கள் மீட்டிய போது, சபையோர் கரகோஷம் செய்து, ஆர்ப்பரித்தனர். "மரத்தில் மறைந்தது மாமதயானை" என்று திருமந்திரத்தில் கூறப்பட்டதுபோல், தனது குருவில் யெசிக்கா மறைந்து, நிறைந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. சபாஷ் சிவதாரணி! குருவின் வித்துவத் திறமை பளிச்சிட்டது.

இடைவேளைக்குப் பின்னர் நடைபெற்ற விஷ்ணியாவின் இசையரங்கப் பிரவேசம், ஆரம்பத்தில் இருந்தே களைகட்டியது. பிரபல வித்வான்களான பாபநாசம் சிவன், முத்துசாமி, தீட்சிதர், பாலமுரளிகிருஷ்ணா ஆகியோரால் யாக்கப்பட்ட பாடல்களை விஷ்ணியா பாடிய போது, சபையோர் முகங்கள் மகிழ்ச்சியால் மலர்ந்தன். இதை அவர்கள் எழுப்பிய கரகோஷங்கள் உறுதியாக்கின. அருணாச்சல கவிராயரால் அமைக்கப்பட்ட ராகம் தானம் பல்லவி நிகழ்வை, விஷ்ணியா முன்னெடுத்துப்பாடிய போது, இசையின் உச்சிக்கே போய்விட்டார். இவரின் குருவான திருமதி நாகமணி - நாகராயுவைப் பாராட்டவே வேண்டும்.

இந்த அரங்கப்பிரவேச நிகழ்வில் லண்டன் தமிழ் நிலைய அதிபர் திரு.அனந்தசயனன் அவர்களும் ஈலிங்கனகதுர்க்கா அம்மன் ஆலய அறங்காவற் சபைத் தலைவர் திரு.சிறீரங்கன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்குபற்றி பிள்ளைகள் இருவரையும் பாராட்டினார்கள். பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட கலா சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் திருமதி கீதா உபத்யாய பேசுகையில் இப்பிள்ளைகளை இந்தியாவில் இசை நிகழ்வில், பங்குபெற வைப்பதாக குறிப்பிட்டபோது, சபையோர் கைதட்டி, வரவேற்றனர்.

இந்தியாவில் நடக்கும் இசை விழாக்களில் பங்கு கொள்ளக்கூடிய தரத்தில் இந்த இரட்டையர்களின் ஆற்றல் அமைந்துள்ளதாக விழாவில் குறிப்பிட்ட சிறப்பு விருந்தினர் சிறீரங்கனின் கருத்தை ஆமோதித்து, அங்கு நடாத்தப்படும் இசை அரங்கங்களில் அவர்களது கலையம்சம் மிளிரத் தம்மாலானதைச் செய்வேன் என்று பரதநாட்டியத்தில் வல்லுனரான பிரதம விருந்தினர் கீதா உபத்யாய தெரிவித்தார்.





சிறப்பு விருந்தினரான ஈலிங் கனகதுர்க்கை அம்மான் ஆலய அறங்காவர் சபைத் தலைவரும், எழுத்தாளருமான எஸ்.சிறீரங்கன் தமது உரையில், இரட்டையர்களின் இசைத் திறனை வியந்துரைத்து, இளவயதில் இருந்தே அவர்கள் மிக சிறப்போடும் உயர்வோடு, இசையோடு ஈடுபாடு கொண்டுள்ளார்கள் என்றும், பெற்றோரின் ஊக்கத்தையும் பாராட்டியும் பேசினார். உண்மைதான்!

ஈழத்துக்குப் பெருமை தேடிக் கொடுக்க புலம் பெயர்ந்த மண்ணில் இசையோடு இணைந்து வளரும் இளம் சில முத்துக்களில் இவர்களையும் குறிப்பிடலாம்.

தமிழிசை ஏந்தல்
இரத்தினம் நித்தியானந்தன்




# திருச்செந்தூர்

**மலேசியத் திருமுருகன் திருவாக்கு திருபீடத்தின் மூன்றாவது அனைத்துலக முருக பக்தி மாநாடு சமய ஞான வேள்வியாக தென் ஆப்பிரிக்கா டர்பன் நகரில், தவத்திரு. பாலயோகி சுவாமிகளின் அருட்தலைமையில் 5-8-2016 முதல் 7-8-2016 முடிய நடைபெற்ற கருத்தரங்கில் வாசித்தளிக்கப்பட்ட கட்டுரை.**

கோயில் என்றால் தில்லையம்பதி, பெரியபெருமாள் என்றால் திருவரங்கத்து நாயகன். அதுபோலே தமிழ்க்கடவுள் என்றால் செந்தமிழ் முருகனையே குறிக்கும்.

தமிழகத்துப் பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம், தொன்மை, பழமை இவைகளை இன்றைக்கும் வெளிப்படுத்துகின்ற தத்துவ நாயகன்தான் முருகன். தென்குமரி தொட்டு வேங்கடத்திற்கு அப்பாலேயும் அலைகடல் கடந்த நாடுகளிலெல்லாம் உலகம் தழுவி அருட்காட்சி தந்து கொண்டிருக்கிறான் செவ்வேள்.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு வட்டத் தலைநகராக அமைந்துள்ளது திருச்செந்தூர். அலைவாய் என்றும், செந்தில் என்றும் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் திருச்செந்தூர் முருகனது அறுபடை வீடுகளுள் ஒன்றாகும். இக்கோயிலில் பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணனின் (கி.பி. 9ஆம் நூற்றாண்டு) வட்டெழுத்துக் கல்வெட்டுக் காணப்படினும், அது தனிக்கற்களில் பொறிக்கப்பட்டிருப்பதால் அக்காலகட்டத்தில் இக்கோயிலின் கட்டுமானம் செங்கற்களால் அமைக்கப்பட்டிருக்கலாம் என நாம் அனுமானிக்க முடிகிறது. தற்போதைய கோயிற் கட்டுமானம் கி.பி. 18-19ஆம் நூற்றாண்டுக் கட்டடங்களுள் குறிப்பிடத்தக்கது மேலைக்கோபுரமாகும். 153 அடி உயரம் கொண்ட இக்கோபுரம், மொத்தம் 11 தளங்களைக் கொண்டுள்ளது. தரைமட்டத்தில் அமைந்துள்ள கீழ்த்தளமும் (வாயில்நிலை) அதன்மேல் அமைந்துள்ள இரண்டாம் தளமும் முற்றிலும் கருங்கற்களால் அமைக்கப்பட்டவை. இவற்றின் மேல் அமைந்துள்ள ஒன்பது தளங்களும் செங்கல், சுதை, மரம் ஆகியவற்றால் அமைக்கப்பட்டவை.



செப்பேட்டுச்செய்தி

இக்கோபுரம் கட்டப்பட்டது குறித்து திருவாவடுதுறை ஆதினத்தின் வசம் உள்ள ஐந்து செப்பேடுகளில் செய்தி உள்ளது. கி.பி. 1779ஆம் ஆண்டில், திருவாவடுதுறை ஆதினகர்த்தரின் முன்முயற்சியில், பாஞ்சாலங்குறிச்சி ஜெகவீரபாண்டிய கட்டபொம்மன், சாத்தூர் எறாப்ப நாயக்கர், ஏழாயிரம் பண்ணை முத்துசாமி ஆண்டு கொண்டார் ஆகிய பாளையக்காரர்களும், சிவகாசி நாடார்களும், தூத்துக்குடிக்கு அருகிலுள்ள ஏழூர் தட்டாப்பாறை வணிகம் சூழ்ந்த கிராமத்து மகாஜனம் பிள்ளைமார் ஆகியோரும் இக்கோபுரம் எழுப்பிடக் கொடை வழங்கியுள்ளனர் என இச்சேப்பேடுகள் மூலமாக அறிய முடிகிறது.

கோபுரத்தின் பத்தாவது தளத்தின் உட்புறத்தில் சுவர் ஓவியங்கள் உள்ளன. ஓவியங்கள் குறித்த விளக்கங்களும் வண்ணத்தால் எழுதப்பட்டுள்ளன. 1995ஆம் ஆண்டில் கோயில் திருக்குட நன்னீராட்டு நடைபெற்றபோது இவ்வோவியங்கள் சுண்ணாம்பு அடித்து மறைக்கப்பட்டுவிட்டன. சில இடங்களில் சுண்ணாம்பு உதிர்ந்துள்ளதால் ஓவியத்தின் சில பகுதிகளும் எழுத்துக்களும் வெளியில் தெரிகின்றன.

விண்ணுயர்ந்த ஒன்பது கோபுர்த் திருவாயில்கள் கொண்டது. செந்தூரின் திருக்கோபுரத்தின் ஒன்பது நிலைகளும் மனிதனது மலங்களின் ஒன்பது வாயில்களைக் குறிக்கும் என்பர் ஆகமத்துறை சார்ந்த ஆய்வாளர்கள்.

கடலலைகள் தவழுகின்ற கடல் மணற் பரப்பினைத் தாண்டி உள்ள சந்தன மலைகளில் உருவாக்கப்பட்டது இத்திருக்கோயில். எனவேதான் 'கந்தமாதன பர்வதம்' என்றழைப்பர் வடமொழி நூலார்.

விநாயகப் பெருமானை வழிபட்டு மணற்மேட்டில் ஏறிச் சிறிது தூரம் நடந்தால் திருமுருகன் திருக்கோயிலின் நுழைவுவாயில் சேரலாம். நீண்ட அகன்ற மூன்று பிரகாரங்கள்.

தெற்கு வாசலில் உள்ள கணபதியும், கந்தவேள் திருத்தொண்டர் அருணகிரியின் திருவுருவச் சிலையும் வணங்கப்பட வேண்டியவை. தெற்கு வாசல் நெடுங்கதவு எப்போதும் மூடப்பட்டே இருக்கும்.

அடுத்து, மூலவர் திருச்சிலைக்கு வருவதற்குமுன், முதல் பிரகார வளாகத்தின் தென்திசை நோக்கித் தவமிருக்கும் தட்சிணாமூர்த்தி, வள்ளி, நடராஜர், சனீஸ்வரர், பைரவர் என்று வரிசையாக வழிபட்டும் துதித்தும் வருகின்றபோது மத்தியில் பொன் தகடு வேய்ந்த நெடிதுயர்ந்த கொடிமரம் மகாபலி பீடம் ஆகியன காட்சி தரும். அவற்றையும் வணங்கி மூலவர் கருவறை நோக்கிப் போகிறோம்.


தொடர்ச்சி (அடுத்த இதழில் முடியும்)




லண்டன் சட்டத்தரணி அடைக்கலமுத்து இளஞ்செழியன் சமீபத்தில் தாய் நாடு சென்று தமிழ் மக்களை எதிர்நோக்குகின்ற உத்தேச புதிய அரசியல் அமைப்புக் குறித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.


ஏற்பாட்டில்
நூல் விமர்சன ஒன்றுகூடல்
ஏழு கடல்கன்னிகள்
Surbiton Library Hall
Ewell Rd, Surbiton KT6 6AG
(free car park available)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.






சந்திப்பும் கலந்துரையாடலும்
தமிழகம், கர்நாடகம்
காவிரி பிரச்சினை - ஒரு பார்வை
பேராசிரியர். வீ.அரசு
காலம் - 04 ஒக்டோபர் 2016 (செவ்வாய்)
மாலை 6 மணி
Trinity center, East avenue, Eastham, E12 6SL (near the train station - Eastham)
தொடர்பு - 07817262980

# அமரர் டாக்டர் ராஜ் சந்திரன் அவர்களும் வடமாகாண கல்விச் சேவையும்

## ந.சச்சிதானந்தன் ( வடமாகாண கல்வி அபிவிருத்தி அரங்கம் UK )

அமரர் டாக்டர் தம்பித்துரை ராஜ் சந்திரன் மலேசியாவில் பிறந்து கொக்குவிலில் இளவயதில் வாழ்ந்தார். கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்று, மருத்துவக் கல்லூரிக்கு அக்கல்லூரியில் இருந்து சென்ற முதல் மாணவர். டாக்டர் பட்டம் பெற்று, தாய்நாட்டில் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின், லண்டனுக்கு உயர்கல்விக்காக வந்தார். படிப்பை முடித்த பின்னர் இங்கு கடமையில் இருக்கும் பொழுது பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த பெண்மருத்துவர் *Dr.Quidsia* வை காதலித்துத் திருமணம் புரிந்து மூன்று பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். *Dr.Kannan* (பல் மருத்துவர்) *Mr.Ruban*(கணக்காளர்), புதல்வி *Ms.Parosha* (பாரிஸ்டர்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.



தமிழர்களில் மிகுந்த உயர் பதவி வகித்தவர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர். *Gedling* பகுதியில் கவுன்சிலராகவும், நகரபிதாவாகவும் கடமை ஆற்றியுள்ளார். எட்டுவருடங்கள் கமிஷனர் ரேசியல் ஈகுவாலிற்றி- *Commission for Racial Equality* அத்துடன் *Mansfield* பகுதியில் *BMA*யின் தலைவராகவும், *Blize, Germany, Singapore, Cyprus* ஆகிய நாடுகளில் *military* மருத்துவமனைகளில் *Major* ஆகவும் பணிபுரிந்துள்ளார். கொன்சவேட்டிவ் கட்சியில் 20 வருடங்கள் அரசியலில் ஈடுபட்டுள்ளதுடன், *Fellow of Royal Society of Arts, Rotarian, Freemason, Drug Abuse Resistance Education "Dare"*அறக்கட்டளையின் *TRUSTEE* ஆகவும் பணிபுரிந்துள்ளார். தனது 70 ஆவது நிறைவு விழாவின் போது *Tamil Awards* நிகழ்ச்சியினை கோலாகலமாக நடாத்தி தமிழ் சமூகத்தில் முன்னின்று உழைத்தவர்களைக் கௌரவித்துள்ளார்.

மருத்துவர் ராஜ் சந்திரன் அவர்களை 1982-ல் முதன் முதலில் சந்தித்தேன். பின்னர் *TSSA* நடாத்தும் விளையாட்டு நிகழ்வுகள், *SCOT, MIOT*, பழைய மாணவர் சங்கங்கள், அரசியல் கருத்தரங்குகள், கல்யாண வீடுகள், அரங்கேற்றங்கள் ஆகியவற்றில் சந்திப்பது உண்டு.

இவ்வாண்டு ஆரம்பத்தில் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை அவர்களை அழைத்து வடமாகாண கல்வி நிலைபற்றி நடாத்திய கருத்தரங்கிற்கு இவரையும் அழைத்துக் கருத்து வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்திருந்தோம்.

பின்னர் ஏப்ரல் மாதத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் பணிப்பாளர் திரு.இரா.இரவீந்திரன் அவர்களை அழைத்து கருத்தரங்கு ஏற்பாடு செய்த பொழுது ராஜ் சந்திரன் அவர்களும் ஆங்கிலக் கல்வி பற்றி கருத்து வழங்கினார். அதனைத் தொடர்ந்து இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகம் உள்ள தெருவிலுள்ள இவருடைய இல்லத்திற்கு என்னையும், திரு.இராசா இரவீந்திரன், யாழ் பல்கலைக்கழக ஆங்கில கல்வித்துறைப் பொறுப்பாளர் திரு.சிறீ கணேசன், அவர்களுடனும் பொறியியலாளர் திரு.மயில்வாகனம் சூரியசேகரம், திரு சிவபாதசுந்தரம் ஆகியோர்களையும் அழைத்து வடமாகாண கல்வி அபிவிருத்தி அரங்கத்தின் செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடினார். அதன் ஒரு அங்கமாக ஆங்கிலக் கல்வியூட்டலுக்கும் தனது ராஜ சந்திரன் அறக்கட்டளை மூலம் £10,000 நிதி உதவி வழங்க முன்வந்தார். அதற்கு ஏற்ப பிரிட்டிஷ் கவுன்சில் தற்பொழுது ஆங்கிலக் கல்வி புகட்டும் 20 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர்.

ஒரு ஆசிரியருக்கு £500 பவுண்கள் வரை செலவாகின்றது. மேலும் 40 ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் பயிற்சி வழங்கும் ஏற்பாடுகள் பற்றி முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் வடமாகாணத்திலுள்ள ஏனைய 700 ஆங்கில ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிப்பது பற்றியும், நிதி சேர்ப்பது பற்றியும் சிந்தித்து வந்துள்ளார்.

திரு. ராசா ரவீந்திரன் அவர்களுடைய சகோதரனுடைய மகளுடைய அரங்கேற்றத்தில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து வந்திருந்த திரு. ராசா ரவீந்திரன் அவர்களை அரங்கேற்றம் நடைபெறுவதற்கு முன்பாக ராஜ் சந்திரன், கலாநிதி றோஜர் சிறீவாச்ன் மற்றும் நானும் ஒரு அறையில் அமர்ந்து ஆங்கிலக் கல்வி பற்றிக் கலந்துரையாடினோம். மீண்டும் தொடர்ந்து நான்கு நாள்களாக தொலைபேசியில் நிதி சேகரிப்பது பற்றி பல ஆலோசனைகளை தெரிவித்திருந்தார். அவருடைய எண்ணங்கள் நிறைவேறுமுன், இவ்வுலகை விட்டுச் சென்றது எமக்குப் பெரும் இழப்பாகவும் வேதனையாகவும் உள்ளது. அவர் ஆவலுடன் எமது மாணவர்களுக்கு அளிக்க இருந்த கல்வித் தானத்திற்கு சகல மட்டத்திலும் உள்ள தமிழ் சமூகம் ஆதரவு அளிக்க வேண்டும் எனத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

இத்திட்டத்திற்கு ஆதரவு அளிக்க விரும்புவோர்

*Dr Raj Chandran Foundation,*

*HSBC Bank, A/C:81308416 Sort Code:40-32-01* என்ற வங்கிக் கணக்கிற்கு நிதியை அனுப்பி வைக்கும்படி மிகவும் தாழ்மையாக வேண்டிக் கொள்கிறோம்.

---

**Lyca Group Lycamobile**

Call the world for less

# Lycamobile proud sponsor of ZEE London Mela 2016

*LONDON, 05 September:Lycamobile, the world's largest international mobile virtual network operator, is a proud sponsor of ZEE London Mela 2016.*

*Now in its 14th year, and well established as one of the capital's many cultural events, ZEE London Mela is a festival inspired by South Asia and its population within the UK and Europe. The event celebrates Asian culture and creativity and gives emerging artists a platform to showcase their work to a wide audience. This year, audience members included London Mayor Sadiq Khan, the Mayor of Brent and Lycamobile Group Marketing Director Khalid Aziz.*






*This year's event featured a range of different art forms including British Asian urban artists, dance, comedy and cabaret, Asian-influenced street theatre and circus, and many other exhibitions. The event is not just popular with South Asian communities. A third of the audience come from non-Asian communities, making it a truly intercultural family event with something for every generation and every community.*

*This year, Lycamobile's third year sponsoring, was the first time the event took place at Wembley Park and, in addition to British Asian and international artists, featured a mouth-watering 'Tastes of Asia' food market.*

*With such a multicultural event focused on families and communities, two things at the heart of Lycamobile's mission, it was the perfect place to give people the opportunity to learn more about what we do. The Mela featured a number of Lycamobile stalls, which highlighted our many services and offered free SIM cards and top-up facilities.*

*Lyca Group Chairman, Subaskaran Allirajah, said, 'Lycamobile is proud to sponsor the ZEE London Mela for the third year running. Lycamobile and ZEE London Mela share the common goals of bringing families closer together and building stronger communities and the Mela gives London the opportunity to enjoy a rich and vibrant South Asian cultural event.'*

## 3ம் பக்கத்தின் தொடர்ச்சி

சமமாக பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சேர்த்தே அதன் பெயருக்கேற்ப கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

அன்று கூட்டமைப்புக்குள் சம்பந்தனை வன்னி நிர்வாகம் உள்வாங்கியிராவிட்டால் இன்று அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்க மாட்டார். அவ்வேளையில் எம்.ஏ. சுமந்திரன் என்பவர் யார் என்று எவருக்குமே தெரியாது.

காலவோட்டத்தில் 17 ஆண்டுகள் மறைந்துவிட்டதாயினும், வன்னியால் உருவாக்கப்பட்டது என்ற ஒரேயொரு காரணத்துக்காகவே கூட்டமைப்பை மக்கள் தொடர்ந்து வெற்றியடையச் செய்து வருகின்றனர் என்பது தவிர்க்க முடியாதது.

காணி விவகாரம், குடியேற்றம், அரசியல் கைதிகள் விடுதலை, திட்டமிட்ட பௌத்த மயமாக்கல், தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு போன்றவைகளை முன்வைத்தே எழுக தமிழ் பேரணி ஏற்பாடாகியுள்ளது.

புலம்பெயர் தமிழர் வாழும் நாடுகளிலும் தொடரப்போகும் இப்பேரணியின் கட்டிய நிகழ்வாக, அக்டோபர் 1ம் திகதி கனடாவில் தமிழர் செறிந்து வாழும் ரொறன்ரோவில் நடைபெறவுள்ளது.

கூட்டமைப்பின் தோழமைக் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல். எவ், புளொட், ரெலோ ஆகிய மூன்றும் பகிரங்கமாக எழுக தமிழை ஆதரித்து செயலணியில் இடம்பெற்றிருந்தன. தமிழ் காங்கிரஸ் பூரணமாக இதில் பங்கெடுத்தது.

கூட்டமைப்பின் ஏகோபித்த தெரிவான வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், இதன் தலைமைப் பதவியையேற்று நிகழ்வில் பிரதான உரையாற்றினார்.




இப்படியான நிலையில் கூட்டமைப்பின் இன்னொரு கட்சியான தமிழரசு மட்டும் இதற்கு ஆதரவு வழங்காமல், இதனைப் புறக்கணிக்குமாறு தமது ஆதரவாளர்களை எதற்காக இரந்து கேட்டது.

நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அதிகாரபூர்வமாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சிறிதரன் ஆகியோரைச் சந்தித்து அக்கட்சியின் ஆதரவை சில நாட்களுக்கு முன்னர் கோரியிருந்தனர்.

புதிய அரசியலமைப்பில் தமிழருக்கு முழுமையான தீர்வு வருமென நம்புகிறோம். அதனால் இப்போது இப்பேரணி வேண்டாம். பொறுத்திருந்து பார்ப்போம் என்று சுமந்திரன் தமிழரசுக் கட்சியின் கருத்தை வெளிப்படுத்தினார்.

எமக்கான உரிமைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்தாமல் காத்திருந்துவிட்டு ஏமாறச் சொல்கிறீர்களா என்று ஏற்பாட்டாளர்கள் தங்கள் ஆதங்கத்தைத் தெரிவித்தனர்.

ஏற்கனவே அறுபது வருடங்களாக எத்தனையோ தடவைகள் நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம். இன்னொரு தடவை ஏமாற்றப்பட்டால் பரவாயில்லை என்று தெரிவித்துள்ள சுமந்திரன், ஏமாற்றப்பட்ட பின்னர் போராடவேண்டி வருமென்று தமது மேதாவித்தனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

சிங்கள அரசாங்கத்திடம் அடிமைப்பட்டு அவர்களின் எச்சிலை எதிர்பார்த்திருக்கும் ஒருவரால் மட்டுமே இப்படிக் கூற முடியும்.

ஏமாறுபவன் இருக்கும்வரை ஏமாற்றுபவன் இருப்பான் என்னும் மாறாத வழமை, சாதாரண தமிழருக்குத் தெரிந்தளவு சுமந்திரனுக்கும் அவரது தமிழரசுக் கட்சிக்கும் ஏன் தெரியவில்லை?

மௌனம் காத்திருப்போமானால் அரசியல் யாப்பிலும் ஏமாற்றப்படுவோம் என்ற முதலமைச்சரின் தீர்க்கதரிசனத்தை, சிங்களத்தின் சுவீகாரப் பிள்ளைகளாகிவிட்ட தமிழரசுக் கட்சியினரால் ஏற்றுக் கொள்வது கடினமே.

ஏமாறப் போகிறோம் என்பதை நன்கறிந்து கொண்டு அந்த நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தமிழரசுக் கட்சியின் தர்மகர்த்தாக்களை, என்னென்று சொல்வது? என்ன பெயர் கொண்டு அழைக்கலாம்?

எழுக தமிழ் பேரணியின் பெருவெற்றி தமிழரசுக் கட்சியின் முகத்தில் பூசப்பட்ட முதற் கரி. இது இனித் தொடர்கதைதான். •

## 23ம் பக்கத்தின் தொடர்ச்சி

யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரி, கொழும்பு விவேகானந்தா கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராக கடமையாற்றியிருக்கிறார் மாதினி. நைஜீரியாவில் சொக்கட்டோ மாநிலத்தில் 1980ம் ஆண்டிலிருந்து 1986ம் ஆண்டு வரை, ஆறு ஆண்டுகள் ஆசிரிய ப்பிற்சிக் கலாசாலை ஒன்றில், ஆங்கில ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார்.

லண்டனுக்கு 1986 ஆண்டு குடும்பத்துடன் லண்டனில், வாழ்ந்து வருகிறார். அரச சிவில் சேவையில் 30 ஆண்டுகள் பணியாற்றி கடந்த ஏப்ரல் மாதம் ஓய்வு பெற்றார்.

லண்டன் முருகன் கோயில், இல்போர்ட் விநாயகர் ஆலயம் ஆகியவற்றில் சங்கீத வகுப்புகளை நடத்தி வரும் மாதினி லண்டனில் நல்ல பல மாணவர்களை உருவாக்கிவரும் பெருமைக்குரியவர். ஆர்வமுள்ள மாணவர்களுக்கு அரங்கேற்றங்களையும் நடாத்தி வருகிறார்.

சமீபத்தில் லண்டனில் மாதினியின் இசை மாணாக்கர்களான சாகித்தியன் சாகித்தியா சிவபாலனின் அரங்கேற்றத்துக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மகாகவி பாரதியாரின் பூட்டனரான தமிழ்நாடு இசை வித்தகர் ராஜ்குமார் பாரதி தெரிவித்த சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

"இந்தக் குழந்தைகளின் இசை வளர்ச்சிக்கு காரணகர்த்தாவான மாதினி சிறீக்கந்தராசா, தன்னுடைய இசை ஞானத்தை இயலுமான அளவு வழங்கியிருக்கிறார். மாதினி உண்மையான சிரத்தை நிறைந்தவர்; அணைக்க வேண்டிய இடத்தின் அணைத்து, கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்து இந்த இரு மாணவர்களையும் நல்ல நிலைக்கு கொண்டு வந்த மாதினியின் விடாமுயற்சியும், இசைத் தொண்டும் பாராட்டுக்குரியன" என்று ராஜ்குமார் பாரதி குறிப்பிட்டது, மாதினி சிறந்த ஒரு ஆசிரியர் என்பதற்குச் சான்று பகர்கிறது.

பிபிசி தமிழோசையில் இரண்டு ஆண்டுகள் பகுதி நேர ஒலிபரப்பாளராக, பழைய ஐபிசி வானொலியில் ஏழு ஆண்டுகள் உலகக் கண்ணோட்டம் என்ற நிகழ்ச்சி தயாரிப்பாளராக, வித்துவான் வேலன் இலக்கிய வட்டத்தில் உறுப்பினராக மாதினி ஆற்றுகின்ற இசைக்கு அப்பாற்பட்ட பல்துறைகளிலும் பங்கு பற்றுகின்ற ஒருவராகவும் அவரை அறிந்திருக்கிறேன்.

தாய் மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் மதிப்போடு லண்டனில் வாழும் மாதினி, ஈழத்துக்குக் கிடைத்த முத்துக்களில் ஒன்று. •

## லண்டனில் நடந்த

# பூஷணியின் நெஞ்சை உருக்கும் இன்னிசை விருந்து

"ஈசனுக்குத் தொண்டு செய்வது மிகவும் உயர்ந்த பணிகளின் ஒன்றாகும். அந்தவகையில் கீரிமலை நகுலேஸ்வரம் சிவன் ஆலயத்தின் இறுதிக் கட்டமான ராஜகோபுரத்தை நிறைவு செய்யும் உயரிய பணிக்காக இங்கு ஒன்று கூடியுள்ளோம். நமது மண்ணுக்கு பெருமை சேர்க்கும் கலைமாமணி பூஷணி கல்யாணராமனின் இசை விருந்தை இப்போது அனுபவிக்கப்போகிறோம்" என்று பிரபல வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.நவரத்தினம், சமீபத்தில் உயர்வாசற்குன்று முருகன் ஆலய மண்டபத்தில் நடந்த பூஷணி கல்யாணராமனின் இசைக் கச்சேரியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.





ஈழத்தில் பிறந்து, தமிழ்நாட்டில் புகழ்பெற்ற இசைக் கலைஞராக திகழ்ந்து கொண்டிருக்கும் பூஷணியின் நெஞ்சை உருக்கும் இன்னிசை விருந்து இரண்டு மணி நேரம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பூஷணி பாடிய 'எனக்கு வேண்டும் வரங்கள்' பாரதியார் இசைப் பேழை வெளியீடும் நடைபெற்றது.

லண்டனில் வாழும் தமிழகத்தின் பிரபலமான கலைஞர் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி, பூஷணியின் இசையின் மகத்துவத்தைப் பாராட்டினார். இப்படியான ஒரு இனிமையான கச்சேரியை கேட்டதற்குக் கொடுத்து வைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். "மண்டபம் நிறைந்த நல்ல ரசிகர்கள், நல்ல இசையைக் கேட்கக் கூடியிருப்பது மகிழ்ச்சி தருகிறது. டாக்டர் நவரத்தினத்தால் மட்டுமே இதனைச் செய்ய முடியும்" என்றும் காரைக்குடி கூறினார்.



சைவ முன்னேற்ற சங்க ஸ்தாபகர் வி.ஆர். இராமநாதன் பேசுகையில் கடந்த 10 ஆண்டுகளாக நகுலேஸ்வரம் அறக்கட்டளை பணிக்கு பூஷணி பாடி வருவதைக் குறிப்பிட்டு, எல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்றார்.

லண்டனிலிருந்து 40 ஆயிரம் பவுண்கள் வரை அறக்கட்டளை அனுப்பியுள்ளது என்றும், அன்றைய இசை விருந்தின் மூலம் 4 ஆயிரம் பவுண்கள் சேர்க்கப்பட்டதாகவும் டாக்டர் நவரத்தினம் தெரிவித்தார்.

# தாய் மண்ணை அணைக்கும்
# ஈலிங் கனக துர்க்கை அம்மன்

'யாழ்ப்பாணம் அந்த மாதிரி...

A9 பாதையில் வாகனங்கள் பறக்கின்றன.

சொகுசு பஸ் வண்டியில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போனால், கண்மூடித்திறப்பதற்குள் போய்ச் சேர்ந்து விடுகிறோம். அப்படித்தான் திரும்பி வந்து விடுகிறோம். யாழ்தேவி, யாழ்-கொழும்புக்குப் போகுது... வருகுது. ஏசி தழுவலில், அருமையான பயணத்தை அனுபவிக்கிறோம்.'

இங்கிருந்து தாயகம் போய் வருகிறவர்கள் 'எழுந்தமானத்தில்' சொல்லுகிற இப்படியான சங்கதிகளை கேட்டிருப்பீர்கள்.

இவர்கள் எல்லாம் 'மேல் எழுந்த வாரி'யாக சில நாட்கள் தங்கி, 'வெளிப்பூச்சுகளைப் பார்த்துவிட்டு, சொல்லுகின்றவைகள்தான் இவை.

உள்ளே... உள்ளே சென்று பார்த்தால்தான் உண்மை தெரியும். கொஞ்சம் ஊடறுத்துப் பார்க்க வேண்டும். பாதிக்கப்பட்டு, பெற்றவர்களை இழந்து பாதிக்கப்பட்டு, கைவிடப்பட்ட சமூகமொன்று வறுமையோடு போராடிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறபோதுதான் உண்மை புரியும்.

சமீபத்தில், நலிந்து வாழும் தாயக மக்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்து நற்பணிகளைச் செய்யும் லண்டன், ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் நிர்வாக சபைத் தலைவர் சட்டத்தரணி ஆர்.டி.இரத்தினசிங்கம் இலங்கைக்குச் சென்று அங்கு தமது ஆலயம் மூலம் பராமரிக்கப்படும் அநாதை இல்லங்களையும், தர்மஸ்தாபனங்களையும் சென்று பார்வையிட்டார்.

ஆலயத்தின் செலவுகள் தவிர்ந்த, வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறார்களைப் பராமரிப்பதற்காக பயன்படுத்துவது என்ற தீர்மானத்தோடு உயரிய நோக்கத்தைக் கொண்டு செயல்படும் ஒரே ஒரு ஆலயமாகத் திகழும் இக்கோயிலின் தலைவர் தமது பயணத்தில் தாம் அங்கு கண்ட அவலங்களை பகிர்ந்து கொண்டார்.

முன்னதாக எதுவித அறிவித்தலுமின்றி பல அநாதை







முகாம்களுக்குச் சென்றார். அப்படியான ஒன்றுதான் வவுனியா அன்பகம். பத்து வருடங்களாக இயங்குகின்ற இந்த முகாமில் நூற்றி ஐம்பது அநாதை பெண்கள் இருக்கின்றனர். 6 வயதிலிருந்து 19 வயது வரை பெற்றோரை இழந்த இச்சிறார்களைக் கவனிப்பதற்கு பெண் உதவியாளர்கள் அங்கு பணிபுரிகிறார்கள். பெண் துறவி ஒருவர் பொறுப்பாளராக இருக்கிறார். பாடசாலைகளுக்கு செல்வதற்கு உதவியாக பஸ் ஒன்று சொந்தத்தில் இயங்குகிறது. சத்துணவு வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டது.

வவுனியா அன்பகத்துக்கு கட்டடங்கள் இருக்கின்றன.

இதே போன்று மிக நல்ல முறையில் இயங்குகின்ற அகிலாண்டேஸ்வரர் இல்லத்தையும் சென்று பார்த்தேன்.

"50 ஆண் பிள்ளைகள் தனிக்கட்டடத்தில் இருக்கிறார்கள். 150 பெண்கள் இன்னொரு பகுதியில் வாழ்கிறார்கள். வயோதிபர்களுக்கு என்று ஒரு இல்லமும் இயங்குகிறது. இவர்கள் நெருங்கிய உறவினர் இல்லாதவர்கள். நோய்வாய்ப்பட்டு இறுதிக் கிரியைகளைக் கூடச் செய்வதற்கு அங்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என்று குறிப்பிட்ட இரத்தினசிங்கம், நேரில் கண்டவைகளை உணர்வுபூர்வமாகத் தெரியப்படுத்தினார். "பெற்றோரால் கைவிடப்பட்ட ஆறுமாதக் குழந்தைகள் கூட இந்த முகாமில் தஞ்சமடைந்து கவனித்து வருவதைக் கண்டேன். இந்த முகாமில் உள்ள சிறார்களுக்கு கல்வி பாடசாலைகளில் வழங்கப்படுகிறது. இங்கு அநாதையாக சிறுவயது முதல் வளர்ந்த பெண் குழந்தை இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில், மருத்துவ பீடத்தில் இறுதியாண்டில் படித்துக் கொண்டிருப்பதை அறிந்து மகிழ்ந்தேன்" என்று கூறினார்.

வன்னியில் வாழும் பெண்கள் தலைமைத்துவ பொறுப்பை ஏற்று வாழும் வறுமைக்கோட்டுக்குக் கீழானவர்கள் 64 பேருக்கு ஆடு, மாடு, கோழி போன்றவற்றை வீட்டில் வைத்து தமது வாழ்வை வளமாக்குவதற்கு உதவியாக நிதி உதவியை கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் நிதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது. இத்தொகையை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மூலமாக இரத்தினசிங்கம் வழங்க வைத்தார்.

சுண்டிக்குழியில் உள்ள ஜெய்ப்பூர் பொய்க்கால்கள் பொருத்தும் நிலையத்தைச் சென்று பார்த்தார். "அங்கு கால் இழந்தவர்களுக்கு புதுவாழ்வு வழங்கப்படுகிறது. இவர்களுடைய வாழ்வில் ஒளி ஏற்றப்படுவதற்கு தொழில் வசதியைச் செய்து கொடுப்பது முக்கியமானது. ஏற்கனவே இப்படிப் பொய்க்கால் பொருத்தியவர்களுக்கு முச்சக்கர வண்டிகளை வழங்கி உதவியிருக்கிறோம். அவர்களில் சிலர் சுவீப்புக்கள், கச்சான் ஆகியவற்றை விற்பனை செய்து தம் வாழ்க்கையைப் பார்த்துக் கொள்கிறார்கள்" என்று கூறியவர், புதிதாக பொய்க்கால் பொருத்திய 200 பேருக்கு முச்சக்கர வண்டிகளை வழங்கவுள்ளோம். இம்முறை திருவிழாவின் போது சேர்க்கப்பட்ட நிதியிலிருந்து இந்த உதவி வழங்கப்படும்" என்றார்.

நெஞ்சைப் பிழியும் ஒரு சம்பவத்தை அவர் தெரிவித்தார். தோள்களின் கீழே இரண்டு கைகளையும் முழுவதாக இழந்த பெண் ஒருவர் கணனியைக் கால்களால் இயக்குகிறார். தனது வீட்டில் இருந்து கொண்டு, சில பெண்களுக்கும், சிறார்களுக்கும் கணனி சொல்லிக் கொடுக்கிறார். இவரது ஆற்றலைக் கண்டு, ஒரு கம்யூட்டர் நிலையத்தை அங்கு நிறுவி பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கை எடுத்திருப்பதாக சொன்னார். அந்தப் பெண் வாழும், வடமராட்சி கிழக்கு, ஆழியவளை பகுதியில் இந்தக் கம்ப்யூட்டர் நிலையம்









அமையப் போகிறது. நீங்களும் அங்கு போனால், அங்கு போய் வாருங்கள்!

அம்பாறை மாவட்டத்தில், திருக்கோவிலிலிருந்து இருபது கிலோ மீட்டர் சென்றால் உள்ளே கஞ்சிக்குடிச்சாறு என்ற ஒரு மிகப் பின்தங்கிய பகுதி. 200 குடும்பங்கள் மட்டும் தான் வாழ்கின்றன. காலையில் பிரதான வீதியில் இருந்து ஒரு பஸ். மாலையில் ஒரு பஸ். அங்கு போயிருக்கிறார் இரத்தினசிங்கம். யானைகளின் அட்டகாசத்தையும் பொறுத்துக் கொண்டு வாழும் மக்களின் கஷ்டங்களை இரத்தினசிங்கம் நேரில் சென்று அறிந்து கொண்டார். கிழக்கு மாகாண எம்.பி. யோகேஸ்வரனுடன் கலந்தாலோசித்து, அங்குள்ள மக்களுக்கு உதவிகள் வழங்க வேண்டுமென்ற முடிவை எடுத்து, உதவிகளை மேற்கொண்டுள்ளார்.

திருக்கோயிலில் A/L சித்தி பெற்று பல்கலைக்கழகம் போக முடியாமல் இருப்போருக்கு கணனி நிலையத்துக்குச் சென்று பயிற்சி பெறுவதற்கு கம்ப்யூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

"கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூன்று எம்பிக்களான யோகேஸ்வரன், ஸ்ரீநேசன், வியாழேந்திரன் ஆகியோருடன் புதுக்குடியிருப்பு தொழிற்பயிற்சி நிலையத்துக்கு அரசு மாகாண சபை ஆகியவற்றின் உதவியோடு, எங்கள் உதவியையும் வழங்குவது பற்றி கலந்தாலோசித்தோம்.

அத்தோடு கல்வி அதிகாரிகளோடும் கலந்து பேசி, தனிப்பட்ட கல்வி கற்பிக்கும் நிலையமொன்றை கிழக்கு மாகாணத்தில் நடாத்துவது பற்றியும் ஆலோசித்தோம்" என்றார்.

வன்னியில் இராமநாதபுரம் மத்திய மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கு வாங்குகள், கதிரைகள், மற்றும் ஆசிரியர்களுக்கு மேசைகள் கூட இல்லாமல் இருப்பதைப் பார்த்து, உடனடியாக 4 லட்சம் ரூபா அனுப்ப ஏற்பாடு செய்ததாகவும் கூறினார்.

போர் முடிந்து நாடு சகஜ நிலைக்குத் திரும்பிவிட்டதாக அரசு கூறினாலும், நமது மக்கள் வாழ்வு இன்னும் அந்தத் தாக்கத்திலிருந்து மீளவில்லை. அவர்களுக்கு உதவ வேண்டியது, புலம்பெயர்ந்த மக்களின் கடமை.

**- தமிழன்**

# தாய்மண்ணையும் மக்களையும் நேசிக்கும் வவுனியூர் இரா.உதயணன்

## லண்டனில் சிறப்பாக நடந்த நூல் வெளியீடு

"பிறந்து வளர்ந்த தாய் மண்ணையும், தம்மோடு வளர்ந்த மக்களையும் மறக்காதவர். ஊரோடும், உறவோடும் இன்றும் உறவாடிக் கொண்டிருப்பவர். லண்டனில் பல்லாண்டுகளாக வாழ்ந்து வந்தாலும், அந்த மண்ணின் வலிகளையும் சுமைகளையும் தொடர்ந்து எழுத்தில் வடிக்கிறார்" என்று பிரபல லண்டன் சட்டத்தரணி நல்லதம்பி இராசையா, வவுனியூர் இரா. உதயணன் நூல்கள் வெளியீட்டு விழாவில் தலைமை உரை நிகழ்த்தும் போது குறிப்பிட்டார்.

லண்டன் சவுத் விம்பிள்டன் மேட்டன் மண்டபத்தில், 'வலியின் சுமைகள்', 'வன்னி வலிகள்' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமிழோடு ஆங்கிலம், இந்தி, சிங்களம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் இந்நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டிருந்தன.

மண்டபம் நிறைந்த நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சியில், கலை நிகழ்ச்சிகளும், உரைகளும் இடம் பெற்றன.

வன்னி மண்ணுக்குப் பெருமை தேடிக் கொடுக்கும் ஒருவராக லண்டனில் வாழும் அந்த மண்ணின் மைந்தன் பிரசித்தி பெற்ற கணக்காளராக விளங்கினாலும், தனது உழைப்பிலே ஊருக்கும், உறவுகளுக்கும் பங்களிப்பை செய்து கொண்டிருந்தாலும், அதையெல்லாம் விளம்பரப்படுத்தாது, ஆரவாரமில்லாது, அமைதியாக சேவையாற்றுவதே அவரது பண்பு என்று இராசையா மேலும் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்.

யோகா நேசராஜன் தமது வரவேற்புரையில், மிக இள வயதிலிருந்தே எழுதுவதை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார் என்று குறிப்பிட்டார். யோகாவுடன் இணைந்து விஜயகுமார் நிகழ்ச்சிகளைத் தொய்யவிடாது நகர்த்தினார்.

பிரபல ஆய்வாளரும், எழுத்தாளருமான நூலகர் என்.செல்வராஜா, நூலாசிரியர் உதயணனின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறினார்.

மௌலியா சஜீவ்குமார் ஆங்கிலத்தில், உதயணனின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களை ஆய்வு செய்தார்.

சி.எஸ்.ஆனந்தன் பேசுகையில் அனைவருக்கும் இலகுவாகப் புரியக்கூடியவகையில், எளிய இலகு தமிழில் எழுதுவதே உதயணனின் சிறப்பு என்று கூறினார்.







சிறுமியான செல்வி ஆயதி தவராஜகுமார் 'பண்டார வன்னியன்' பற்றி சிறுஉரை நிகழ்த்தி, சபையை சில நிமிட நேரங்கள் கட்டிப் போட்டே விட்டார். அவரே ஆரம்பத்தில் தமிழ் வாழ்த்துப் பாடியும் மகிழ்வித்தார்.

எழுத்தாளர் பசுந்தரா சசியின் பாராட்டுரையும், பசுபதி உதயகுமாரி, விவேகானந்தராஜாவின் பாராட்டுக் கவிதையும் கவர்ந்தது. நிர்மலா விஜயகுமார் 'வன்னி வலிகள்' நூலை அழகாக ஆய்வு செய்தார்.

நூலாசிரியர் உதயணனின் ஆசிரியர்களான வேலுப் பிள்ளை, ஜெய அழகி ஆகியோரும் பேசினார்கள்.

செல்வன் ராம் ஜெகநாதன் வீணை இசையும், செல்விகள் இந்துஜா சிவதாசன், மற்றும் உமையாள் முகுந்தன், மயூரி- நிலானி சிவச்செல்வன் சகோதரிகள் ஆகியோரது நடன நிகழ்ச்சிகளும், செல்வி ருட்சனா ரவீந்திரன் பாட்டும் நடைபெற்றன.

வவுனியூர் இரா.உதயணன் தனக்கு அளிக்கப்பட்ட கௌரவத்துக்காக அனைவருக்கும் நன்றி கூறியதுடன், வன்னியில் பல்லாயிரம் விதவைகள் வாழ்வோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்களுக்கு புலம் பெயர்ந்து வாழும் நாம் உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.






































NW LONDON ACADEMY LTD.
website: www.nwla.co
Email: admin@nwla.co
Government Funded Course
Btec level 3 diploma customer service
Added value
Free Training
இலவசப் பயிற்சி
Bus training
Driver cpc
truck training
Minicab licence
car training
தினமும் Theory வகுப்புகள்
தமிழ் ஆங்கிலம் கலந்த Theory புத்தகம்
இப்போது விற்பனைக்கு உள்ளது
Please Call Us On: 020 8357 0500, 020 8475 8887
OurOffice's
Basedon
Harrow
Eastham Tooting
Leicester Coventry

# LycaFly

**CALL 0207 132 32 32**

lines open **24x7**

## MARKET LEADER FOR COLOMBO

from **£393** incl. taxes



| Baggage | Airline | Price |
|---|---|---|
| 46 kg | Air India | fr £393 |
| 30 kg | Turkish Airlines | fr £398 |
| 35 kg | Jet Airways | fr £416 |
| 46 kg | Kuwait Airways | fr £424 |
| 40 kg | Oman Air | fr £426 |
| 40 kg | Emirates | fr £441 |
| 46 kg | Etihad Airways | fr £443 |
| 40 kg | SriLankan | fr £447 |
| 40 kg | Qatar Airways | fr £463 |


## £20 FREE LYCAMOBILE

CREDIT WHEN YOU BOOK WITH US

### DUBAI HOLIDAY DEALS | INCL. FLIGHTS



**Atlantis The Palm**
Half Board | 3 Nights
fr **£645** pp



**Habtoor Grand**
B&B | 3 Nights
fr **£411** pp



**CityMax**
B&B | 3 Nights
fr **£283** pp

### MALDIVES HOLIDAY DEALS | INCL. FLIGHTS



**Fun Island**
Full Boards | 8 Days
fr **£1082** pp



**Kuredu Island**
All Inclusive | 8 Days
fr **£1290** pp



**Adaaran-Club**
All Inclusive | 8 Days
fr **£1291** pp

200 AIRLINES & 400,000 HOTELS, **PRICE MATCH GUARANTEED!**

**WEMBLEY**
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

**EAST HAM**
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

**CANARY WHARF**
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100

All fares shown above are subject to availability. The Free Lycamobile top-up offer is offered to each fully paid adult return ticket and will not be offered to child/infant and one way tickets. The Lycamobile top-up offer is not valid for selected airlines. The Lycamobile top-up offer is not exchangeable, transferable or redeemable for cash. LycaFly reserves the right to withdraw this offer before the expiry date, without notice.

IATA



4G
Lycamobile
Call the world for less
UK PLAN L
1000
National minutes
Unlimited
National SMS
2GB
Data
Unlimited
calls to Lycamobile UK
Only!
£12
30 days
To activate: Dial
*139*12044#
9p
/min
Sri Lanka
Landline & Mobile
To activate : Text SAVE to 2525
Order your free SIM at www.lycamobile.co.uk
Top-up your SIM online or where you see the following signs:
TESCO Sainsbury's ASDA WHSmith McColl's
Lyca mobile
Call the world for less